# *02.03.2023* வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற ஒத்தி வைக்கப்பட்ட சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**பதுநக.எண். *A5/PPA/WDCN05/10390/2022***
**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *13.01.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:081/2023** **பொருள் எண்.01**

**தானப்பத்திரம்**

மண்டலம்-5ல் Mr. V.C. Thiyagarajan அவர்கள் New Door No.247, Old Door No.118, Suryanarayana Street, Royapuram, Chennai – 600013, R.S.No.3088 part, Block No.47, Tondiarpet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையிடத்தில் PPA/WDCN05/10390/2022 நாள்.31.10.2022ன்படி விண்ணபித்துள்ளார்கள். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 389.46 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணபித்த இடத்திற்கு அணுகு சாலையாக 20.84 மீ அகல Suryanarayana Street அமைய பெற்றுள்ளது. Suryanarayana Street சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் IIன்படி 30.50மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும்.

அதன்படி, Mr. V.C. Thiyagarajan அவர்கள் New Door No.247, Old Door No.118, Suryanarayana Street, Royapuram, Chennai – 600013, R.S.No.3088 part, Block No.47, Tondiarpet Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 51.54 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி 24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.02/2023, நாள்.24.01.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்திற்கிணங்க கள ஆய்வுக்குப் பின்னர் முடிவெடுக்கும் பொருட்டு இதனை நிலைக்குழு (நகரமைப்பு) ஒத்திவைத்தது.

சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் இரண்டின்படி, Suryanarayana Street விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. விண்ணப்பதாரர் அதற்கேற்றவாறு 51.54ச.மீ நிலத்தினை தானமாக தருவதற்கு இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மேலும், தானமாக அளிக்கப்படும் இடத்தில் சாலை அமைக்க தேவையான தொகையினையும் செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

எனவே, மனை உரிமையாளர் Mr. V.C. Thiyagarajan அவர்களிடமிருந்து New Door No.247, Old Door No.118, Suryanarayana Street, Royapuram, Chennai – 600013, R.S.No.3088 part, Block No.47, Tondiarpet Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 51.54 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.12/2023, நாள்.17.02.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ந.து.ந.க.எண்.*A5/PPA/WDCN05/01038/2023***

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *14.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:082/2023** **பொருள் எண்.02**

## தானப்பத்திரம்

மண்டலம்-5ல் Mr. V. Sivagaminathan அவர்கள் Old Door No.91, New Door No.14, Arunachala (N) Street, Chintadripet, Chennai - 600002, R.S.No.574, Block No.10 of Chintadripet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் PPA/WDCN05/01038/2023 நாள்.04.02.2023ன்படி விண்ணபித்துள்ளார்கள். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 237.73சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 13.62 மீ அகலத்தில் Arunachala (N) Street அமைய பெற்றுள்ளது. Arunachala (N) Street சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் IIன் படி 15.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 8.53ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. V. Sivagaminathan அவர்களிடமிருந்து Old Door No.91, New Door No.14, Arunachala (N) Street, Chintadripet, Chennai - 600002, R.S.No.574, Block No.10 of Chintadripet Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 8.53 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.14/2023, நாள்.17.02.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**<u>ந.து.ந.க.எண்.A5/PPA/WDCN13/12060/2022</u>**

**<u>முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.02.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:083/2023** **பொருள் எண்.03**

# <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-13ல், Mrs. M. Vijaya Kawar அவர்கள் Old Door No.40, New No.110 & 111, Dr. Muthulakshmi Salai (Lattice Bridge Road), Adyar, Chennai - 600020, S.No.1/4 part, 1/5 part, T.S.No.16, 17 and 18 of Block No.16, Pallipattu Village-ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் PPA/WDCN13/12060/2022 நாள்.26.12.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 457.62 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 18 மீ அகலத்தில் Dr. Muthulakshmi Salai (Lattice Bridge Road) அமைய பெற்றுள்ளது. Dr. Muthulakshmi Salai (Lattice Bridge Road) சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் IIன் படி 30.50 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 78.62 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. M. Vijaya Kawar அவர்களிடமிருந்து Old Door No.40, New No.110 & 111, Dr. Muthulakshmi Salai (Lattice Bridge Road), Adyar, Chennai - 600020, S.No.1/4 part, 1/5 part, T.S.No.16, 17 and 18 of Block No.16, Pallipattu Village-ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 78.62 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.15/2023, நாள்.17.02.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**பது.ந.க.எண்.டி1/SD/WDCN15/00325/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:084/2023** **பொருள் எண்.04**

## தானப்பத்திரம்

மண்டலம்-15ல், Mr. D.H. Sarath K Kumar, Mr.D.Venkatesh, Mr. D.N. Choudery அவர்கள் KCG College Road, Karapakkam, Chennai, S.No.37/1, 37/2 & 37/3 of Karapakkam Village-ல் அமைந்துள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் D1/SD/WDCN15/00325/2022, நாள்:09.05.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்த பரப்பளவில் சாலைக்கென 621.67 ச.மீ நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில், சாலைக்காக அந்நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி, எடுத்துக்கொள்ள மன்றத்தீர்மானம் பெறப்பட்டது. (மன்றத்தீர்மான எண்.330, நாள் 30.07.2022)

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட சாலைக்கான நிலம் தானமாக பத்திரப் பதிவு செய்யப்பட்டது. (ஆவண எண்.12234 நாள் 21.10.2022) இதையடுத்து உதவி பொறியாளர், கோட்டம் 198, மண்டலம் 15 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் அந்நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே விண்ணப்பதாரர் சமர்ப்பித்ததில் 8 உட்பிரிவுக்குள் ஒப்புதல் வேண்டி திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் விண்ணப்பதாரர்கள் தற்போது, மனைப்பிரிவு வேண்டும் என்று கடிதம் அளித்துள்ளார்கள், தற்பொழுது அளித்த வரைபடத்தின்படி மனைப்பிரிவில் 8க்கு மேல் மனைகள் காட்டப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் அவர்கள் நிலத்தின் மொத்த பரப்பளவு 2300ச.மீ நிலத்தில் சாலைக்கென 621.67ச.மீ நிலம் பெருநகர சென்னை மாநகராட்சியால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது *Tamil Nadu Combined Development & Building Rules* 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr.D.H.Sarath K Kumar, Mr. D. Venkatesh, Mr. D.N. Choudery ஆகியோர் அதற்கேற்றவாறு **9.00**ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 9.00ச.மீ பரப்பளவு நிலம் *TANGEDCO* விற்கும், ஒதுக்க இசைவு தெரிவித்து அதற்குண்டான தானப்பத்திரம் அளித்துள்ளார்கள். மனைப்பிரிவு வரைப்படம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும் விண்ணப்பதாரர்கள் Mr.D.H.Sarath K Kumar, Mr.D.Venkatesh, Mr.D.N.Choudery ஆகியோரிடம் இருந்து பொது பயன்பாட்டிற்கான 9.00ச.மீ நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக்கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, Mr. D.H. Sarath K Kumar, Mr. D. Venkatesh, Mr. D.N. Choudery ஆகியோரிடமிருந்து KCG College Road, Karapakkam, Chennai, S.No.37/1, 37/2 & 37/3 of Karapakkam Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் ஏற்கனவே சாலைக்கென 621.67 ச.மீ நிலம் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், தற்பொழுது கூடுதலாக பொது பயன்பாட்டிற்கென 9.00 ச.மீ நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக்கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.17/2023, நாள்.17.02.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இப்பொருள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், இதனை ஒத்திவைக்க வேண்டுமென 15வது மண்டலக்குழுத் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இப்பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது."**

******

**ம.அ.3 .ந.க.எண்/604/2021**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:085/2023** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3, பகுதி-8, புதிய வார்டு-30 மயான பூமி சாலையில் அமைந்துள்ள விநாயகபுரம் மயான பூமியில் உபயோகமற்ற தகன மேடையை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, பகுதி-8, புதிய வார்டு-30க்கு உட்பட்ட மயான பூமி சாலையில் அமைந்துள்ள விநாயகபுரம் மயான பூமியில் புதிய LPG தகன மேடை மற்றும் நவீன கட்டிடம் கட்டுவதற்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.26 கோடி (ஒரு கோடியே இருபத்தி ஆறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஒப்ப ஏற்பு ஆணை வழங்கப்பட்டு, பணி துவங்கப்படவுள்ளது. இந்நிலையில் அவ்விடத்தில் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள தகன மேடையை இடித்து விட்டு புதியதாக தகன மேடை கட்டுமாறு, 23.01.2023 அன்று நடைபெற்ற கள ஆய்வில் வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

மேற்படி, பழைய தகன மேடை சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக LPG தகன மேடை மற்றும் நவீன கட்டிடம் கட்டப்பட உள்ளது.

ஆகவே, மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்ட தகன மேடை கட்டிடத்தின் விவரம் ஏதும் ஒப்படைக்கப்படாத நிலையில் தற்போது பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு பூஜ்ஜியம் ஆகும்.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-8, வார்டு-30 விநாயகபுரம் மயான பூமியில் உள்ள பழைய பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள தகன மேடை கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 18 வருடங்களுக்கு முன்பு மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 45.9 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 2135.83 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | பூஜ்ஜியம் |
| 6 | அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | தற்போது பயன்பாட்டில் இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக நவீன முறையில் LPG தகன மேடை மற்றும் கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள தகன மேடையை இடித்து விட்டு புதியதாக கட்டுவதற்கு |

| | | |
|---|---|---|
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | வடக்கு வட்டார துணை ஆணையர். |
| 10 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | பின்னேற்பு பெறப்படும் |

எனவே, மண்டலம்-3, பகுதி-8, புதிய வார்டு-30, மயான பூமி சாலையில் அமைந்துள்ள விநாயகபுரம் மயான பூமியில் பழுதடைந்த தகன மேடை கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.011/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.062/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.3ந.க.எண்.599/2021**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:086/2023** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 3, பகுதி - 8, புதிய வார்டு 31 இரட்டை மலை சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடியும் தருவாயில் உள்ள நியாய விலை கடை (மைய எண்.O2.I F.O6ONT) கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 3, பகுதி - 8, புதிய வார்டு 31 இரட்டை மலை சீனிவாசன் தெருவில் 43.5 ச.மீ பரப்பளவில் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கான்கீரிட் தரைதளம் கட்டிடம் இடிந்து விழும் அபாயகரமான சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாமன்ற உறுப்பினர் அவர்களின் 02.01.2023 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி இந்த உபயோகமற்ற பழைய கட்டிடத்தை இடித்து விட்டு மீண்டும் புதிய நியாய விலை கட்டிடம் (மைய எண்.O2.I F.O6ONT) கட்டி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி, கட்டிடம் புழல் பஞ்சாயத்து யூனியன் கதிர்வேடு ஊராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் தரைதளமானது தளம் போட்ட கான்கீரிட் கட்டிடம் கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக புதிய நியாய விலை கட்டிடம் (மைய எண்.O2.I F.O6ONT) கட்ட வேண்டியுள்ளது.

ஆகவே, மேற்குறிப்பிட்ட மிகவும் பழுதடைந்த உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள கான்கீரிட் தரைதளம் கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு பூஜ்ஜியம் ஆகும்.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-8, வார்டு-31 இரட்டை மலை சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்துவிழும் அபாயகரமான நிலையில் உள்ள கான்கீரிட் தரைதளம் கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 25 வருடங்களுக்கு முன்பு புழல் பஞ்சாயத்து யூனியன் கதிர்வேடு ஊராட்சியால் கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 43.5 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 43.5 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | பூஜ்ஜியம் |
| 6 | அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | தற்போது பயன்பாட்டில் இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய நியாய விலை கட்டிடம் (மைய எண்.O2.I F.O6ONT) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| *9* | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர் - *3* |
| *10* | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்:- 369 நாள்.11.01.2023 |
| *11* | இக்கட்டிடத்தில் இருந்த நியாய விலை கடை தற்போது மாற்றப்பட்ட இடம் | தற்காலிகமாக கதிர்வேடு நடுநிலைப்பள்ளி அருகில் உள்ள *Multi Purpose Hall*க்கு மாற்றப்பட்டுள்ளது. |

எனவே, மண்டலம் – 3, பகுதி – *8*, புதிய வார்டு 31, இரட்டைமலை சீனிவாசன் தெருவில் 43.5 ச.மீ பரப்பளவில் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கான்கீரிட் தரைதளம் இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக நியாய விலை கட்டிடம் கட்டுவதற்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.065/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/0796/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:087 / 2023** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, பகுதி - 10, வார்டு - 42, இரத்தின சபாபதி தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, பகுதி - 10, வார்டு - 42ல் இரத்தின சபாபதி தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்-4 | வார்டு எண். 42 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | இரத்தின சபாபதி தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர் பகுதி - 10 அலுவலக கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1971 ஆம் ஆண்டு |
| 3. | அந்த பழைய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் 149.25ச.மீ<br>முதல் தளம் 101.25ச.மீ |
| 4. | பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.19,641.45/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 6. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக உதவி செயற்பொறியாளர் பகுதி - 10 அலுவலகம் கட்டுவதற்காக. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | பகுதி - 10 உதவி செயற்பொறியாளர் அலுவலகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | மண்டல அலுவலர் - 4 |
| 9. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | தீர்மான எண்.102 /2023, நாள். 10.01.2023 |

எனவே, மண்டலம்-4, பகுதி - 10, வார்டு - 42, இரத்தின சபாபதி தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர் பகுதி - 10 அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக உதவி செயற்பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.037/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.4.ந.க.எண்.பி3/0808/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:088/2023** **பொருள் எண்.08**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42, டி.எச். ரோடு சர்வீஸ் ரோடில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42ல் டி.எச். ரோடு சர்வீஸ் ரோட்டில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

இடிக்கப்பட வேண்டிய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | மண்டலம்-4 | வார்டு எண். 42 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | டி.எச். ரோடு சர்வீஸ் ரோடில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம். |
| 2. | அந்த பழைய கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1980 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த பழைய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் 72.35 ச.மீ |
| 4. | பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.9,743.10/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்து பயனற்ற இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 6. | பழைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பொது கழிப்பிடம் கட்டுவதற்காக. |
| 7. | அந்த பழைய கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | பொது கழிப்பிடம் கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | பழைய பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | மண்டல அலுவலர் – 4 |
| 9. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | தீர்மான எண். 28/2022, நாள். 19.09.2022 |

மேலே குறிப்பிட்டுள்ள பகுதி-10, வார்டு-42, டி.எச். ரோடு சர்வீஸ் ரோடில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பொது கழிப்பிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42, டி.எச். ரோடு சர்வீஸ் ரோடில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.015/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.069/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.5ந.க.எண்/0910/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:089/2023** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12, வார்டு-50, ஏ.ஜே காலனி மெயின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 5, பகுதி-12, வார்டு-50க்கு உட்பட்ட ஏ.ஜே காலனி மெயின் தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும் இந்த பகுதியில் வசிக்கும் மக்கள் வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளதால் மக்கள் யாரும் இந்த கழிப்பிடத்தை பயன்படுத்தாமல் உள்ளனர். மேலும் இந்த பகுதி மக்கள் இந்த இடத்தில் ஒரு ரேஷன் கடை அமைத்துத்தர பல நாட்களாக கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, இந்த இடத்தில் புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு இக்கட்டிடத்தை இடிக்க வேண்டுதல் அவசியமாகிறது. இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

| கழிப்பிட கட்டிடம் | |
|---|---|
| தரை தளம் | 12.00 மீ X 8.50 மீ = 102.00 சதுர மீட்டர் |
| முதல் தளம் | 12.00 மீ X 8.50 மீ = 102.00 சதுர மீட்டர் |
| புத்தக மதிப்பு | ரூ.9785.02/- |
| வார்டு குழு தீர்மான எண் | தீர்மான எண்.42, நாள்.13.07.20222 |

எனவே, மண்டலம்-5, பகுதி-12, வார்டு-50, ஏ.ஜே காலனி மெயின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுகழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.009/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.060/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.6நக.எண்.இ1/968/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:090/2023** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் கோட்டம் -74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூடம் ஆகிய கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் சுமார் 75 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 1992ஆம் ஆண்டும் மற்றும் கோட்டம்-74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் 47 சதுர மீட்டர் நிலப்பரப்பில் மற்றும் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம் சுமார் 84 சதுர மீட்டர் நிலப்பரப்பில் இக்கட்டிடங்கள் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும். இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்புறத்தில் உள்ள மேல் தளம் (Ceiling) மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடங்களை இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

| வ. எண் | கோட்டம் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | Depreciation 30% Amount |
|---|---|---|---|---|
| 1. | 71 | மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் | ரூ.1,22,000/- | ரூ.44,272/- |
| 2. | 74 | கோட்டம்-74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் | ரூ.1,60,000/- | ரூ.15,982/- |
| 3. | 74 | கோட்டம்-74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம் | ரூ.2,16,000/- | ரூ.29,667/- |
| மொத்தம் | | | ரூ.4,98,000/- | ரூ.89,921/- |

மேற்கண்ட பணிகளுக்கு 2022-23ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,98,000/- ஆகும். மேலும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு முன் இக்கட்டிடத்தில் மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான கதவு, ஜன்னல் போன்றவற்றிற்கு அளவீடு எடுக்கப்பட்டு தற்போது 2022-23 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி கணக்கிடப்பட்ட தொகை ரூ.89,921/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான கதவு, ஜன்னல் ஆகிய பொருட்களின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு மிகவும் பழமையான கட்டிடம் என்பதால் 30 சதவீதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.89,921/-யை ஒப்பம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரரரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, காசோலையாக பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்படுவதற்கும் இப்பொருட்களை ஒப்பந்ததாரர் எடுத்துக்கொள்வதற்கான அனுமதியும் வேண்டப்படுகிறது.

மேற்கண்ட பணிகளுக்காக கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | 1. | ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம். |
| | | 2. | புதிய வாழைமா நகர் 5வது தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம். |
| | | 3. | புதிய வாழைமா நகர் 5வது தெருவில் உள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1. | 1992 |
| | | 2. | 2007 |
| | | 3. | 2007 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1. | 75 சதுர மீட்டர் |
| | | 2. | 47 சதுர மீட்டர் |
| | | 3. | 84 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1. | 75 சதுர மீட்டர் |
| | | 2. | 499.80 சதுர மீட்டர் |
| | | 3. | 499.80 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 1. | ரூ.5,524.77 |
| | | 2. | ரூ.1,19,970.33 |
| | | 3. | ரூ.3,24,473.33 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | 1. | பயன்பாட்டில் இல்லை |
| | | 2. | |
| | | 3. | |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | 1. | புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| | | 2. | |
| | | 3. | |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | 1. | பழுதடைந்துள்ளது. |
| | | 2. | |
| | | 3. | |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | 1. | புதிய கட்டிடம் கட்டும் பணிக்காக செயற்பொறியாளரால் ஆய்வில் பரிந்துரைக்கப்பட்டது. |
| | | 2. | |
| | | 3. | |
| 10. | வார்டு குழு, மண்டலம்-6ன் தீர்மான எண் மற்றும் நாள் | 1. | வார்டு குழு, மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது |
| | | 2. | |
| | | 3. | |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் கோட்டம் -74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம் ஆகிய கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கும்,

2. மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் கோட்டம்-74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம் ஆகிய கட்டிடங்களை இடிப்பதற்கான தொகை ரூ.4,98,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-71, ஸ்டேட் பேங்க் காலனி தெருவில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் கோட்டம்-74, புதிய வாழைமா நகர் 5வது தெருவில் பழுதடைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் (ICDS) கட்டிடம் மற்றும் பழுதடைந்துள்ள பழைய உடற்பயிற்சி கூட கட்டிடம் ஆகிய கட்டிடங்களை இடிப்பதற்காக 2022-23 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,98,000/- இடிப்பதற்கான கட்டிட கழிவு மறு சுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான கதவு, ஜன்னல் போன்றவற்றின் கட்டிட கழிவு மறுமதிப்பீட்டு தொகை ரூ.89,921/- மட்டும் ஒப்பந்ததாரரால் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்படுவதற்கும் பின்னர் மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.064/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ம.அ.9ந.க.எண்.இ1/534/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:091/2023** **பொருள் எண்.11**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110, நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள மயான பூமியில் பழைய புகைபோக்கி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110, நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள மயானபூமியில் பழைய புகைபோக்கி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | மண்டலம்-9 | வார்டு எண்-110 |
|---|---|---|
| 1. | இடம் | வார்டு – 110, நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள மயானபூமியில் பழைய புகைபோக்கி கட்டிடம். |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1972 |
| 3. | கட்டிடத்தின் பரப்பளவு | 99 ச. மீ |
| 4. | இடத்தின் பரப்பளவு | 99 ச.மீ. |
| 5. | தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.12388/- |
| 6. | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 7. | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது. | எல்.பி.ஜி. தகனமேடைக்கு புதிய கட்டிடம் அமைக்கும் பணி. |

எனவே, மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110 நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள மயானபூமியில் பழைய புகைபோக்கி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.012/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.063/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ10.ந.க.எண்.அ1/568/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:092/2023** **பொருள் எண்.12**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, பகுதி-29, வார்டு-129, முல்லை தெருவில் (மஜித் நகர்) உள்ள மிகவும் பழுதடைந்த அம்மா உணவகம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-29, வார்டு-129ல் முல்லை தெருவில் (மஜித் நகர்) உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகத்தில் உள்ள அம்மா உணவகம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்களை இடித்து, அவ்விடத்தில் புதியதாக சுகாதார ஆரோக்கிய மையம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு 10.01.2023 அன்று நடைபெற்ற வார்டு குழுவில் தீர்மான எண். 185ல் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

இடிக்கப்படவேண்டிய அம்மா உணவகம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்களின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | மண்டலம்-10 | வார்டுஎண் -129 |
|---|---|---|
| 1. | இடம் | முல்லை தெரு (மஜித் நகர்) |
| 2. | கட்டிடம் கட்டப்பட்டஆண்டு | 2000-2001 |
| 3. | கட்டிடத்தின் பரப்பளவு | 2585 (ச.அடி) 240.30 (ச.மீ) |
| 4. | இடத்தின் பரப்பளவு | 166 (ச.மீ) |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 252329.84 |
| 6. | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம் |
| 7. | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | சுகாதார ஆரோக்கிய மையம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டப்பட உள்ளது |

எனவே, மண்டலம்-10, பகுதி-29, வார்டு-129, முல்லை தெருவில் (மஜித் நகர்) உள்ள மிகவும் பழுதடைந்த உபயோகத்தில் உள்ள அம்மா உணவகம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.007/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.058/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.10.ந.க.எண்.அ1/19103/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:093/2023** **பொருள் எண்.13**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு-138, 60 அடி சாலை பாரதிதாசன் காலனி சந்திப்பில் உள்ள மிகவும் பழுதடைந்த பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு–138ல் 60 அடி சாலை பாரதிதாசன் காலனி சந்திப்பில் உள்ள மிகவும் பழுதடைந்த உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தினை இடித்து, அவ்விடத்தில் மீண்டும் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு 12.09.2022 அன்று நடைபெற்ற வார்டு குழுவில் தீர்மான எண்.113ல் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

இடிக்கப்பட வேண்டிய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு

| வ எண் | மண்டலம்-10 | வார்டுஎண்-138 |
|---|---|---|
| 1. | இடம் | 60 அடி சாலை பாரதிதாசன் காலனி சந்திப்பு |
| 2. | கட்டிடம் கட்டப்பட்டஆண்டு | 1980 |
| 3. | கட்டிடத்தின் பரப்பளவு | 39 sq.m |
| 4. | இடத்தின் பரப்பளவு | 39 sq.m |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு (ரூ) | 1000 |
| 6. | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | இல்லை |
| 7. | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | மீண்டும் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டப்பட உள்ளது |

எனவே, மண்டலம்-10, வார்டு-138, 60அடி சாலை பாரதிதாசன் காலனி சந்திப்பில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.008/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.059/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.12.ந.க.எண்.இ1/7338-6/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:094/2023** **பொருள் எண்.14**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12, வார்டு-160, புதுத் தெரு பூங்காவில் அமைந்துள்ள பழைய நகராட்சியால் கட்டப்பட்ட துப்புரவு ஆய்வாளர் அறையை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு-160, புதுத் தெரு பூங்காவில் அமைந்துள்ள பழைய நகராட்சியால் கட்டப்பட்ட துப்புரவு ஆய்வாளர் அறையாக உள்ள கட்டிடத்தை இடித்து அகற்றி அவ்விடத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற 12.10.2022 அன்று நடைபெற்ற 12வது மண்டல வார்டு குழு கூட்டத்தில் மன்றத்தின் அனுமதி பெற தீர்மான எண்.210ல் பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், இடித்து அகற்றப்பட வேண்டிய பழைய துப்புரவு ஆய்வாளர் அறை கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | 160 |
| இடம் | புதுத் தெரு பூங்கா |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1991 ல் கட்டப்பட்டது |
| கட்டிடத்தின் பரப்பளவு | 54ச. மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 1467 ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.1362.25 |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | துப்புரவு ஆய்வாளர் அறையாக உள்ளது. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | புதிய திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் கட்டப்பட உள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த 31 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம். |
| வார்டு குழு தீர்மான எண் | தீர்மான எண்.210/2022-23, நாள் 12.10.2022 |

எனவே, மண்டலம்-12, வார்டு-160, புதுத்தெரு பூங்காவில் அமைந்துள்ள பழைய நகராட்சியால் கட்டப்பட்ட துப்புரவு ஆய்வாளர் அறையை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.014/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.068/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.13.ந.க.எண்.சி1/8230/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:095/2023** **பொருள் எண்.15**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, பகுதி-39, வார்டு-177, வேளச்சேரி பிராமின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-39, வார்டு-177ல் வேளச்சேரி பிராமின் தெருவில் பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாமல் பழைய உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து, அவ்விடத்தில் வேளச்சேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதியதாக காரிய மண்டபம் கட்டப்பட உள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதற்கு 13வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.231, நாள்.13.12.2022-ன்படி பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| வார்டு எண். | 177 |
| இடம் | வேளச்சேரி பிராமின் தெரு. |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1997-98 |
| கட்டிடத்தின் பரப்பளவு | 19.00 ச.மீ. |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 91.00 ச.மீ. |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1,02,595.50 |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதியதாக காரிய மண்டபம் கட்டப்பட உள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாத பழைய பொதுக்கழிப்பிடம். |
| வார்டு குழு தீர்மான எண். | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.231, நாள்-13.12.2022 |

மேற்கண்ட பொதுக்கழிப்பிடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுடன் உரிய ஒப்பந்ததாரர் மூலம் இடித்து அகற்றப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம்-13, பகுதி-39, வார்டு-177ல் வேளச்சேரி பிராமின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.010/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.061/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.1ந.க.எண்.பி1/8104/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:096/2023** **பொருள் எண்.16**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, வார்டு-14, ஏ சதானந்தபுரம் புது காலனி 2வது தெருவில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-1, பகுதி-3, வார்டு-14க்குட்பட்ட ஏ சதானந்தபுரம் புது காலனி 2வது தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய அங்கன்வாடி கட்டிடம் (மைய எண்.33603130319) 1985 ஆம் ஆண்டு 37 வருடங்களுக்கு முன்னாள் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் 30 குழந்தைகளை கொண்டு செயல்பட்டு வருகின்றது. இக்கட்டிடம் புதுப்பிக்க முடியாத அளவிற்கு சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே, அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் எதிர்கால நலனை கருதி இக்கட்டிடம் இடிக்கப்பட வேண்டும்.

வார்டு-14க்குட்பட்ட ஏ சதானந்தபுரம் புது காலனி 2வது தெருவில் அமைந்துள்ள 1985 ஆம் ஆண்டு 37 வருடங்களுக்கு முன்னாள் கட்டப்பட்ட அங்கன்வாடி (மைய எண்.33603130319) கட்டிடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மறுசீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது மிகவும் பழுதடைந்து மறு சீரமைக்க இயலாத நிலையில் உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள அங்கன்வாடி (மைய எண்.33603130319) கட்டிடம் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய அங்கன்வாடி மையம் கட்ட, தற்போது உள்ள பழைய அங்கன்வாடி பழுதாகிய நிலையில் இருப்பதாலும், இந்த அங்கன்வாடி மையத்தில் (மைய எண்.33603130319) உள்ள குழந்தைகளின் எதிர்கால நலன் கருதியும் புதிய அங்கன்வாடி மையம் மிக அவசியமாகிறது. எனவே, பழைய அங்கன்வாடி கட்டிடம் (மைய எண்.33603130319) இடிக்கப்பட வேண்டும்.

எனவே, இதனடிப்படையில் பழைய அங்கன்வாடி மையம் சிதிலமடைந்து இருப்பதால் இடிப்பதற்கு பரிந்துரைத்து சமர்ப்பிக்கப்படுகிறது. அதன் விவரம்.

| வ. எண். | வார்டு எண்.14 | மண்டலம்-1 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-3, வார்டு-14க்குட்பட்ட ஏ சதானந்தபுரம் புது காலனி 2வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி மையம். (மைய எண்.33603130319) |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1985 ஆம் ஆண்டு திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மட்டும் - 807 சதுரஅடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 807 சதுர அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.47,800/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்படும் |

| | | |
|---|---|---|
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | புது காலனி 2வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி (மைய எண்.33603130319) மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்? | வடக்கு வட்டார துணை ஆணையர் |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.426, நாள்.10.02.2023 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-14க்குட்பட்ட ஏ சதானந்தபுரம் புது காலனி 2வது தெருவில் அமைந்துள்ள பழைய அங்கன்வாடி (மைய எண்.33603130319) மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் சுவர் மற்றும் தரை தளத்தில் விரிசல்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதாலும், அங்கன்வாடி மையத்திற்கு வரும் குழந்தைகள் நலன் கருதி சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100 சதவிகித பங்களிப்பு பெறப்பட்டு கட்ட இருப்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 46 /2023, நாள். 21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண். 03/2023, நாள்.24.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.4ந.க.எண்.0717/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:097/2023** **பொருள் எண்.17**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, கோட்டம்-41க்குட்பட்ட கார்னேசன் நகர் பார்த்தசாரதி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-4, கோட்டம்-41க்குட்பட்ட கார்னேசன் நகர் பார்த்தசாரதி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்ட TUFIDCOவில் அனுமதி பெறப்பட்டுள்ளது. இடிக்கப்படவுள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடத்தினை பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு

| வ. எண். | பொருள் | விவரம் |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-4, கோட்டம்-41, கார்னேசன் நகர் பார்த்தசாரதி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 08-06-1998 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 899.00 சதுரமீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 560.00 சதுரமீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.4,67,500/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய நடுநிலைப்பள்ளி கட்டிடம் |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்த நிலையில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து புதிய பள்ளிக்கட்டிடம் கட்ட உள்ளதால். |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்? | மாமன்ற உறுப்பினர், வார்டு –41. |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.22, நாள்.10.01.2023 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, கோட்டம்-41க்குட்பட்ட கார்னேசன் நகர், பார்த்தசாரதி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 47/2023, நாள். 21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "24.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண்.04/2023, நாள்.24.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.9ந.க.எண்.இ1/204/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:098/2023** **பொருள் எண்.18**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, வார்டு-110, அப்பாசாமி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110, அப்பாசாமி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி வளாகத்தில் சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110, அப்பாசாமி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1967 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 372 ச.மீ. |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 372 ச.மீ. |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.262243/- |
| 6. | அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய கலையரங்கம் அமைக்கும் பணி. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது |
| 9. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 191, நாள்.15.12.2022 |

எனவே, மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110, அப்பாசாமி தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய கட்டிடம் சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 48/2023, நாள். 21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண்.05/2023, நாள்.24.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ம.அ.9.ந.க.எண்.இ1/205/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:099/2023** **பொருள் எண்.19**

அதனைத் தொடர்ந்து *14*-வது மண்டல அலுவலரின் *20.02.2023* நாளிட்ட கடிதத்தில், *மேற்படி நிலத்தில் 0.05.0 ஏர்ஸ் அரசு புறம்போக்கு களம் வகைப்பாடு கொண்ட நிலத்தில் 0.02.20 ஏர்ஸ் நிலம் சாலையாகவும், 0.02.80 ஏர்ஸ் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளதாகவும், மேலும் திருமதி. ஜெயந்தி என்பவர் சுற்றுச்சுவருடன் காலிமனையாக சுமார்.0.00.70 ஏர்ஸ் நிலமும், சிமெண்ட் சீட் அமைந்த செட் உடன் சுமார் 0.00.46 ஏர்ஸ் நிலமும், திரு.சேக் பயாஸ் அகமது என்பவர் வீடு கட்டி சுமார் 0.00.82 ஏர்ஸ் நிலமும், வழிபாதையாக சுமார் 0.00.32 ஏர்ஸ் நிலமும் மற்றும் திரு.ஜித்தேந்தர் என்பவர் வீடு கட்டி சுமார் 0.00.50 ஏர்ஸ் நிலமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றிய பின் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லைனெ தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

எனவே, இந்நேர்வில், சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பாலவாக்கம் கிராமம், ஜெய்சங்கர் நகர், புல எண்.43-ல் அமைந்துள்ள "அரசு புறம்போக்கு களம்" வகைப்பாடு கொண்ட நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 0.05.0 ஏர்ஸ் நிலத்தினில் 0.01.25 ஏர்ஸ் நிலத்தினை பாதாள சாக்கடை திட்டத்திற்கென *(UGSS)* கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க *(Sewerage Pumping Station)* சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவிப்பதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.63/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/142/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 21.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:112/2023** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - பகுதியில் குடிநீர் திட்டத்தினை மேம்படுத்தும் பணிக்காக சுண்ணாம்புக்கால்வாய் பகுதியில் நிலம் ஒதுக்கீடு செய்ய சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கோரியது - ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் முன்னிலையில், மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களின் தலைமையில் கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மண்டல அலுவலகத்தின் அறிக்கை பெறப்பட்டது - ஒதுக்கீடு செய்து தர இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டது - முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களால் மறுபரிசீலனை செய்யுமாறு மேற்குறிப்பிடப்பட்டு மண்டல அலுவலகத்தின் அறிக்கை பெறப்பட்டது - தடையின்மை சான்று (NOC) வழங்க மன்றத்தின் அனுமதி.**

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குரின் 11.01.2022 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-4, ஆர்.கே.நகர் தொகுதியின் பட்டேல் நகர் பகுதியில் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்த மக்கள் தொகையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அமைப்பு மற்றும் தற்போதுள்ள முக்கிய பகுதிகளின் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கும், கொருக்குப்பேட்டை பகுதிக்கென தனியாக குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கும், கொருக்குப்பேட்டை, சுண்ணாம்புக்கால்வாய் பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1 ஏக்கர் நிலத்தினை குடிநீர் மேம்பாட்டு திட்டத்திற்கென சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

4-வது மண்டல அலுவலரின் 03.12.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட கடிதத்தில் கோரப்பட்ட சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் உள்ள காலியிடத்தில் நிலம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது எனவும், அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 15.07.2022 நாளிட்ட கடிதத்தில், வடசென்னை பகுதியானது பல்வேறு விளையாட்டு திறமையாளர்களை ஊக்குவிப்பதில் புகழ்பெற்று விளங்கி வருகிறது எனவும், அப்பகுதியில் உள்ள இளைஞர்களை ஊக்கப்படுத்தி மேம்படுத்தக்கூடிய நோக்கில், வடசென்னை பகுதியில் நவீன தொழில்நுட்பங்களோடு கூடிய நவீன குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது எனவும், இங்கு கையுந்துப்பந்து (Volley Ball), இறகுப்பந்து (Badminton), கூடைப்பந்து (Basket Ball), குத்துச்சண்டை (Boxing), கபாடி (Kabaddi), மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கான வசதிகளோடு (Indoor Games) நவீன உடற்பயிற்சிக்கூடம் (Modern Gym) அமைக்கப்பட உள்ளது என தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் விதி 110-இன்கீழ் வெளியிடப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு விரிவாக செயற்குறிப்பு அனுப்ப அறிவுறுத்தப்பட்டது எனவும், அதன்படி மண்டலம்-4, வார்டு-41 சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் Sports Acadamy அமைக்க ரூ.9,98,40,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 21.04.2022 அன்று நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்,

மேலும், மேற்கண்ட இடத்தின் அருகாமையில் மண்டலம்-4, வார்டு-47-இல் பழைய ஆர்.எஸ்.எண்.1844/2, புதிய ஆர்.எஸ்.எண்.1844/14 (பகுதி) சுமார் 2.66 ஹெக்டேர் (6 ஏக்கர்) தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிக்காக 23.12.2015 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஆக்கிரமிப்புடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், இவ்விடத்தின் வடக்கு பகுதியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதால், எல்லை நிர்ணயம் செய்ய தண்டையார்பேட்டை வட்டாட்சியருக்கு 03.03.2017, 15.15.2017, 09.06.2017 மற்றும் 11.08.2017 ஆகிய நாட்கள் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது எனவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.850/2008 மற்றும் கிறிஸ்துவ மத

போதனைக்காக ஒதுக்கப்பட்ட இடமென வழக்கு எண். *O.S.No.850/2017*-இன் மூலம் *City Civil Court*-இல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது எனவும், மேலும் இவ்விடமானது *(Eco Park) Coastal Regulation Zone* பகுதியில் வருவதால், அத்துறையின் கருத்துரு பெற்று மேல்நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களின் 15.12.2022 நாளிட்ட கடிதத்தில், *மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், குடிநீர் மேம்பாட்டு திட்டத்திற்கென சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு "ஒதுக்கீடு செய்து தர இயலாத நிலை உள்ளது" என சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநருக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டது.*

*இந்நிலையில் இப்பொருள் சம்பந்தமாக 24.12.2022 அன்று முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதில், SLO Please speak. Can we get the land? என மேற்குறிப்பிட்டு மறுபரிசீலனை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 28.12.2022 கடிதத்தில், முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களால் மேற்குறிப்பிட்டுள்ளபடி, ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.*O.S.No.4497/2008* மற்றும் கிறிஸ்துவ மத போதனைக்காக ஒதுக்கப்பட்ட இடமென வழக்கு எண். *O.S.No.850/2017*-இன் மூலம் *City Civil Court*-இல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான முழு விவரங்களுடன் முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களிடம் கலந்தாலோசிக்குமாறு முதுநிலை சட்ட அலுவலரையும் மற்றும் மேற்கண்ட வழக்குகள் தொடர்பான உறுதி ஆவணம் *(Affidavit)*, எதிர் உறுதி ஆவணம் *(Counter Affidavit)* மற்றும் *(Eco Park) Coastal Regulation Zone Notification Copy* ஆகியவற்றின் நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு 4-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

4-வது மண்டல அலுவலரின் 04.01.2023 நாளிட்ட கடிதத்தில், *மேற்படி கோரப்பட்டுள்ள நிலுவை வழக்குகள் தொடர்பான உறுதி ஆவணம் (Affidavit), எதிர் உறுதி ஆவணம் (Counter Affidavit) மற்றும் (Eco Park) Coastal Regulation Zone Notification Copy ஆகியவற்றின் நகல்கள் இணைத்து அனுப்பப்பட்டது.*

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 13.01.2023 நாளிட்ட கடிதத்தில், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளது *(Case Disposed)* எனவும், இப்பொருள் சம்பந்தமான புல எண்ணிற்கும், வழக்குகள் சம்பந்தமான புல எண்ணிற்கும் வேறுபாடுகள் உள்ளதாக சட்டக்குழும முதுநிலை சட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்குகள் சம்பந்தமாக முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களுக்கு குறிப்புரை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் முதுநிலை சட்ட அலுவலரை அணுகிட உரிய அலுவலரை அனுப்புமாறு 4-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

*இந்நிலையில் ஆர்.கே.நகர் தொகுதி மக்களின் அத்தியாவசிய மற்றும் அடிப்படை குடிநீர் தேவையினை மேம்படுத்தும் முக்கியமான திட்டமாக இருப்பதாக ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் அறிவுறுத்தியுள்ளதன் அடிப்படையில், 4-வது மண்டல அலுவலரின் 08.02.2023 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இடமானது பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 23.12.2015 அன்று புல எண்.1844/2 (பகுதி), புதிய புல எண்.1844/15 (பகுதி)-ல் 2.66 ஹெக்டேர் பரப்பளவு இடம் மண்டலத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், அதில் ஒரு பகுதி ஏற்கனவே ஆக்கிரமிப்புடன் மண்டலத்திற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும், இந்த இடத்தில் கீழ்கண்ட இரண்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளது எனவும்,*

1. *O.S.No.4497/2008 filed by Ponnusamy 30 othersregarding unauthorized construction at No.45/B, Bharathi Nagar, 6th Street, Korukkupet, Chennai-21. This case was disposed. (Copy Enclosed).*

2. *O.S.No.850/2017 case filed by Mr.Arthur Robert.*
*Despite of several chances plaintiff side not commence trial conditional order not complied withno representation on plaintif side till 4.50 p.m. plaintiff call absent hence this suit is dismissed for default. (Copy Enclosed).*

*சர்வே எண். பழைய 1844/2 (பகுதி), புதியது 1844/15 (பகுதி) மீது வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளதா என தெரியவில்லை. மேலும் ஆக்கிரமிப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் உரிய தாக்கீது வழங்கி அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும்,*

*மேலும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கோரிய இடமானது தற்போது காலியாக உள்ளதால் பொதுக்கள் நலன் கருதி மேற்கண்ட துறைக்கு வழங்க உரிய கோப்புகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*

எனவே, இந்நேர்வில், இத்திட்டத்தை செயல்படுத்த அப்பகுதியில் வேறு அரசுக்கு சொந்தமான காலி நிலங்கள் ஏதும் இல்லாததாலும், அப்பகுதி மக்களின் அத்தியாவசிய மற்றும் அடிப்படை குடிநீர் தேவையினை மேம்படுத்தும் முக்கியமான திட்டமாக இருப்பதாலும், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்க நில ஒப்படைப்பு சான்றின் *(Land Transfer Certificate)* மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள *சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் கிராமம், மண்டலம்-4, கோட்டம்-47, கொருக்குப்பேட்டை, சுண்ணாம்புக்கால்வாய் பகுதியில் அமைந்துள்ள பிளாக் எண்.31, பழைய புல எண்.1844/2 (பகுதி), புதிய புல எண்.1844/15 (பகுதி)-ல் உள்ள "சர்க்கார் புறம்போக்கு", அடங்கல் கலத்தில் அரசு வருவாய்த்துறை "கழிவு" பயன்பாட்டு மொத்த விஸ்தீரணம் 2.66 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தினில்* 1 ஏக்கர் நிலத்தினை ஆர்.கே. நகர் தொகுதியின் குடிநீர் மேம்பாட்டு திட்டத்திற்கென *(Drinking Water Development Project)* சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு "தடையின்மை சான்று" *(No Objection Certificate)* வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.64/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3038/2021</u>

<u>முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 21.02.2023 நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:113/2023** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் 4 - கொருக்குப்பேட்டை சுண்ணாம்புக் கால்வாய் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் 33/11 KV துணை மின் நிலையம் மற்றும் வாரிய அலுவலகம் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டது - ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் முன்னிலையில், மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களின் தலைமையில் கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மண்டல அலுவலகத்தின் விரிவான அறிக்கை பெறப்பட்டது - ஒதுக்கீடு செய்து தர இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டது - முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களால் மறுபரிசீலனை செய்யுமாறு மேற்குறிப்பிடப்பட்டு மண்டல அலுவலகத்தின் அறிக்கை பெறப்பட்டது - ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி**

,தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக, தண்டையார்பேட்டை, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு செயற்பொறியாளரின் 14.12.2021 மற்றும் 14.03.2022 நாளிட்ட கடிதங்களில், கொருக்குப்பேட்டை பகுதிக்கு விநியோகிக்க தேவைப்படும் துணை மின்நிலையம் ஏதும் அப்பகுதியில் இல்லையெனவும், தண்டையார்பேட்டை பகுதி துணை மின் நிலையத்திலிருந்து கொருக்குப்பேட்டை பகுதி மக்களுக்கு மின் விநியோகிக்கப்படுவதற்கு பதிலாக, கொருக்குப் பேட்டையிலேயே புதியதாக துணை மின்நிலையம் அமைத்துக் கொடுக்கும்பட்சத்தில், இரு பகுதி மக்களுக்கும் தங்கு தடையில்லாத மின்சாரம் கிடைக்க ஏதுவாக இருக்குமென கொருக்குப்பேட்டை பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் கோரியுள்ளனர் எனவும், எனவே, இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொருக்குப்பேட்டை சுண்ணாம்புக் கால்வாய் பகுதியில் உள்ள காலி நிலத்தினில் *50m x 40m (2000 sq.mtr)* சதுர மீட்டர் நிலத்தினை 33/11 *KV* கொருக்குப்பேட்டை துணை மின்நிலையம் மற்றும் வாரிய அலுவலகம் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. *மேலும் இப்பகுதியில் துணை மின்நிலையம் அமைப்பதில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் மற்றும் ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் ஆர்வமாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

அதனைத் தொடர்ந்து 4-வது மண்டல அலுவலரின் 3.12.2022 நாளிட்ட கடிதத்தில், *மேற்கண்ட கடிதத்தில் கோரப்பட்ட சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் உள்ள காலியிடத்தில் நிலம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது எனவும், அரசு கடிதத்தில், வடசென்னை பகுதியானது பல்வேறு விளையாட்டு திறமையாளர்களை ஊக்குவிப்பதில் புகழ்பெற்று விளங்கி வருகிறது எனவும், அப்பகுதியில் உள்ள இளைஞர்களை ஊக்கப்படுத்தி மேம்படுத்தக்கூடிய நோக்கில், வடசென்னை பகுதியில் நவீன தொழில்நுட்பங்களோடு கூடிய நவீன குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் ரூ.10 கோடி மதிப்பீட்டீல் அமைக்கப்பட உள்ளது எனவும், இங்கு கையுந்துப்பந்து (Volley Ball), இறகுப்பந்து (Badminton), கூடைப்பந்து (Basket Ball), குத்துச்சண்டை (Boxing), கபாடி (Kabaddi), மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கான வசதிகளோடு (Indoor Games) நவீன உடற்பயிற்சிக்கூடம் (Modern Gym) அமைக்கப்பட உள்ளது என தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் விதி 110-இன்கீழ் வெளியிடப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு விரிவாக செயற்குறிப்பு அனுப்ப அறிவுத்தப்பட்டது எனவும், அதன்படி மண்டலம்-4, வார்டு-41 சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் Sports Acadamy அமைக்க ரூ.9,98,40,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 21.04.2022 அன்று நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் மேற்கண்ட இடத்தின் அருகாமையில் மண்டலம்-4, வார்டு-47-இல் பழைய ஆர்.எஸ்.எண்.1844/2, புதிய ஆர்.எஸ்.எண்.1844/14 (பகுதி) சுமார் 2.66 ஹெக்டேர் (6 ஏக்கர்) தமிழ்நாடு குடிசைமாற்று*

*வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிக்காக 23.12.2015 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஆக்கிரமிப்புடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், இவ்விடத்தின் வடக்கு பகுதியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதால், எல்லை நிர்ணயம் செய்ய தண்டையார்பேட்டை வட்டாட்சியருக்கு 03.03.2017, 15.15.2017, 09.06.2017 மற்றும் 11.08.2017 ஆகிய நாட்கள் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது எனவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.850/2017-இன் மூலம் City Civil Court-இல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது எனவும், மேலும் இவ்விடமானது (Eco Park) Coastal Regulation Zone பகுதியில் வருவதால், அத்துறையின் கருத்துரு பெற்று மேல்நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

அதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களின் 15.12.2022 நாளிட்ட கடிதத்தில், *மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், 33/11 KV துணை மின்நிலையம் மற்றும் வாரிய அலுவலகம் அமைக்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு "ஒதுக்கீடு செய்து தர இயலாத நிலை உள்ளது" என தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர்/மேலாண்மை இயக்குநருக்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டது.*

*இந்நிலையில் இப்பொருள் சம்பந்தமாக 24.12.2022 அன்று முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதில், SLO Please speak. Can we get the land? என மேற்குறிப்பிட்டு மறுபரிசீலனை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 28.12..2022 நாளிட்ட கடிதத்தில், முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களால் மேற்குறிப்பிட்டுள்ளபடி, ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.*O.S.No.4497/2008* மற்றும் கிறிஸ்துவ மத போதனைக்காக ஒதுக்கப்பட்ட இடமென வழக்கு எண். *O.S.No.850/2017*-இன் மூலம் *City Civil Court*-இல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான முழு விவரங்களுடன் முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களிடம் கலந்தாலோசிக்குமாறு முதுநிலை சட்ட அலுவலரையும் மற்றும் மேற்கண்ட வழக்குகள் தொடர்பான உறுதி ஆவணம் *(Affidavit)*, எதிர் உறுதி ஆவணம் *(Counter Affidavit)* மற்றும் *(Eco Park) Coastal Regulation Zone Notification Copy* ஆகியவற்றின் நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு 4-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

4-வது மண்டல அலுவலரின் 04.01.2023 நாளிட்ட கடிதத்தில், *மேற்படி கோரப்பட்டுள்ள நிலுவை வழக்குகள் தொடர்பான உறுதி ஆவணம் (Affidavit), எதிர் உறுதி ஆவணம் (Counter Affidavit) மற்றும் (Eco Park) Coastal Regulation Zone Notification Copy ஆகியவற்றின் நகல்கள் இணைத்து அனுப்பப்பட்டது.*

நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலரின் 13.01.2023 கடிதத்தில், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளது *(Case Disposed)* எனவும், இப்பொருள் சம்பந்தமான புல எண்ணிற்கும், வழக்குகள் சம்பந்தமான புல எண்ணிற்கும் வேறுபாடுகள் உள்ளதாக சட்டக்குழும முதுநிலை சட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்குகள் சம்பந்தமாக முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களுக்கு குறிப்புரை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் முதுநிலை சட்ட அலுவலரை அணுகிட உரிய அலுவலரை அனுப்புமாறு 4-வது மண்டல அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

*இந்நிலையில் ஆர்.கே.நகர் தொகுதியின் கொருக்குப்பேட்டை பகுதி மக்களுக்கு தங்கு தடையில்லாத மின்சாரம் கிடைக்க ஏதுவாக சுண்ணாம்புக்கால்வய் பகுதியில் துணை மின்நிலையம் அமைப்பது முக்கியமான திட்டமாக இருப்பதாக ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் அறிவுறுத்தியுள்ளதன் அடிப்படையில், 4-வது மண்டல அலுவலரின் 15.02..2023 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இடமானது பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 23.12.2015 அன்று புல எண்.1844/2 (பகுதி), புதிய புல எண்.1844/15 (பகுதி)-ல் 2.66*

*ஹெக்டேர் பரப்பளவு இடம் மண்டலத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், அதில் ஒரு பகுதி ஏற்கனவே ஆக்கிரமிப்புடன் மண்டலத்திற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும், இந்த இடத்தில் கீழ்கண்ட இரண்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளது எனவும்,*

1. *O.S.No.4497/2008 filed by Ponnusamy 30 othersregarding unauthorized construction at No.45/B, Bharathi Nagar, 6th Street, Korukkupet, Chennai-21. This case was disposed. (Copy Enclosed).*
2. *O.S.No.850/2017 case filed by Mr.Arthur Robert.*
   *Despite of several chances plaintiff side not commence trial conditional order not complied withno representation on plaintif side till 4.50 p.m. plaintiff call absent hence this suit is dismissed for default. (Copy Enclosed).*

*சர்வே எண். பழைய 1844/2 (பகுதி), புதியது 1844/15 (பகுதி) மீது வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளதா என தெரியவில்லை. மேலும் ஆக்கிரமிப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் உரிய தாக்கீது வழங்கி அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும்,*

*மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் கோரிய இடமானது தற்போது காலியாக உள்ளதால் பொதுக்கள் நலன் கருதி மேற்கண்ட துறைக்கு வழங்க உரிய கோப்புகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*

எனவே, இந்நேர்வில், இத்திட்டத்தை செயல்படுத்த அப்பகுதியில் வேறு அரசுக்கு சொந்தமான காலி நிலங்கள் ஏதும் இல்லாததாலும், அப்பகுதி மக்களின் அத்தியாவசிய மற்றும் அடிப்படை மின்சார தேவையினை பூர்த்திசெய்யும் முக்கியமான திட்டமாக இருப்பதாலும், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்க நில ஒப்படைப்பு சான்றின் *(Land Transfer Certificate)* மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள *சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் கிராமம், மண்டலம்-4, கோட்டம்-47, கொருக்குப்பேட்டை, சுண்ணாம்புக்கால்வாய் பகுதியில் அமைந்துள்ள பிளாக் எண்.31, பழைய புல எண்.1844/2 (பகுதி), புதிய புல எண்.1844/15 (பகுதி)-ல் உள்ள "சர்க்கார் புறம்போக்கு" அடங்கல் கலத்தில் அரசு வருவாய்த்துறை "கழிவு" பயன்பாட்டு மொத்த விஸ்தீரணம் 2.66 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தினில், 33/11 KV கொருக்குப்பேட்டை துணை மின்நிலையம் மற்றும் வாரிய அலுவலகம் அமைக்க நிரந்தர அடிப்படையில் வழங்கவுள்ள 2000 சதுர மீட்டர் (50 m x 40 m) நிலத்திற்கு* வழிகாட்டி விலை மதிப்பின் *(Guideline Value)* அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத்தொகையான (2000 sq.mtr x GLV 14430 = 28860000) ரூ.2,88,60,000/-ஐ (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) முன்நுழைவு செய்த நாள் முதல் ஒரு மாத காலத்திற்குள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தவறும்பட்சத்தில் முன்நுழைவு அனுமதி ரத்து செய்யப்படும் என்ற அடிப்படையிலும், பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும், அப்பகுதி மக்களுக்கு தடையில்லாத மின்சாரம் வழங்கும் இத்திட்டத்தின் அத்தியாவசியத்தினை கருத்திற்கொண்டு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு *(TANGEDCO)* வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.65/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2725/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 14.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:114/2023** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 11, பகுதி-34, வார்டு எண்-155ல் அழகாபுரி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 400 சதுர அடி கொண்ட கட்டிடத்தை ராமாபுரம் தபால் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

முதுநிலை கண்காணிப்பாளர், சென்னை நகர தெற்கு கோட்டம், சென்னை - 600 017 அவர்களின் 15.11.2022 நாளிட்ட கடிதத்தில், ஜுன் 2007 ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளாக ராமாபுரம் தபால் நிலையம் மூலம் அஞ்சல் சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், தற்போது அலுவலகம் இடவசதியின்றி கூட்ட நெரிசலில் தபால் நிலையம் இயங்கி வருவதாகவும், இதனால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதே பகுதியில் உள்ள வேறொரு கட்டிடத்திற்கு தபால் அலுவலகத்தை மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும், தற்போது மண்டலம் - 11, வார்டு எண்-155ல் அழகாபுரி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 400 சதுர அடி கொண்ட அம்மா கிளினிக் கட்டிடம் காலியாக உள்ளது எனவும், அதனை மாத வாடகை அடிப்படையில் ராமாபுரம் தபால் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்வலுவலக 24.11.2022 மற்றும் 04.01.2023 நாளிட்ட கடிதங்களின் மூலம் அறிக்கை கோரப்பட்டதில், மண்டல அலுவலர், மண்டலம் - 11 அவர்களின் 08.02.2023 நாளிட்ட குறிப்பில், மண்டலம் - 11, வார்டு எண்-155ல் அழகாபுரி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 400 சதுர அடி கொண்ட கட்டிடத்திற்கு சந்தை விலையின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது என்றும், இக்கட்டிடம் பிரதான சாலையில் அமையவில்லை, உட்புற சாலையில் இக்கட்டிடம் அமைந்துள்ளதால் இதன் அருகில் அமைந்துள்ள மற்ற வணிக வளாக வகைபாடு கொண்ட கட்டிடத்தினை ஆய்வு செய்தபோது, சந்தை விலையின் வாடகை ஒரு சதுர அடி ரூ.25/- முதல் ரூ.50/- வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளன எனவும் மேலும் ஒரு சதுர அடிக்கு ரூ.50/- நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை ஆய்வு செய்தபோது கழிப்பறை வசதி, கிரானைட் அல்லது மார்பிள் கற்கள் போன்ற வசதிகள் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கான வசதிகள் உள்ளதாகவும், மேலும் மத்திய அரசு துறை சார்ந்த, பொதுமக்கள் சேவைக்கான பயன்பாடாக உள்ளதால், இக்கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.40/- என வாடகை நிர்ணயம் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும், 400 சதுர கட்டிடத்திற்கு ஒரு மாத வாடகையாக ரூ.16,000/- மூன்று வருடத்திற்கு ஒரு முறை சென்னை மாநகராட்சியுடன் ஒப்பந்தம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் 11வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.434/2022, நாள். 19.01.2023யின்படி, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளர்.

எனவே, முதுநிலை கண்காணிப்பாளர், சென்னை நகர தெற்கு கோட்டம், சென்னை - 600 017 அவர்களின் 15.11.2022 நாளிட்ட கடிதத்தின்படி, மண்டலம் - 11, பகுதி - 34, வார்டு எண்-155ல் அழகாபுரி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 400

சதுர அடி கொண்ட கட்டிடத்தினை ராமாபுரம் தபால் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் கட்டிடத்தின் பரப்பளவு = ***400* சதுர அடி** ஆகும்.

**<u>கீழ்கண்ட நிபந்தனையின் அடிப்படையில்</u>**

1. மண்டலம் – *11*, பகுதி – *34*, வார்டு எண்–*155*ல் அழகாபுரி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான *400* சதுர அடி கொண்ட கட்டிடத்தினை ராமாபுரம் தபால் அலுவலகத்திற்கு (ஒரு சதுர அடிக்கு ரூ. *40/-* வீதம்) *400* சதுர அடிக்கு மாதம் ரூ.16,000/- ஆக மாத வாடகை நிர்ணயம் செய்து, *12* மாத வாடகை முன்பணம் ரூ.1,92,000/- செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யவும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் *15%* உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில், தபால் அலுவலகத்திற்கு மேற்படி கட்டடத்தினை ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.32/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**நி.ம.உ.து.ந.க.எண். எல்இ9/1956/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 16.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:115/2023** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 4, வார்டு - 42, சென்னை மாவட்டம், தண்டையார் பேட்டை வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.51, நகர புல எண்.3793/2pt உள்ள 3170 சதுர மீட்டர் (14.21 கிரவுண்ட்) விஸ்தீரணத்தில் "மாநகராட்சி தனி" வகைப்பாடு கொண்ட நிலத்தில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்த வாரியத்தின் பெயரில் நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் 11.08.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், டோபிகானா கோதண்டராமையா தெரு திட்டப்பகுதியில் வசிக்கும் சலவை தொழிலாளர்கள் சுமார் 80 பேருக்கும் மேற்பட்டோர் சிறிய அறையில் தங்கி சலவைத் தொழில் செய்து வருகிறார்கள் என்றும், மேலும் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு அதே இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்திட அறிவுறுத்தலின் பேரில் தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.51, நகர புல எண்.3793/2pt உள்ள 3170 சதுர மீட்டர்(14.21 கிரவுண்ட்) விஸ்தீரணத்தில் "மாநகராட்சி தனி" வகைப்பாடு கொண்ட நிலத்தில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்த மேற்கண்ட நிலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நேர்வில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்திட சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் கிராமம், டோபிகானா கோதண்டராமையா தெரு பிளாக் எண்.51, நகர புல எண்.3793/2pt உள்ள 3170 சதுர மீட்டர்(14.21 கிரவுண்ட்) விஸ்தீரணத்தில் "மாநகராட்சி தனி" வகைப்பாடு கொண்ட நிலத்தினை அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந2) துறை நாள்.17.02.1997-ன் படி, மனை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் பெற்று கொண்டு வாரியத்திற்கு மேற்படி நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திட மாநகராட்சியின் இசைவினை விரைந்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட நிலமானது வருவாய் நிலப்பதிவேட்டில் சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.57, புல எண்.3793/2 பகுதி, விஸ்தீரணம் 3170 சதுர மீட்டர், உரிமையாளர் மாநகராட்சி (தனி) என பதிவாகியுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிலத்தினை துணை ஆணையர்(வமநி) அவர்களால் 07.09.2022 – அன்று கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. புலத்தணிக்கையின் போது மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது, தனிவட்டாட்சியர்/நிமஉது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற் பொறியாளர், வாரிய சார் – ஆய்வாளர் (ம) மாநகராட்சி உதவிப் பொறியாளர், கோட்டம்-42 ஆகியோர் உடனிருந்தனர். புலத்தணிக்கையின் முடிவில் கீழ்கண்ட விவரங்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சமர்ப்பிக்குமாறு துணை ஆணையர்(வமநி) அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

1. மேற்கண்ட 14.21 மனை பரப்பளவு நிலத்தில் அடங்கியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் எந்த எந்த கட்டிடங்கள் இடிக்கப்படாமல் தொடர்ந்து பயன்பாட்டில் இருக்கும் என்ற விவரம்.
2. இதனை தவிர்த்து மீதமுள்ள எவ்வளவு விஸ்தீரணத்தில் எத்தனை குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன என்பது குறித்து விவரம்.
3. மேற்கண்ட புலத்தில் வசித்து வரும் சலவைத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் ஒதுக்கப்படவுள்ள குடியிருப்பு குறித்த விவரம்.

மேற்கண்ட விவரங்களுடன் கூட்டு வரைபடம் (Combined Sketch) தயார் செய்து உடன் இத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, துணை ஆணையர்(வமநி) அவர்களின் 09.09.2022- நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 15.12.2022 நாளிட்ட கடிதத்தில், கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மேற்கண்ட 14.21 மனை பரப்பளவு நிலத்தில் தற்சமயம் ஓய்வறை சிமெண்ட் தகடுகளால் *(AC- Sheet)* ஆன பொது இடம் உள்ளது என்றும், மேலும் அதையொட்டி சலவை தொழிலாளர்கள் துணி துவைப்பதற்கு திறந்தவெளி இடம் மற்றும் *3* சிறிய கோவில்கள் ஆண் மற்றும் பெண்களுக்கு என இரண்டு குளியல் மற்றும் கழிவறை கட்டிடங்கள் உள்ளது என்றும், இந்நிலத்தில் வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட *Total Station Survey.* கட்டப்படவுள்ள குடியிருப்புகளின் வடிவமைப்பு மற்றும் திட்ட வரைப்படம் தயார் செய்ய பரிசீலனை செய்யப்பட்டதில் இங்குள்ள அனைத்து கட்டுமானங்களையும் அகற்றினால் தான் புதிய குடியிருப்புகள் கட்ட இயலும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
2. மேலும், உத்தேசமாக இத்திட்டப்பகுதியில் புதியதாக தரை மற்றும் *6* தளங்களுடன் 150 குடியிருப்புக்கள் இரண்டு கட்டிட தொகுப்புகளாக ஒவ்வொரு குடியிருப்பும் சுமார் *39.90* ச.மீ அல்லது *420* சதுர அடி அளவில் பொது அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியல் (ம) கழிவறையுடன் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், இந்நிலம் மிகவும் சிறியதாக இருப்பதால் கட்டுமான பணிகள் மேற்கொள்ள முழு இடமும் *(14.21* மனை*)* தேவைப்படும். எனவே, இந்நிலத்தின் முழு பரப்பளவையும் த.ந.ந.வா.மே. வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் திட்டம் நிறைவேற்ற இயலும் என்றும், *CMDA* வரைப்பட ஒப்புதல் பெற்றப்பின் வரைப்படத்தில் குறிப்பிடப்படும் திறந்தவெளி இடம் *(OSR)*, உட்புற சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கு என ஒதுக்கப்படும் இடம் ஆகியன சென்னை மாநகராட்சியின் வசம் பின்னர் ஒப்படைப்பு செய்யப்படும்.
3. நிலம் உரிமை மாற்றம் உரிய முறையில் நிறைவடைந்ததும் மண் பரிசோதனை செய்தபின், கட்டுமானத்தின் செலவீன மதிப்பீடு தயார் செய்யப்படும். அவ்வாறு தயார் செய்யப்படும் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் மானியம் போக மீதம் தேவைப்படும் தொகையை மாநகராட்சியோ (அ) பயனாளிகள் தங்களின் பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும் என்றும், மேலும் இத்திட்டத்திற்கு முறையாக கணக்கெடுப்பு செய்து பயனாளிகளின் சம்மத கடிதம் பெறப்படவேண்டும் என்றும், ஏனெனில், இங்கு வசித்து வரும் சலவைத் தொழிலாளர்களுக்கு சென்னை மாநகராட்சியின் மூலம் தான் ஓய்வறை ஒதுக்கீடு செய்து கட்டப்பட்டு, வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்கின்ற விவரம் வாரியத்தால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் மேற்காணும் நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்து மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்படி திட்டப்பகுதியில் முழு பரப்பளவு நிலமும் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் பட்சத்தில் அங்கு குடியிருப்பவர்கள் சலவை செய்யும் தொழில் எப்படி தொடர இயலும் என்ற விவரத்தை தெரிவிக்குமாறு, *26.12.2022* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் *10.02.2023* நாளிட்ட கடிதத்தில், சென்னை மாநகராட்சி வார்டு எண்.*42*, மண்டலம்-*4*, தண்டையார்பேட்டை வட்டம் (ம) கிராமம், டோபிகானா கோதண்டராமையா தெரு, பிளாக் எண்.*51*, நகர புல எண்.*3793/2 pt* உள்ள *3170* சதுரமீட்டர் *(14.21* கிரவுண்ட்*)* விஸ்தீரணத்தில் "மாநகராட்சி

தனி" வகைபாடு கொண்ட நிலத்தில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்த நிலத்தில் *Total Station Survey* செய்யப்பட்டு, முறைப்படி நில வரைப்படம் தயார் செய்யப்பட்டதாகவும், அந்த வரைப்படத்தின்படி தற்சமயம் இங்குள்ள சலவைத் தொழிலாளர்கள் திட்டப்பகுதியின் நடுவே 178.70 ச.மீ. (அ) 1923 சதுர அடி விஸ்தீரணத்தில் மட்டுமே சலவை தொழில் செய்து வருகிறார்கள் என்றும், இத்திட்டப்பகுதியில் வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட உத்தேச வரைபட தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், இங்கு இரண்டு கட்டிட தொகுப்புகளாக தரை மற்றும் 6 தளங்களுடன் 150 குடியிருப்பு கட்டுவதற்கும். OSR நிலம் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு PP1, PP2, PPS (Public purpose). என ஒதுக்கப்பட்டுள்ள மூன்று இடங்கள் முறையே 184.56 சமீ, 241.30 சமீ, 106.19 ச.மீ.என ஆகமொத்தம் விஸ்தீரணம் 532.05 ச.மீ அல்லது 5726.98 சதுர அடி ஆகும். எனவும், இவ்விடத்தை இங்கு வசிக்கும் சலவைத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலுக்கென பயன்படுத்திக்கொள்ள இயலும் எனவும், அதனடிப்படையில் இவ்விடத்தில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்த வாரியத்தின் பெயரில் நிலஉரிமை மாற்றம் செய்ய மன்ற தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.35 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.17.02.1997- ஆம் நாளிட்ட அரசாணையில் நகராட்சி (ம) மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு (ம) அரசுத் துறை சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் எனவும், குடிசைகள் மூலம் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்து பல ஆண்டுகளாக இருக்குமேயானால் மட்டும் அந்த நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மட்டும் தேவையெனில், அவ்வாரியத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற சலுகைவிலை அடிப்படையில் பெற்றுக்கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மேற்கண்ட நிலமானது ஆக்கிரமிக்கப்பட்ட மாநகராட்சி (தனி) நிலம் என்பதால் இந்நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரைய அடிப்படையில் நிலக்கிரயத் தொகை பெற்றுக்கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம்.

எனவே, மண்டலம் - 4, வார்டு - 42, சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.51, நகர புல எண்.3793/2*pt* உள்ள 3170 சதுர மீட்டர் (14 மனை 522 சதுர அடி) விஸ்தீரணத்தில் "மாநகராட்சி தனி" வகைப்பாடு கொண்ட நிலத்தில் **"டோபிகானா கோதண்டராமையர் தெரு"** திட்டப்பகுதிக்காக அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரைய அடிப்படையில் நிலக்கிரயத் தொகை பெற்றுக்கொண்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு,

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள சாலைகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள் (பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டப்பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டின் கீழ் சாலைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலேயே இருக்கும்.
3. இத்திட்டப் பகுதியில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் 25 விழுக்காடு பெருநகர சென்னை மாநகராட்சி 4-ஆம் தர சிப்பந்திகளான துப்பரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

4. இத்திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்புகளுக்கான பங்களிப்பு தொகையினை பயனாளிகளிடம் வசூலித்துக்கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.41/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/2128/2004**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 03.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:116/2023** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம் -5, வார்டு - 63, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.45 & 46, புல எண்.1329/1 பாகம், 1353/1 பாகத்திலுள்ள 20 மனை 1648 ச.அடி பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) நிலம் கொய்யா தோப்பு திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு அனுமதி.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநரின் 01.06.2017 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், எழும்பூர் கிராமம், புல எண்.1329/1 மற்றும் 1353/1-ல் 2 காணி, 21 கிரவுண்டு, 1682 ச.அடி பரப்பில் கொய்யாத்தோப்பு அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிலம் மாநகராட்சி தனி நிலம் என வகைப்பாடு கொண்டுள்ளதால் இந்நிலங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து இவ்வாரியத்திற்கு பெற்றுள்ளதாகவும், தற்போது சுமார் 30 வருடங்களாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வசம் மேற்படி நிலம் உள்ளதால் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வழி முறையாக வரப்பெற்றுள்ளதால் இதற்கு வாரிய தீர்மானமோ, ஆவணங்களோ இல்லை என்பதால் மேற்கண்ட நிலத்தை இவ்வாரியத்திற்கு மாற்றம் செய்வதற்கு மாநகராட்சியின் இசைவினை காலம் தாழ்த்தாமல் விரைவில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிலங்கள் வீட்டு வசதி வாரியத்திற்கு ஏற்கனவே ஒப்படைத்துள்ளதாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. ஆனால் இந்நிலங்கள் எந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கு முறையான ஆவணங்கள் ஏதும் இணைக்கப்படவில்லை. மேற்படி நிலங்கள் கிரயத்திற்கு பெற்ற சென்னை மாநகராட்சி தனி நிலங்கள் என்பதால் நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு தான் ஒப்படைக்க இயலும், என்றும் நிலக்கிரயமின்றி இவைகள் வழங்கப்பட்டால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதுடன் பிற்காலத்தில் தணிக்கை தடை ஏற்படவும் வாய்ப்பு உள்ளதால் மேற்படி நிலத்திற்கான நிலக்கிரயத் தொகையை வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டிருந்தால் அதற்கான ஆவணங்களை இத்துறைக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் இந்நிலத்தை வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்ற விவரத்தை இவ்வலுவலக 30.06.2017 நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

அரசு செயலாளர்/வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்கள் தலைமையில் 15.03.2005 அன்று நடைப்பெற்ற உயர்மட்ட குழு கூட்டத்தில் கீழ்கண்டவாறு முடிவுவெடுக்கப்பட்டன.

i. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழிமுறையாக கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள 13 இடங்களிலுள்ள சென்னை மாநகராட்சி தனி நிலங்களுக்குண்டான கிரயத்தொகையினை சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டதற்கான ஆவணங்களை வாரியத்தால் அளிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய மன்றத்தீர்மானம் பெற்று அனுப்பிடல் வேண்டும்.

ii. நிலக்கிரயம் செலுத்தியதற்கு ஆவணங்கள் அளிக்கப்படாத இடங்களிலுள்ள நிலங்களை மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரைய அடிப்படையில் நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்திட மன்றத்தீர்மானம் பெற்றிடல் வேண்டும்.

இந்நிகழ்வில் மேற்கண்ட 13 திட்டப்பகுதியில் ஒன்றான கொய்யா தோப்பு திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் திட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் 40 வருடங்களுக்கு மேலான காரணத்தினாலும், தற்போது இக்குடியிருப்பானது பழுதடைந்த காரணத்தினாலும், இதனை இடித்து விட்டு மறு கட்டுமானம் செய்யும் பொருட்டு பெருநகர வளர்ச்சி குழுமத்தில் ஒப்புதல் பெற மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு வாரியத்தால் கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் 29.12.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் சென்னை மாவட்டம், எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டம் (ம) கிராமம் "கொய்யாத் தோப்பு" திட்டப்பகுதி, புல எண்.1329/பகுதி, 9 மனை 1858 சதுரடி (ம) 1353/பகுதி 10 மனைகள் 2190 சதுரடி மாநகராட்சி (தனி) நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூபாய் 10,000/- வீதம் ரூ.2,06,867/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று அறுபத்தி ஏழு மட்டும்) இத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த உத்தர விடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்கண்ட நிலக்கிரயத்தொகை ரூ.2,06,867/- யினை வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி என்ற பெயரில் வரைவு காசோலையாக வாரிய நிர்வாகப் பொறியாளரால் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு பற்றுச் சீட்டு பெறப்பட்டது. (பற்றுச் சீட்டு எண். V/2022 – 23 /0042302 நாள்.30.01.2023.)

எனவே, மண்டலம் – 5, வார்டு – 63, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.45, புல எண்.1329/1 பகுதி விஸ்தீரணம் 9 மனை 1858 ச.அடி (ம) பிளாக் எண்.46, புல எண்.1353/1 பகுதி விஸ்தீரணம் 10 மனை 2190 ச.அடி ஆக மொத்தம் 20 மனை 1648 ச.அடி பரப்பளவுடைய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) நிலத்தினை "கொய்யா தோப்பு" திட்டப்பகுதிக்காக மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயத் தொகையாக ரூ.2,06,867/- யினை வாரியத்தால் செலுத்தப்பட்டதை தொடர்ந்து கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு,

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள சாலைகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள் (பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டப்பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டின் கீழ் சாலைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலேயே இருக்கும்.
3. இத்திட்டப்பகுதியில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் 25 விழுக்காடு பெருநகர சென்னை மாநகராட்சி 4-ஆம் தர சிப்பந்திகளான துப்பரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்

மேற்படி இந்நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.31/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/02812/2022**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 23.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:117/2023** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - திருமதி. G.V. நாகவள்ளி, 88வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் அவர்கள் அளித்த கடிதம் - மண்டலம் 7, கோட்டம் 88, *Ward-I Block No 27, TS No-97/1 (Town Survey Number)* விஸ்தீரணம்:1400 சதுர மீட்டர்கள்- புதிய மாதிரி பள்ளி ஒன்றை கட்ட முன் நுழைவு அனுமதி வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி.**

திருமதி. *G.V.* நாகவள்ளி, 88வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் அவர்களால் மாண்புமிகு மேயர் அவர்களிடம் 21.11.2022 மற்றும் 13.02.2023 நாளிட்டு அளிக்கப்பட்ட கடிதத்தில், 28.11.2022 அன்று நடைபெற உள்ள மாமன்ற கூட்டத்திற்கான கேள்வி *2*-ல் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, வார்டு 88க்கு உட்பட்ட டிவிஎஸ் நகர் 5வது தெரு, குமரன் நகரில் அமைந்திருக்கும் மகாத்மா காந்தி சாலை மற்றும் சிடிஎச் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் ருத்ர பூமி மற்றும் சுடுகாடு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த இடங்கள் நீண்டகாலமாக எவ்வித பயன்பாடுமின்றி காலியாக இருப்பதால், ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. அதனால், இப்பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பூங்காக்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு தேவையான கட்டிடங்கள் கட்ட இந்நிலங்களின் வகைப்பாட்டை மாற்ற *DRO Land & Estate* அவர்களின் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படுமா? என வினா எழுப்பப்பட்டுள்ளது.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள நிலங்கள் மண்டலம்-7ஐ சார்ந்தது என்பதால், மேற்படி பொருள் சம்பந்தமான விரிவான அறிக்கையினை *(Detailed Remakrs)* உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்ப கோரி மண்டல அலுவலர் 7 அவர்களுக்கு 24.11.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக மண்டல அலுவலர் 7 அவர்களின் 21.12.2022 நாளிட்ட குறிப்பில் கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை எண்.01:**

*Ward-I Block No 27, TS No-97/1 (Town Survey Number)* விஸ்தீரணம்:1400 சதுர மீட்டர்கள் ருத்திர பூமி என வகைபடுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**அறிக்கை எண்.02:**

*Ward - I Block No – 27, TS No - 97/2 (Town Survey Number)* விஸ்தீரணம்:*1520* சதுர மீட்டர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு என வகைபடுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

*T.S. No*-97/1, 1400 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலம் உரிமையாளராக, பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் மாற்றப்பட்டு வகைபாடு ருத்திர பூமி என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலமானது இணை இயக்குநர், நகர திட்டமைப்பு அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபட அங்கீகார எண்: *LPH / PTP. No: 105 /* 64ன் படி திறந்தவெளி மைதானம் அமைக்க *(OSR LAND*) வகைபாடு ஆகும். நிலம் பள்ளி மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்க ஒதுக்கப்பட்ட மனைபிரிவு என்பதால் *RC.No. 7991/2015, date: 24.06.2021* அறிக்கையில், பிளாக் 27, புல எண் 97/1, *265 PART* சர்க்கார் புறம்போக்கு ருத்திர பூமி என நில அளவை பதிவேட்டில் பதிவு செய்துள்ளதை மாற்றி பெருநகர சென்னை மாநகராட்சி பொது காலி நில வகைபாட்டினை பதிவு செய்து நிலம் வழங்குவதற்கான அறிக்கையை திருத்தப்பட்ட அளவில் *(Land Delivery Receipt)* வழங்கிட கேட்டும் இரண்டு கடிதங்கள் *22.07.*2022 மற்றும் *24.11.*2022 ஆகிய தேதிகளில் கோட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம், சென்னை-*600053* அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும்,

ஆனால் இதுநாள் வரையில் அங்கிருந்து பதில் கடிதமோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி பொது காலி நிலம் என வகைபாட்டினை பதிவு செய்து நிலம் வழங்குவதற்கான அறிக்கையோ மண்டலம்-7 அம்பத்தூர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை.

ஆகவே, இந்நிலைப்பாட்டில் குமரன் நகர், மகாத்மா காந்தி சாலையில் உள்ள நிலத்தில் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பள்ளிக்கூடம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்கும் இடங்கள் தீர்ப்பு ஏற்பட்ட பின்னர் கோட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம், அவர்கள் வழக்கின் *Land Delivery Receipt* ருத்திரபூமி என வகைபடுத்தப்பட்டதை மாற்றி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடமையான காலி இடம் என திருத்தம் செய்து *Land Delivery Receipt* அறிக்கைக்கு கோரப்பட்டுள்ளது எனவும்,

டிவிஎஸ் நகர் 5வது தெரு மற்றும் சி டி எச் சாலை (பாண்டுரங்கபுரம்) உள்ள காலி மனைகள் ருத்திர பூமி என வகைப்படுத்தப்பட்டுள்ளது என தெரியவருகிறது. இதற்குண்டான *Land Delivery Receipt* மற்றும் பட்டா ஆகிய விவரங்கள் வருவாய் ஆய்வாளர், அம்பத்தூர் வட்டம் அவர்களால் அளிக்கப்பட வேண்டும் எனவும் மண்டல அலுவலர் 7 அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் / நி.ம.உ.து. அவர்களின் 10.01.2023 நாளிட்ட மேற்குறிப்பின் அடிப்படையில், நிலம் மற்றும் உடைமைத்துறையின் இருக்கை எழுத்தர் / எல்.இ.5 அவர்களின் இப்பொருள் சம்பந்தப்பட்ட கோப்பு எண். நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ5/959/2022 என்ற கோப்பினை பரிசீலனை செய்ததில், மாண்பமை உயர்நீதிமன்ற வழக்கு எண்.*W.P.No.115*93/2017, நாள்:14.09.2018 ஆணையில் புல எண்.97/1 பற்றிய குறிப்பு ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், 24.06.2022 நாளிட்ட *Land Delivery Receipt*-ல் *Ward I, Block No.27, T.S.No.97/1,* 1400சதுரமீட்டர் அம்பத்தூர் வருவாய் ஆய்வாளர் அவர்களால் இளநிலை உதவியாளர், கோட்டம் 88 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. இணைய வழி மூலமாக பெறப்பட்ட நகர நில அளவை பதிவேட்டு சான்றிதழில் அடங்கல் கலத்தில் ருத்திரபூமி எனவும், சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கோரிய பெருநகர சென்னை மாநகராட்சி பெயருக்கு மாற்றம் செய்வது தொடர்பாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம் என துணை ஆணையர் (வமநி) அவர்களின் 14.01.2023ன் கருத்துரையின்படி 20.01.2023 நாளிட்ட கோப்பு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், கடந்த 24.11.2022 அன்று நடைபெற்ற மண்டல வார்டு குழு கூட்டத்தில் குமரன் நகர் திறந்தவெளி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், மண்டலம் 7ற்கு முன் அனுமதி நுழைவு ஒப்புதல் வேண்டி 03.02.2023 நாளிட்ட குறிப்பு இவ்வலுவலகத்தால் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் எண்.22, மண்டல வார்டு குழு தீர்மான எண்.350ல் மண்டலம் 7, பகுதி 19, வார்டு 88, குமரன் நகர், மகாத்மா காந்தி ரோட்டில் அமைந்துள்ள தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான ருத்ரபூமி வகைப்பாட்டில் உள்ள புதிய சர்வே எண்.97/1, கிராம சர்வே எண்.265 கொண்ட நிலம் 1964 ஆம் ஆண்டிலேயே பாடி கிராம பஞ்சாயத்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த நிலத்திற்கு பதிலாக ரெட்டியார் சமூகத்திற்கு டிவிஎஸ் நகர் 5வது தெருவில் (கிராம சர்வே எண்.254/1) நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிவிஎஸ் நகர் 5வது தெரு, கிராம சர்வே எண்.254/1 என்ற நிலத்தின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையை அளிக்குமாறு தெரிவித்து 10.02.2023 நாளிட்ட கடிதம் மண்டல அலுவலர் 7 அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், திருமதி. *G.V.* நாகவள்ளி, 88வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் அவர்கள் அளித்த 13.02.2023 நாளிட்ட கடிதத்தில், அங்கீகாரம் பெற்று ஒதுக்கப்பட்ட மனை பிரிவுகளாக எண்.*LPH/DT, No.105/64*ன் வரைபடத்தில் உள்ளபடியும், உயர்நீதிமன்ற வழக்கு எண். *WP.No. 11593/2017*, நாள்:14.09.2018ன்படி மேற்படி புல எண்.97/1, பள்ளி

மற்றும் விளையாட்டு மைதானம் பெருநகர சென்னை மாநகராட்சி என வழங்கப்பட்டதை தொடர்ந்து, மண்டலம் 7, கோட்டம் 88, *Ward-I Block No 27, TS No-97/1 (Town Survey Number)* விஸ்தீரணம்:1400 சதுர மீட்டர்கள் அடங்கலில் ருத்ர பூமி என்றும், நகர நில அளவை பதிவேட்டில் ஷரா கலத்தில் பள்ளி விளையாட்டு மைதானம், பெருநகர சென்னை மாநகராட்சி என திருத்தம் செய்ய மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.செ.மு.எண்.அ5/4150/2018, நாள்:22.06.2022ன் படி ஆணை வழங்கப்பட்டதனை அடுத்து 24.06.2022 நாளிட்ட *Land Delivery Receipt*ன்படி அம்பத்தூர் வருவாய் ஆய்வாளர் அவர்களால் இளநிலை உதவியாளர், கோட்டம் 88 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது அந்நிலத்தில் பள்ளி கட்டிடம் கட்ட நீதிமன்ற உத்தரவு பிறப்பித்திருப்பதை அடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புதிய மாதிரி பள்ளி ஒன்றை கட்ட முன் நுழைவு அனுமதியை பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள மாமன்ற கூட்டத்தில் வைத்து பெற்று தர ஆவண செய்யுமாறு கோரியுள்ளார்.

ஆனால், இணையவழி *Permanent Land Register*-ல் *Ward-I Block No 27, TS No-97/1 (Town Survey Number)* அடங்கல் கலத்தில் ருத்திரபூமி என வகைப்பாடு மாற்றம் செய்யப்படாமல் உள்ளது.

மேலும், மண்டல அலுவலர் 7 அவர்களின் 21.02.2023 நாளிட்ட குறிப்பில், மாண்பமை உயர்நீதிமன்ற வழக்கு எண்.*W.P. No.11593/2017, 14.09.2018* நாளிட்ட தீர்ப்பாணையில், இவ்விடம் முழுக்க முழுக்க பள்ளி மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்க அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் விஸ்தீரணங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இதனை தவிர்த்து வேறு பயன்பாட்டிற்கு கொண்டு வர வழிவகை இல்லை மற்றும் இங்கு ஏதேனும் ஆக்கிரமிப்புகள் இருந்தால், அவைகளை சம்மந்தப்பட்ட துறை நடவடிக்கை எடுத்து அகற்றலாம் என தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது எனவும், ருத்திரபூமி என நில அளவை பதிவேட்டில் பதிவு செய்துள்ளதை மாற்றி பெருநகர சென்னை மாநகராட்சி பொது காலி நில வகைபாட்டினை பதிவு செய்து நிலம் வழங்குவதற்கான அறிக்கையை திருத்தப்பட்ட அளவில் *(Land Delivery Receipt)* வழங்கிட கேட்டு அம்பத்தூர் கோட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், 24.11.2022 அன்று நடைபெற்ற மண்டல வார்டு குழுக்கூட்டத்தில் குமரன் நகர் திறந்தவெளி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாமன்றம் ஒப்புதல் வேண்டி வார்டு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றபட்டது எனவும்,

மேற்படி ருத்ரபூமியில் இந்நாள்வரை எந்தவித மயானம் (எரித்தல் மற்றும் புதைத்தல்) நிகழ்வுகள் நடைபெறவில்லை எனவும், குமரன் நகர் திறந்தவெளி நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7க்கு முன் நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், *Ward-I Block No 27, TS No-97/1 (Town Survey Number)* ல் அமைந்துள்ள "ருத்திரபூமி" வகைப்பாடு கொண்ட நிலத்தின் விஸ்தீரணம்:1400 சதுர மீட்டர்கள் புதிய மாதிரி பள்ளி ஒன்றை கட்ட முன் நுழைவு அனுமதி வழங்க பள்ளி மற்றும் விளையாட்டு மைதானம் பெருநகர சென்னை மாநகராட்சி என மாற்றம் செய்ய ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவிப்பதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.61/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**மக.கு.நக.எண். அ7/94 / 2023**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் *25.01.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:118/2023** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் –*2006*- ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் – அலுவலர்களுக்கான 01.01.2023 முதல் திருத்தியமைத்த அகவிலைப்படி வீதங்கள் குறித்து - அரசாணை வெளியிடப்பட்டது- அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.*8*, நிதி (படிகள்)த் துறை, நாள்:*06-01-2023* ன்படி, 2006 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு அகவிலைப்படிகளின் வீதங்கள் 01.01.2023 முதல் திருத்தியமைத்து, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசாணையின் விவரம்கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது:-**

**நிதி (படிகள்)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 8, நாள்: 06. 01 .2023**

*(சுபகிருது, மார்களி-22, திருவள்ளுவர் ஆண்டு 2053)*

**சுருக்கம்**

படிகள் 01.01.2023 முதல் 2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதங்கள் - ஆணைகள்- வெளியிடப்படுகின்றன.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும்:-

அரசாணை (நிலை) எண்.255, நிதி (படிகள்)த் துறை, நாள்.18.08.2022.

*oOo*

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் *2016*-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படிகளின் வீதங்கள் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன:-

| *2006*-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள் | | *2016*-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம் | |
|---|---|---|---|
| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) | எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| *01.07.2022* | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 381 சதவீதம் | *01.07.2022* | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 203 சதவீதம் |

2. முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்.கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதங்களில் அகவிலைப்படிகளை அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

| 2006-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள் | | 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/ தர ஊதியம் | |
|---|---|---|---|
| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) | எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
| (1) | (2) | (3) | (4) |
| 01.01.2023 | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 396 சதவீதம் | 01.01.2023 | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 212 சதவீதம் |

3. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி 01.01.2023 முதல் ரொக்கமாக வழங்கப்படும். மேலும், 01.07.2022 முதல் 31.12.2022 வரை அகவிலைப்படியானது 2006 -ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்கள் மற்றும் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம் முறையே 381 சதவீதம் மற்றும் 203 சதவீதமாக தொடர்ந்து இருக்கும்.

4. ஜனவரி 2023 முதல் அகவிலைப்படி தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

5. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் 303, அகவிலைப்படி என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

6. இதற்கான பட்டியல்கள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. முருகானந்தம்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

அ) அரசாணை (நிலை) எண்.8 நிதி (படிகள்)த்துறை, பெருநகர சென்னை மாநகராட்சியின், மன்றத்தின் அனுமதி பெற்று நிறைவேற்றப்பட வேண்டும், ஆனால் சென்னை மாநகராட்சியின் ஜனவரி மாத மன்றக் கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள நிலையில், தற்போது ஜனவரி 2023ம் மாதம் ஊதியத்துடன் அகவிலைப்படி வழங்கவேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதி பெற இயலாதபடியால், இப்பொருளின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, இவ்வரசாணையை நடைமுறைப்படுத்துவதற்கு, முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 19.01.2023 அன்று அனுமதி பெறப்பட்டு, இப்பொருள் தொடர்பாக மேல்நடவடிக்கைகளை தொடர அறிவுறுத்தி, அனைத்து வட்டார அலுவலகங்கள் (வ/ம/தெ), அனைத்து துறைகள் மற்றும் மண்டலம் 1 - 15 வரையில் 19.01.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு இவ்வரசாணை நடைமுறைப்படுத்தப்பட்டது

ஆ) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.8 நிதி (படிகள்)த்துறை, நாள்.06.01.2023ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.33/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

<u>ம.க.கு.ந.க.எண். அ7/205/2023</u>

<u>முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் *05.02.2023* நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:119/2023** **பொருள் எண்.39**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) *01.01.2023* முதல் *31.03.2023* வரை *(Q4)* உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் *7.1%* (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) என நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.</u>**

அரசாணை (நிலை) எண்.21, நிதி (படிகள்)த் துறை, நாள்.23.01.2023ல் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதிக்கு (2022-2023) 01.01.2023 முதல் 31.03.2023 வரை *(Q4)* உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.21, Dated 23rd January, 2023.**
*(Subakiruthu, Thai-9, Thiruvalluvar Aandu 2054)*

**ABSTRACT**

**Provident Fund -** General Provident Fund(Tamil Nadu) - Rate of interest for the Financial year 2022-2023—With effect from 01.01.2023 to 31.03.2023 - Orders - Issued

---

**Read the following:-**

1. G.O Ms. No. 109, Finance (Allowances) Department, dated 19.04.2022.
2. G.O Ms. No. 227, Finance (Allowances) Department, dated 26.07.2022.
3. G.O Ms. No. 335, Finance (Allowances) Department, dated 22.10.2022
4. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(4)-B(PD) / 2021, dated:03.01.2023.

-OOO-

**<u>ORDER:</u>**

In the Government Order first, second and third read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of G.P.F. (TN) during the financial year-2022-2023 as detailed below:

| Sl.No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1 | I | 01-04-2022 to 30-06-2022 | 7. l% |
| 2 | II | 01-07-2022 to 30-09-2022 | 7. l% |
| 3 | III | 01-10-2022 to 31-12-2022 | 7.1% |

**2.** The Government of India, in its resolution fourth read above, announced that during the financial year 2022-2023, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st - January 2023 to 31st March -2023(Q4).

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of 7**.1%** (Seven point one percent) with effect from 1st January -2023 to 31st March -2023(Q4).

**4.** The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**எனவே, அரசாணை (நிலை)எண்.21, நிதி(படிகள்)த்துறை நாள்:23.01.2023ஐ பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"27.02.2023 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **கூட்டத்தில் தீர்மான எண்.**34/2023, **நாள்.**27.02.2023**ன்படி இதற்கு நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**<u>பொ.து.ந.க.எண்.பி15/ 00013 /2023</u>**

**<u>முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:120/2023** **பொருள் எண்.40**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2023 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.</u>**

அரசாணை (நிலை) எண். 10, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள். 06.01.2023-ன்படி மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2023 ஆம் நாள் முதல் அகவிலைப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட 34 விழுக்காட்டிலிருந்து 38 விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் தவணை அகவிலைப்படியினை 01.01.2023 முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படவேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும், அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் டிசம்பர் 2022 நிலவரப்படி 8226 ஓய்வூதியர்கள் 7561 குடும்ப ஓய்வூதியர்கள் என மொத்தம் 15787 உள்ளனர். இவ்வரசாணையை இவர்களுக்கு நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க, தோராயமாக ஒரு மாதத்திற்கு ரூ. 89 இலட்சம் கூடுதல் செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு (2022-23) (01.01.2023 முதல் 31.03.2023 வரை) மட்டும் தொகை ரூ. 2.66 கோடி கூடுதல் செலவாகும். மேலும் வரும் நிதி ஆண்டு 2023-2024 க்கு ரூ. 10.62 கோடி கூடுதலாக செலவாகும்.

எனவே, அரசாணை நிலை எண். 10 நிதித் (ஓய்வூதியம்) துறை, 06.01.2023 அரசாணையை நடைமுறைபடுத்தி பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி 34 விழுக்காட்டிலிருந்து 38 விழுக்காடாக 01.01.2023 ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 2023 ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் வழங்க முதன்மை செயலர் (ம) ஆணையர் அவர்களின் 12.01.2023 நாளிட்ட குறிப்பின் மூலம் ஆணை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.35/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**பொ.து.ந.க.எண்.பி15/ 001023 /2023**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 25.01.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:121/2023** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - ஓய்வூதியம் - பொங்கல் பண்டிகை 2023 - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் அரசாணை வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகை ரூ.500/- வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

அரசாணை எண்.0374, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்.26.12.2022-ன்படி C மற்றும் D பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து C மற்றும் D பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc Pensioners of all categories) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும்/ பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும், ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேற்படி பரிசுத் தொகை ஏற்கனவே தற்காலிக ஓய்வூதியம் பெற்று வரும் C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என்றும், 26.12.2022 நாளன்றோ அதற்கு பின்னரோ பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கும் 01.01.2022 நாளன்றோ அதற்கு பின்னரோ பணியிலிருக்கையில் இறக்கும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகை அனுமதிக்கத்தக்கதல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

3) மேலும் 01.01.2022 நாளன்று வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில் அரசாணை (நிலை) எண்.373, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 26.12.2022ன்படி அவர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின் அவர்கள் இந்தப் பொங்கல் பரிசுத் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள் இதற்காக இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்து சான்றிதழைப் பெறப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மேலும் இந்த ஆணை, பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது எனவும் குறிப்பிட்டுள்ளது:-

அ. உலேமா உதவித்தொகைகள், மாநில சுதந்திர போரட்ட வீரர்களுக்கான உதவித்தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்.

ஆ. பணியில் இருக்கும் பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவாறான தற்காலிக மிகை ஊதியம் (Ad-hoc Bonus) / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் (Special Ad-hoc Bonus) பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

இ. A மற்றும் B பிரிவு பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்து அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்திந்திய பணி அலுவலர்கள், பல்கலைக்கழக மானியக்குழு/ அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கட்டுபாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் உட்பட.

பெருநகர சென்னை மாநகராட்சியில் *2022* டிசம்பர் மாத கணக்கின்படி ஓய்வூதியர்கள் *8289* / குடும்ப ஓய்வூதியர்கள் *7593* என மொத்தம் *15882* நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு அரசாணைப்படி பொங்கல் பரிசுத் தொகை பெற தகுதியான *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியதாரர்கள் *7408* நபர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் *5652* நபர்கள் என மொத்த நபர்கள் ***13060*** என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நடைமுறைப்படுத்தி பொங்கல் பரிசுத் தொகையாக ***13060 x 500*** வீதம் வழங்கும் பட்சத்தில் சுமார் ரூ.*65,30,000/-* (ரூபாய் அறுபத்தைந்து லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை பத்தி *8*-இல் அனுமதிக்கப்பட்ட *2023* ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசாக ரூ.*500/-* (ரூபாய் ஐநூறு மட்டும்) பெற்று வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தகுதியான *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஜனவரி *2023* மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.36/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்1/1508/2017**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் *13.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:122/2023** **பொருள் எண்.42**

**வணிகவளாகம் - பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, கோட்டம்-*60* - இராஜாஜி சாலையில் அமைந்துள்ள வணிகவளாக கடைகளுக்கு அரசாணையின்படி கடந்த 2017 முதல் ஒரு சதுரடிக்கு ரூபாய்:- *60/-* வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்தது - பர்மா தமிழ் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்கள் வழக்கு தொடுத்தனர் - வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் ரூபாய் *60/-* என நிர்ணயம் செய்தது சரியே என அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு - ஆணை வழங்கப்பட்டது - பர்மா தமிழ் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்கள் மீண்டும் முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களிடத்தில் மேல் முறையீடு செய்தது - மேல் முறையீட்டின் அடிப்படையில் முடிவெடுத்தல் - மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-*60*, இராஜாஜி சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் சுமார் 796 கடைகளுக்கு மாத வாடகை ஒரு சதுரடிக்கு ரூபாய்.*60/-* என நிர்ணயித்து கடந்த 2017 முதல் மாற்றியமைத்து வாடகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொண்ட சமயத்தில் பர்மா தமிழ் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்களால் மாண்பமை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அவ்வழக்கு விசாரணையில் கடந்த 02.08.2021 அன்று பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

*Taking into consideration the facts and circumstances of the case and the specific stand taken on either side and without going into the merits of the case, there shall be a direction to the representative of the petitioner association to go over to the office of the 2 nd respondent on 11.08.2021 at 11.30 a.m. The representative shall present the representation of the members of the association along with all the relevant materials. The 2 nd respondent shall consider the same and after conducting a physical verification, shall take a final decision in consultation with the 1 st respondent, within a period of eight weeks thereafter and convey the decision to the petitioner association.*

*This writ petition is disposed of with the above directions. No costs. Consequently, the connected writ miscellaneous petition is closed.*

மேற்கண்ட ஆணைக்கிணங்க மண்டலம்-5ன் உதவி வருவாய் அலுவலர் மூலமாக மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணையின்படி 11.08.2021 அன்றும் அதனை தொடர்ந்து 21.10.2021 அன்று சங்க உறுப்பினர்களை அழைத்து வாடகை உயர்வு குறித்து உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டது. அதில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படாத நிலையில் நிலுவையில் உள்ளது. கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கனமழையின் காரணமாக இக்கோப்பின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. மேலும் அதனை தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளால் அக்கோப்பின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. தற்போது அக்கோப்பின் நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு 25.07.2022 அன்று சங்க உறுப்பினர்களுடன் இறுதியாக ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்கண்ட, கலந்தாய்வு கூட்டத்தில் சங்க உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட வாடகை குறைப்பு குறித்த விவரங்கள் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில் தெரிவிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான வருவாயான சொத்துவரி வசூல், தொழில்வரி வசூல், தொழில் உரிமகட்டண வசூல், கேளிக்கைவரி வசூல், நிறுமனவரி வசூல் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகளுக்கான மாத வாடகை வசூல்.

இவ்வசூலை கொண்டு மாநகராட்சியானது பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான பொது சுகாதாரம், தூய்மை பணிகள், வளர்ச்சிப்பணிகள், மேம்பாலம் கட்டுதல், பூங்காக்கள் அமைத்தல், தெரு மின்விளக்குகளை பராமரித்தல், இயற்கை பேரிடர் காலங்களில் நிவாரண பணிகள் மேற்கொள்ளுதல், பெருந்தொற்று காலங்களில் மருத்துவ முகாம் அமைத்து பொது மக்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்தல், ஆகிய பணிகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட வருவாயின் அடிப்படையிலேயே மேற்கொண்டு வருகிறது.

சென்னையின் பிரதான பகுதியான இராஜாஜி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாகம் சுமார் 796 கடைகள் கொண்டதாக அமையப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு கடந்த 1984 முதல் ஒரு கடைக்கான வாடகை ரூபாய் 20/- லிருந்து சிறுக சிறுக உயர்த்தப்பட்டு வந்தது. கடைகளின் அளவீடுகள் வேறுப்பட்ட நிலையில் அனைத்து கடைகளுக்கும் ஒரே மாதிரியான வாடகை வசூல் செய்யப்பட்டு வந்தது. இதில் சில முரண்பாடுகள் உள்ள காரணத்தினால் இதனை சரிசெய்திடும் பொருட்டு சதுரடி கணக்கில் வாடகை நிர்ணயம் செய்திட பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து கடந்த 2017 முதல் ஒரு சதுரடிக்கு ரூபாய் 60/- என நிர்ணயம் செய்து ஒவ்வொரு கடையின் அளவீடுகளுக்கு ஏற்றாற்போல் வாடகை மாற்றியமைக்கப்பட்டது.

ஒரு சதுரடிக்கு வாடகையானது இராஜாஜி சாலை அதனை அடுத்துள்ள இரண்டாவது கடற்கரை சாலை, தனியார் கட்டிடங்களில் வாடகை ஒப்பந்த அடிப்படையில் கடை நடத்தும் சிலர் வணிகர்களிடம் வாடகை குறித்த ஆய்வு மேற்கொண்டதில் ஒரு சதுரடிக்கு சுமார் ரூ.70/- ரூ.80/- ஒரு சில கடைகளுக்கு ரூ.110/- என்ற விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவது தெரியவருகிறது.

அதேபோல் அரசாணை நிலை எண்.92, நாள்.03.07.2007ல் தெரிவித்ததற்கு இணங்க குத்தகை வாடகை அடிப்படையில் விடப்பட்ட மாதாந்திர வாடகையினை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை முந்தைய குத்தகைக்கு மேல் 15% குறையாமலோ அல்லது அந்த பகுதிகளில் நிலவி வரும் சந்தை விலைக்கு ஏற்ப உயர்வு செய்யப்பட வேண்டும். அதனடிப்படையிலேயே இவ்வணிக வளாகம் அமைந்துள்ள ராஜாஜி சாலையினை அடிப்படையாக கொண்டு சந்தை விலையினை ஒப்பிட்டு ஒரு சதுரடிக்கு ரூபாய்.60/- என மிகக்குறைந்த அளவில் மாமன்றத்தின் தீர்மானம் பெற்று நிர்ணயம் செய்தது ஏற்புடையதே, இத்தொகை பெருநகர சென்னை மாநகராட்சி பிறபகுதிகளை ஒப்பிடும் போது குறைவாகவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் மற்ற பிரதான பகுதிகளான அண்ணாசாலை, தியாகராய நகர், *C.P.* ராமசாமி சாலை மற்றும் அடையாறு ஆகிய பகுதிகளை ஒப்பிடும் போது மிகவும் குறைவான தொகையாகும்.

மேலும், அச்சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவீடுக்கு மட்டுமே சதுரடி கணக்கிடப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அதைவிட கூடுதலான பகுதியினை மேற்கூரை அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்பகுதிகள் அனைத்தும் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள பகுதியாகும் அப்பகுதிகள் வாடகை நிர்ணயித்ததில் கணக்கிடப்படவில்லை என தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ஆகவே, மேற்கண்ட நிகழ்வுகள் அடிப்படையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நலத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு போதிய வருவாயினை பெருக்கும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானத்தின் (தீர்மான எண்-*86/2017*, நாள்: 21.02.2017) அடிப்படையில் சதுரடி கணக்கீட்டின்படி கோட்டம்-60, இராஜாஜி சாலையில் அமைந்துள்ள வணிகவளாக கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ:60/- வீதம் கடந்த 2017 முதல் பயன்பாட்டில் உள்ள அளவின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ததில் மறுபரிசீலனை செய்து குறைக்க இயலாது என்பதால் சங்க உறுப்பினர்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு ஒரு சதுரடிக்கு ரூ:60/- என நிர்ணயம் செய்ததை இறுதி செய்து அதனடிப்படையில் கடையின் அளவீட்டிற்கு ஏற்றாற்போல் மாத வாடகை நிர்ணயம் செய்ததை பெருநகர சென்னை மாநகராட்சி உறுதி செய்து அவர்களுக்கு கடந்த 07.09.2022 நாளிட்ட முதன்மைச் செயலர் /

ஆணையர் அவர்கள் மூலமாக நீதிமன்ற வழக்கில் தெரிவிக்கப்பட்ட ஆணைக்கிணங்க பதில் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட பதிலினை பெற்றுக்கொண்ட சங்க உறுப்பினர்கள் மாநகர வருவாய் அலுவலர், துணை ஆணையர் (வ (ம) நி) அவர்கள் முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களை நேரில் சந்திக்க அனுமதி கேட்டு வாடகை குறைப்பு குறித்து மீண்டும் மேல்முறையீடு செய்தனர்.

அவர்களின் மேல்முறையீட்டில் பிரதான கோரிக்கையாக தெரிவித்தது கடந்த 2017 முதல் அரசாணை நிலை எண்.92, மற்றும் மாமன்ற தீர்மானத்தின்படி திருத்தியமைக்கப்பட்ட வாடகை விவரம் குறித்த அறிவிப்புகள் எங்களுக்கு முறையாக மாநகராட்சி மூலம் கிடைக்கப்பெறவில்லை என்றும் மேலும் தங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள் கட்டுமானம் ஏதுமின்றி காலியிடமாக வழங்கப்பட்டதாகவும் அக்காலி இடமாக வழங்கப்பட்டதற்கான விவரங்களை அளித்ததுடன் அவ்வாறாக காலியிடமாக வழங்கப்பட்ட இடத்தில் ஒதுக்கீடுதாரர்களால் ஒவ்வொரு கடைகளும் சுமார் 16.5 சதுரடி மற்றும் 17.5 சதுரடிகளில் சிறு சிறு கடைகளாக அவர்களாகவே கட்டிக்கொண்டதாகவும் இன்று வரை உரிய பராமரிப்பு பணிகளையும் அவர்களே மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் இவ்வாறாக வாடகை உயர்வு செய்யப்பட்டதால் அது குறித்த நேரத்தில் அவர்களுக்கு தெரிவிக்கப்படாததால் தற்போதுள்ள நிலுவைத்தொகைகளை செலுத்துவதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்பதாலும் மாநகராட்சியால் அழுத்தம் தரும் பட்சத்தில் அத்தொகைகளை செலுத்துவதற்காக மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

மேலும், அவர்களது தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை அருகில் அமைந்துள்ள அல்லிக்குள வணிக வளாகம் மாநகராட்சியால் கட்டமைக்கப்பட்டு அக்கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அக்கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு இராஜாஜி சாலையில் அமைந்துள்ள பர்மா ப'ஜாரிலுள்ள கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட சதுரடிக்கான வாடகையை விட குறைவாகவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவர்களை போல் எங்களுக்கு ஏதும் கடைகளாக கட்டித்தரப்படவில்லை என்பதனை குறிப்பிட்டு அதனால் தங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட சதுரடிக்கான வாடகை அதிகம். ஆகவே, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒருசதுரடிக்கு ரூபாய். 60/- என நிர்ணயம் செய்ததை மீண்டும் ஒரு முறை பரிசீலித்து கடந்த 2017 வரை மாத வாடகையாக செலுத்தி வந்த ரூபாய்.487/- ஐ சுமார் 500/- அல்லது 600 ரூபாயாக மாத வாடகையாக நிர்ணயம் செய்து திருத்திய நிலுவைத்தொகை விவரம் தெரிவிக்கும் பட்சத்தில் அதனை 10 தினங்களுக்குள் செலுத்தி விடுவதாகவும் ஆகவே, ஆணையர் அவர்கள், அவர்களின் கோரிக்கையினை மறுபறுசீலனை செய்திடுமாறு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் தலைமையில் 20.12.2022 அன்று நடைப்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் சங்க உறுப்பினர்களால் மேல்முறையீடு செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் மேல்முறையீட்டில் வைக்கப்பட்ட பிரதான கோரிக்கையானது ஒருசதுரடிக்கு ரூ.60/- என கடந்த 2017 முதல் திருத்தியமைக்கப்பட்ட வாடகை விவரம் குறித்த நேரத்தில் மாநகராட்சியால் தங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதால் அவ்விவரம் காலதாமதமாகவே கடந்த 2019ல் தெரியவந்ததால் அதனை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது என்பதால் அவ்வழக்கின் தொடர் விசாரணை மற்றும் கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உலக அளவில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றின் காரணமாக பொது முடக்கத்தால் *(LOCK DOWN)* மிகவும் தொழில் பாதிக்கப்பட்டதாலும் அதனால் தற்போதுள்ள நிலுவைத்தொகை மிக அதிக அளவில் உள்ளதால் கடந்த 2017ல் திருத்தப்பட்ட வாடகைக்கு முன்பாக செலுத்திய வாடகையை சற்று மாற்றியமைத்து மாத வாடகை ரூபாய்.500/- அல்லது 600ல் நிர்ணயம் செய்ய கோரிக்கை வைத்துள்ளனர்.

அவர்களது கோரிக்கையினை அப்படியே பரிசீலினைக்கு எடுத்துக்கொண்டால் மாநகராட்சிக்கு நிலுவைத் தொகையில் பெருமளவு இழப்பீடு ஏற்படும். மேலும் இதனையே அடிப்படையாக கொண்டு பிற மண்டலங்களில் உள்ள வணிக வளாக கடையின் உரிமையாளர்கள் சதுரடிக்கு என வாடகை நிர்ணயம் செய்ததை குறைத்து தருமாறு அவர்களும் கோரிக்கையினை

முன்வைக்க வழிவகுக்கும். இதனால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படும். மேலும் தணிக்கை துறையால் நிதி இழப்பீடு குறித்து ஆட்சேபணை தெரிவிக்க வழிவகை செய்திடும்,

எனவே, மாநகராட்சிக்கு பெருமளவில் நிதி இழப்பினை தவிர்த்திடவும், தணிக்கை தடை ஏற்படுவதை தவிர்த்திடவும், பிற மண்டலங்களில் உள்ள வணிகவளாகங்களின் கடைகளில் கோரிக்கைகளை தவிர்த்திடவும், பர்மா தமிழ் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்களின் மேல் முறையீட்டினை மீண்டும் ஒரு முறை கனிவுடன் பரிசீலித்து அவர்களின் வாழ்வாதரத்தை கருத்தில் கொண்டும் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டும் அவர்களின் மேல்முறையீட்டினை பரிசீலிக்கலாம் என கருதி அதனை மாமன்ற ஒப்புதலுடன் மன்ற தீர்மானம் பெற பின்வருமாறு திருத்தியமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-60 இராஜாஜி சாலையில் அமைந்துள்ள தெருவோர வணிகவளாக கடைகளுக்கு கடந்த 2017 முதல் அரசாணை நிலை எண்.92 மற்றும் மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஒருசதுரடிக்கு ரூபாய்.60/- வீதம் நிர்ணயம் செய்ததை ஒரு பகுதியாக திருத்தம் செய்து கடந்த 2015க்கு முன்பு வணிக வளாகங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாதவாடகையில் 15% (விழுக்காடு) உயர்த்தி வாடகை நிர்ணயம் செய்து அதற்கு சரக்கு மற்றும் சேவைக்கட்டணத்துடன் வசூலித்ததுப்போல் கடந்த 2017ல் பர்மா தமிழ் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்களுக்கு உயர்த்தப்பட்ட வாடகையின் விவரம் முறையாக தெரிவிக்கப்படாததால் அதை கருத்தில் கொண்டு 2015க்கு பிறகு 3 ஆண்டுக்கு ஒருமுறை வாடகையில் 15% (விழுக்காடு) உயர்த்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 2018 ஏப்ரல் முதல் அவர்கள் கடைசியாக செலுத்தி வந்த மாத வாடகை ரூபாய்.487/- க்கு 15% உயர்த்தி ரூபாய்:- *560/-* என 01.04.2018 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்திடவும் அதேப்போல் அடுத்த 3 ஆண்டுகள் கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை ரூபாய்.*560/-*ல் 15% விழுக்காடு உயர்த்தி சேர்த்தும் கடந்த 01.04.2021 முதல் ரூ.645/- என நிர்ணயம் செய்திடவும், நிர்ணயம் செய்யப்படும் வாடகைத்தொகையுடன் சரக்கு மற்றும் சேவைவரி கட்டணமாக 18% விழுக்காடு சேர்த்து வசூலித்திடவும்,

(ஆ) அதன் பின்னர் 01.04.2022 முதல் அரசாணை நிலை எண்.92, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.*03.07*.2007 மற்றும் மன்ற தீர்மான எண்.086/2017, நாள். 21.02.2017.ன்படி கடந்த 2017ல் நிர்ணயம் செய்தது போல் ஒரு சதுரடிக்கு ரூ.*60/-* வீதம் கடையின் பரப்பளவிற்கு ஏற்றாற்போல் கணக்கிட்டு வாடகையினை மீண்டும் திருத்தியமைத்திடவும்,

(இ) இனம் (அ) மற்றும் (ஆ) வினை ஏற்கும் பட்சத்தில் கணினியில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு கடைகளுக்கான நிலுவை விவரங்களை கேட்பு அறிவிப்பின் மூலம் கடையின் உரிமையாளர்களுக்கு வழங்கி, நிலுவையினை வசூலித்திடவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.37/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.5வ.து.ந.க.எண்.ஆர்1/13818/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 14.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:123/2023** **பொருள் எண்.43**

**வணிகவளாகம் – பெருநகர சென்னை மாநகராட்சி –மண்டலம்-5, கோட்டம்-58 – கண்ணப்பர் திடல், புதிய நேரு மார்க்கெட், திறந்த வெளி கண்ணப்பர் திடல், பழைய நேரு மார்க்கெட், சுமார் 742 க்குமேற்பட்ட கடைகளுக்கு மாத வாடகை கடந்த 2017 மாற்றியமைக்க கோரி – ஆட்சேபணை கடிதம் – மற்றும் ஒரு சில கடைகளுக்கு கடையின் அளவீடு தவறாக கணக்கிடப்பட்டு – மாத வாடகை நிர்ணயம் செய்தது – திருத்தியமைக்க கோரி அளிக்கப்பட்ட கடிதம் – கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டது – இறுதி முடிவெடுத்தல் – மன்றத்தின் அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-58ல் கண்ணப்பர் திடலில் அமைந்துள்ள புதிய நேரு மார்க்கெட் சுமார்- 255 கடைகள், பழைய நேரு மார்க்கெட் – 99 கடைகள், திறந்த வெளி கண்ணப்பர் திடலில் கடைகள் சுமார் – 388 மற்றும் பௌவுல் ஸ்டால் சுமார் – 28 ஆகியவை பெருநகர சென்னை மாநகராட்சியால் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அவர்களால் கட்டமைப்பு (SUPER STRUCTURE) ஏற்படுத்தப்பட்டு தெருவோர வணிக வளாக கடைகளாக செயல்பட்டு வருகிறது. இக்கடைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் ஆரம்ப கால கட்டங்களில் அவர்களுக்கு மிக குறைந்த அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு ஏற்றாற்போல் மாத வாடகை ஒரு சிறு அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு வாடகை வசூலிக்கப்பட்டு வந்தது அவை படிப்படியாக ஒரு சிறு அளவு உயர்த்தப்பட்டு கடந்த 2017 மார்ச் மாதம் ஒரு கடைக்கு மாத வாடகையாக கடையின் அளவீடு பொறுத்து குறைந்த பட்சம் ரூ.180/- முதல் அதிகபட்சம் ரூ.250/- வரை வசூலிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அரசாணை நிலை எண்.92, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.03.07.2007ன் படி வணிகவளாக கடைகளுக்கான வாடகையில் ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடைசியாக செலுத்தப்பட்ட வாடகையில் 15% உயர்த்தி வாடகையாக நிர்ணயம் செய்திடவும் 9 ஆண்டுகள் கடந்த நிலையில் சந்தை விலையின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்திடவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வரசாணையினை நடைமுறைப்படுத்திட பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.86/2017, நாள்.21.02.2017 மற்றும் தீர்மான எண்.807/2017, நாள்.20.12.2017ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசாணை மற்றும் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகள் பல ஆண்டுகளாக மிக குறைந்த அளவில் வாடகை செலுத்தப்பட்டு வந்த நிலையில் 2017ஆம் ஆண்டு சந்தை விலையின் அடிப்படையில் அந்தந்த மண்டலத்திலுள்ள வணிக வளாக கடைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு ஏற்றாற்போல் சந்தை மதிப்பினை அடிப்படையாக கொண்டு ஒரு சதுரடிக்கு என வாடகை நிர்ணயம் செய்து வணிகவளாக கடைகளின் அளவீடுக்கு ஏற்றாற்போல் மாத வாடகை மாற்றியமைக்கப்பட்டு மன்றத்தீர்மானம் பெறப்பட்டு கடந்த 01.04.2017 முதல் நடைமுறைபடுத்தப்பட்டது. அவ்வாறே கண்ணப்பர் திடல் பகுதியில் அமைந்துள்ள புதிய மற்றும் பழைய நேரு மார்க்கெட், திறந்த வெளி கண்ணப்பர் திடல் கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு மாத வாடகையாக ரூபாய்-30/- என நிர்ணயிக்கப்பட்டு மன்றத்தீர்மானம் பெறப்பட்டதன் அடிப்படையில் கடைகளின் அளவீட்டிற்கு ஏற்றாற்போல் மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2017 முதல் நடைமுறைப்படுத்தி மண்டலம்-5, எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக வளாக கடைகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

கண்ணப்பர் திடல் வணிகவளாகத்திலுள்ள அனைத்து கடைகளுக்கும் உயர்த்தப்பட்ட வாடகை செலுத்தாமல் முன்பு செலுத்திய பழைய வாடகை தொகையினையே செலுத்தி வந்தனர். மேலும், உயர்த்தப்பட்ட வாடகைக்கு ஆட்சேபணை கடிதங்களும் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களது கோரிக்கை குறித்து பரிசீலிக்காத நிலையில் உயர்த்தப்பட்ட வாடகை செலுத்தாததால் ஒரு பெருந்தொகை நிலுவையாக ஒவ்வொரு கடைக்கும் உள்ளது. இந்நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொண்ட சமயத்தில் ஒவ்வொரு கடையின் நிலுவை விவரங்களும் அறிவிப்பு கடிதம் மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டும் அவர்கள் புதிய வாடகையில் நிலுவையினை செலுத்தாமல் பழைய வாடகை தொகையினையே செலுத்தினர் இதனால் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நிதி சுமையினை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை முனிசிபல் சட்டம் விதி எண்-387ன்படி நடவடிக்கை மேற்கொண்ட சமயம் அவர்களது மேல்முறையீடு பரிசீலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவித்து அதனை பரிசீலனை செய்து சதுரடிக்கான வாடகையினை குறைத்து தருமாறு கோரிக்கை கடிதம் துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களுக்கு அளித்தனர்.

சங்க உறுப்பினர்களின் கோரிக்கை அடிப்படையில் துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின் தலைமையில் அவர்கள் அழைக்கப்பட்டு மூன்று முறை கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வாடகை நிர்ணயம் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், அதிக நிலுவை உள்ளதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு மொத்த நிலுவை தொகையினை தவணையாக செலுத்த அனுமதி அளித்து அவரவர் நிலுவைத்தொகையினை மூன்று தவணைகளாக பிரித்து அனுமதி அளிப்பதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன் அவ்வாறே ஒவ்வொருவரின் நிலுவைத் தொகையினையும் மூன்று தவணைகளாக பிரித்து அவர்களுக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது இதனை பெற்றுக்கொண்ட வணிக வளாக கடைகளின் உரிமையாளர்கள் முதல் தவணையினை கடந்த செப்டம்பர் மாதம் மொத்தம் 742 கடைகளில் சுமார் 650க்கும் மேற்பட்ட கடைகள் முதல் தவணை செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சங்க உறுப்பினர்கள் மீண்டும் அவர்களது கோரிக்கை அடங்கிய கடிதத்தினை 16.09.2022 மற்றும் 09.12.2022 ஆகிய நாட்களில் அளித்துள்ளனர். அக்கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வாடகை விடப்பட்டுள்ள அல்லிக்குள வணிக வளாகத்திலுள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுரடி ரூபாய்.25/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட் கடைகள் காலியிடங்களாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டு தங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவ்விடத்தில் அவர்களாகவே கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆதலால் அதனை கருத்தில் கொண்டு தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. காலியிடம் என்பதால் ஒரு சதுரடிக்கு ரூபாய்-30/- என நிர்ணயம் செய்ததை பரிசீலனை செய்து குறைத்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

மேலும், அவர்கள் துணை ஆணையர்(வ(ம)நி) அவர்கள் தலைமையில் இறுதியாக 01.12.2022 நாளன்று நடந்த கலந்தாய்வு கூட்டத்தில் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் பிரதான சாலைக்கு உட்புறத்தில் அமைந்துள்ளதாகவும் மிக குறைந்த அளவிலேயே வர்த்தகம் நடைபெறுவதாகவும், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும், ஆகவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தங்களது ஒரு சதுரடிக்கு ரூபாய்-30/- என நிர்ணயம் செய்ததை குறைத்து தரும்படியும், அவ்வாறு குறைத்து நிர்ணயம் செய்யும் பொருட்டு நிலுவையிலுள்ள வாடகை தொகையினை வரும் பிப்ரவரி மாதத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தவணைகளாக பிரித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்ததுடன் சில கடைகளின் விவரங்களை தெரிவித்து அக்கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவை விட கூடுதலான அளவீடு கணக்கிடப்பட்டு மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதை முறை செய்து தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின் தலைமையில் கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட் சங்க உறுப்பினர்களுடன் பல கட்டங்களில் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்ட நிலையில் ஒரு சதுரடிக்கு ரூபாய்-30/- என நிர்ணயம் செய்தது சரியே ஆதலால் தங்களது கோரிக்கை பரிசீலிக்க இயலாது என தெரிவித்த நிலையில் அவர்களது நிலுவைக்கேற்ப அதனை மூன்று தவணைகளாக பிரித்து அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் முதல் தவணை குறித்த காலத்தில் தாமதம் இல்லாமல் சுமார் 650 கடைகளுக்கு மேல் செலுத்திய நிலையில் மீண்டும் அவர்களால் கோரிக்கை கடிதம் அளிக்கப்பட்டதை அடிப்படையாக கொண்டு இறுதியாக நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தில் அவர்கள் மாநகராட்சியால் கட்டி வாடகைக்கு விடப்பட்ட அல்லிக்குள வணிக வளாக கடைகளுக்கு ஒரு சதுரடி ரூ.25/- என நிர்ணயித்த நிலையில் அதே பகுதியில் சுமார் 500 மீட்டர் இடைவெளியில் நேரு விளையாட்டு அரங்கின் அருகில் அமைந்துள்ள கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட் வணிக வளாக கடை உறுப்பினர்களுக்கு வெறும் இடம் மட்டும் ஒதுக்கீடு செய்து அளித்த நிலையில் அவ்விடத்தில் அவர்களாலேயே கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதால் அல்லிக்குள வணிகவளாகத்தை ஒப்பிடுகையில் தங்களுக்கு ஒரு சதுரடிக்கான வாடகை கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்கட்டப்பட்டுள்ள ஆட்சேபணையானது கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

மேலும், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வணிக வளாகத்தில் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் இல்லை என கள ஆய்வில் உறுதி செய்யப்பட்டதுடன் மாநகராட்சியால் கட்டப்பட்ட அல்லிக்குள வணிகவளாகத்திற்கு ஒரு சதுரடிக்கு ரூபாய்-25/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் எந்த ஒரு கட்டுமானமும் அமைக்கப்படாமல் காலியிடமாக வழங்கப்பட்ட கண்ணப்பர் திடல், நேருமார்க்கெட்டிற்கு ஒரு சதுரடிக்கு ரூ-30/- என வாடகை நிர்ணயம் செய்ததை ஒப்பிடுகையில் அவர்களின் கோரிக்கையினை ஏற்று பரிசீலிக்கலாம் என கருதப்படுகிறது. அதையே கருத்தில் கொண்டு கண்ணப்பர் திடல், நேருமார்க்கெட்டில் அமைந்துள்ள சுமார் 742 கடைகளுக்கும் ஒரு சதுரடிக்கு ரூபாய்-30/- என்பதை அவர்கள் வாழ்வாதாரம் மற்றும் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு ஒரு சதுரடிக்கு ரூபாய்.20/- என மாத வாடகையினை ஒவ்வொரு கடையின் அளவிற்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்து மாமன்ற தீர்மான ஒப்புதலுடன் நடைமுறைபடுத்திடலாம் என உத்தேசிக்கப்படுகிறது.

பின்வரும் கடைகள் திருத்தியமைக்கப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் ஒரு சதுரடிக்கு ரூ-20/- என மாமன்றத்தின் ஒப்புதலுடன் தீர்மானம் நிறைவேற்றும் பட்சத்தில் அக்கடைகளுக்கான மாத வாடகையினை பின்வரும் பட்டியலில் கண்டவாறு கணக்கிடப்படுகிறது :

| வ எண் | கடை எண் | ஏற்கனவே உள்ள கடையின் அளவீடு | மாத வாடகை | மறு மதிப்பீட்டில் உறுதி செய்யப்பட்ட அளவீடு | மாமன்ற தீர்மானத்தின் ஒப்புதலுடன் மாற்றியமைக்கப்படவுள்ள ஒரு சதுரடிக்கான வாடகை ரூ-20/- அடிப்படையாக கொண்டு நிர்ணயம் செய்யப்படும் மாத வாடகை. |
|---|---|---|---|---|---|
| 01 | 05-058-055-1 | 150 | 4500 | 136 | 2720 |
| 02 | 05-058-055-2 | 150 | 4500 | 136 | 2720 |
| 03 | 05-058-055-3 | 150 | 4500 | 136 | 2720 |
| 04 | 05-058-055-4 | 150 | 4500 | 136 | 2720 |
| 05 | 05-058-055-5 | 150 | 4500 | 136 | 2720 |
| 06 | 05-058-055-6 | 150 | 4500 | 140 | 2800 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | 05-058-055-7 | 150 | 4500 | 140 | 2800 |
| 08 | 05-058-055-8 | 150 | 4500 | 140 | 2800 |
| 09 | 05-058-055-9 | 150 | 4500 | 154 | 3080 |
| 10 | 05-058-055-10 | 150 | 4500 | 154 | 3080 |
| 11 | 05-058-055-11 | 150 | 4500 | 154 | 3080 |
| 12 | 05-058-055-12 | 150 | 4500 | 154 | 3080 |
| 13 | 05-058-055-13 | 150 | 4500 | 168 | 3360 |
| 14 | 05-058-055-14 | 252 | 7560 | 168 | 3360 |
| 15 | 05-058-055-15 | 252 | 7560 | 238 | 4760 |
| 16 | 05-058-055-16 | 150 | 4500 | 238 | 4760 |
| 17 | 05-058-055-99 | 450 | 13500 | 1000 | 20000 |
| 18 | 05-058-050-241 | 80 | 2400 | 90 | 1800 |
| 19 | 05-058-050-242 | 80 | 2400 | 90 | 1800 |
| 20 | 05-058-050-252 | 80 | 2400 | 200 | 4000 |
| 21 | 05-058-050-253 | 208 | 6240 | 200 | 4000 |
| 22 | 05-058-013-404 | 150 | 4500 | 66 | 1320 |
| 23 | 05-058-013-425 | 100 | 3000 | 66 | 1320 |
| 24 | 05-058-013-464 | 60 | 1800 | 68 | 1360 |
| 25 | 05-058-013-465 | 60 | 1800 | 68 | 1360 |
| 26 | 05-058-013-466 | 60 | 1800 | 102 | 2040 |
| 27 | 05-058-013-467 | 32 | 960 | 102 | 2040 |
| 28 | 05-058-013-468 | 32 | 960 | 102 | 2040 |
| 29 | 05-058-013-485 | 60 | 1800 | 54 | 1080 |

**குறைவாக செலுத்திவரும் மாதவாடகை கடைகளை மாற்றியமைக்கப்பட வேண்டிய கணக்கீட்டு விவரம்,**

| வ எண் | கடை எண் | கடையின் அளவீடு | ஏற்கனவே உள்ள மாத வாடகை | மாமன்ற தீர்மானத்தின் ஒப்புதலுடன் மாற்றியமைக்கப்படவுள்ள ஒரு சதுரடிக்கு ரூ-20/- என்பதன் அடிப்படையில் மாற்றியமைக்கப்படவுள்ள மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01 | 05-058-052-1 | 80 | 155 | 1600 |
| 02 | 05-058-052-2 | 80 | 155 | 1600 |
| 03 | 05-058-052-3 | 80 | 155 | 1600 |
| 04 | 05-058-052-4 | 80 | 155 | 1600 |
| 05 | 05-058-052-5 | 80 | 155 | 1600 |
| 06 | 05-058-052-6 | 80 | 155 | 1600 |
| 07 | 05-058-052-7 | 80 | 155 | 1600 |
| 08 | 05-058-052-8 | 80 | 155 | 1600 |
| 09 | 05-058-052-9 | 80 | 155 | 1600 |
| 10 | 05-058-052-10 | 80 | 155 | 1600 |
| 11 | 05-058-052-11 | 80 | 155 | 1600 |
| 12 | 05-058-052-12 | 80 | 155 | 1600 |
| 13 | 05-058-052-13 | 80 | 155 | 1600 |
| 14 | 05-058-052-14 | 80 | 155 | 1600 |
| 15 | 05-058-052-15 | 80 | 155 | 1600 |
| 16 | 05-058-052-16 | 80 | 155 | 1600 |
| 17 | 05-058-052-17 | 80 | 155 | 1600 |
| 18 | 05-058-052-18 | 80 | 155 | 1600 |
| 19 | 05-058-052-19 | 80 | 155 | 1600 |
| 20 | 05-058-152-1A | 45 | 155 | 900 |
| 21 | 05-058-152-2A | 60 | 155 | 1200 |

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட் சங்க உறுப்பினர்களின் கோரிக்கை கடிதங்களால் பல முறை கூட்டம் நடத்தப்பட்ட நிலையில் அவர்களின் பிரதான கோரிக்கையான மாநகராட்சியால் கட்டப்பட்ட அல்லிக்குள வணிகவளாக கடைகளுக்கு ஒரு சதுரடி ரூ-25/- என நிர்ணயம் செய்ததை விட நேரு மார்க்கெட் வணிகவளாகத்திற்கு கட்டுமானம் இல்லாமல் காலி நிலமாக வழங்கப்பட்டவர்களுக்கு ஒரு சதுரடிக்கு ரூ-30/- என வாடகை நிர்ணயம் செய்ததை பரிசீலனை செய்ய கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் மாநகராட்சிக்கு பெருமளவு நிதி இழப்பை தவிர்க்கும் வகையிலும் நிலுவையினை உடனடியாக வசூலித்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும் அவர்களது கோரிக்கையினை பரிசீலிக்கலாம்.

எனவே,

(அ) பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-5, கோட்டம்-58, கண்ணப்பர் திடல், புதிய நேரு மார்க்கெட் வணிக வளாக கடைகள்-255கடைகள், பழைய நேரு மார்க்கெட்-99 மற்றும் திறந்த வெளி கண்ணப்பர் திடல் கடைகள் -388 மொத்தம் சுமார்-742 கடைகளுக்கு அரசாணை நிலை எண்.92, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.03.07.2007 மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.086/2017, நாள்.21.02.2017ன்படி வணிக வளாக கடைகளுக்கு சந்தை விலை அடிப்படையில் ஒரு சதுரடிக்கு ரூ.30/- என மாத வாடகை நிர்ணயம் செய்ததற்கு கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட் சங்க உறுப்பினர்களால் பலமுறை ஆட்சேபணை கடிதங்கள் அளித்த நிலையிலும், கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் மேல்முறையீட்டில் தெரிவித்த விவரங்களை கருத்தில் கொண்டு மாநகராட்சிக்கு பெருமளவு நிதி இழப்பு ஏற்படாத வகையிலும் நிலுவை தொகையினை விரைந்து வசூலித்திட ஏதுவாகவும், கடைகளின் உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வாடகை விடப்பட்ட அல்லிக்குள வணிகவளாக கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ.25/- என நிர்ணயம் செய்த நிலையில் அதேப்பகுதியில் சுமார் 500 மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ள கண்ணப்பர் திடல், நேரு மார்க்கெட்டிற்கு கட்டுமானம் உறுப்பினர்களே கட்டப்பட்ட நிலையில் அக்கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு மாத வாடகை ரூ.30/- என நிர்ணயம் செய்யப்பட்டதை அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் ஒரு சதுரடிக்கு ரூ-20/- என மாத வாடகையினை மாற்றியமைத்திட ஆணை வேண்டியும்,

(ஆ) அதே போல் நேரு மார்க்கெட்டில் கடை எண்கள் 05-058-055-1 முதல் 16 மற்றும் 99 வரையும், புதிய மூர்மார்க்கெட் கண்ணப்பர் திடல் கடை எண்கள் NO5-NO58-050- 241,242,252,253 மற்றும் திறந்தவெளி கண்ணப்பர் திடல் கடை எண்கள் NO5-NO58-013- 404, 425, 464, 465, 466, 467, 468, 485 ஆகிய கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவீட்டைவிட கூடுதலாக அளவீடு கணக்கிடப்பட்டு அதிகப்படியான மாதவாடகை நிர்ணயம் செய்ததை ஆட்சேபணை கடிதத்தின் அடிப்படையில் மீண்டும் கள ஆய்வு மேற்கொண்டு, கள ஆய்வில் உறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவீட்டிற்கு ஏற்றாற்போல் மாமன்ற தீர்மானத்தின் ஒப்புதலுடன் மாற்றியமைக்கப்படவுள்ள ஒரு சதுரடிக்கு ரூ.20/- என மாத வாடகை கணக்கீடு திருத்தியமைத்திட ஆணை வேண்டியும்,

(இ) கண்ணப்பர் திடலில் அமைந்துள்ள ஒரு சில கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவிற்கான வாடகை நிர்ணயம் செய்யப்படாமலுள்ள சுமார் 21 கடைகளுக்கு மாமன்ற தீர்மானத்தின் ஒப்புதலுடன் ஒரு சதுரடிக்கு ரூ.20/- என கடைகளின் சதுரடிக்கு ஏற்றாற் போல் வாடகை மறு நிர்ணயம் செய்திட ஆணை வேண்டியும்,

(ஈ) இனம் (அ), (ஆ) மற்றும் (இ) ஆகியவைகளை அனுமதிக்கும் பட்சத்தில் உரிய திருத்தங்களை கணினியில் மேற்கொண்டு திருத்திய வாடகையினை நிர்ணயம் செய்து அவர்களின் நிலுவைக்கேற்றாற் போல் தவணை தொகைகளை பிரித்து கேட்பு வழங்கிட ஆணை வேண்டியும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.38/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.1நக.எண்.பி2/05782/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:124/2023** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1, 2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில்– பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட 13 எண்ணிக்கையிலான பணியாளர்கள் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.05.2022 முதல் 31.10.2022 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிக்காலம் 31.10.2022 அன்று முடிவடைகிறது - 01.11.2022 முதல் 30.04.2023 வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்திடவும் - 01.11.2022 முதல் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள்தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, பகுதி 1, 2 (ம) 3 வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ளடக்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் 26.96 ச.கி.மீ பரப்பளவு உள்ளடக்கியது ஆகும் வார்டு எண். 1 முதல் 14 வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் 1498 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 87,418 ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25.10.2011ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. நகராட்சியாக செயல்பட்ட போது மேற்கு பகுதிகளில் வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள பகுதிகள் பாதாள சாக்கடை கட்டமைப்பு இல்லாததாலும் மற்றும் வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஒரு சில பகுதிகளை தவிர தேவையான அளவு உள்ளதாலும் தற்போது மண்டலம் 1ல் பயன்பாட்டிலுள்ள பக்க கால்வாய்கள் எண்ணிக்கை 360 (54.15கி.மீ) அமைக்கப்பட்டு மழைநீர் சிறு பாலங்கள் வழியாக பொதுப்பணித்துறை பக்கிங்காம் கால்வாய் வழியே கடலில் சென்று அடைகிறது.

உதவி செயற்பொறியாளர் / பகுதி-1 அவர்களின் 14.09.2022 நாளிட்ட குறிப்பில், மண்டலம் 1, பகுதி 1, வார்டு எண் 1, 2 மற்றும் 4 வரை உள்ள எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பக்க கால்வாய் உள்ளதால் மண் மற்றும் கழிவுகளை தூர்வாரி வெளியேற்றவும் பொது மக்களின் நலன் கருதி பக்க கால்வாய்களில் அடைப்புகள் ஏதும் ஏற்படாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொய்வு இல்லாமல் பணிகள் நடைபெறவும், போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பகுதி 1க்கு 13 தற்காலிக பணியாளர்கள் தேவைப்படுகிறது. இப்பணியாளர்களை, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் (01.11.2022 முதல் 31.04.2022 வரை) ஆறு மாத காலத்திற்கு நபர் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் ரூ997672/-க்கு பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள ஆவண செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார்.

மண்டலம்1, வார்டு எண் 1.2(ம)4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் தினக்கூலி அடிப்படையில் ஆறு மாதத்திற்கு (01.05.2022 முதல் 31.10.2022) ஆணையர் அவர்களின் 13.01.2022 நாளிட்ட அனுமதி பெற்று பணிகள் நடைபெற்று வரும் நிலையில 31.10.2022 தேதியில் பணிக்காலம் முடிவடைகிறது.

அதன்பொருட்டு மண்டலம்1, வார்டு எண் 1, 2 மற்றும் 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் எதிர் வரும் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் 13 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ்

தினக்கூலி அடிப்படையில் ஆறு மாதத்திற்கு 01.11.2022 முதல் 31.04.2023 வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.424/- வீதம் விலை விவரப்பட்டியல் வ.எண் 64ல் குறிப்பிடப்பட்டுள்ளது.தேவைப்படும பணியாளர்களின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண் | வார்டு எண் | தெருக் களின் எண்ணிக்கை | தெருக் களின் நீளம் மீ | கால்வாய் களின் எண்ணிக்கை | பக்க கால்வாயின் நீளம் | பக்க கால்வாய் / தூர்வாரும் பணிக்கு தேவைப்படும பணியாளர்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 119 | 18779 | 61 | 10869 | 5 | 10869÷500மீ÷3=5 |
| 2 | 2 | 106 | 11009 | 93 | 10110 | 6 | 10110÷500 மீ ÷3=6 |
| 3 | 3 | 104 | 21017 | 0 | 0 | 0 | |
| 4 | 4 | 148 | 18805 | 80 | 11135 | 2 | 11135÷500 மீ ÷3=2 |
| மொத்தம் | | 477 | 69610 | 234 | 32114 | 13 | |

மேலே பட்டியலில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி வார்டு 1, 2 மற்றும் 4 வரையிலான 477 தெருக்களில் உள்ள பக்க கால்வாய்களின் நீளம் 32114மீ உள்ளது. இக்கால்வாய்களில் உள்ள மண் மற்றும் சேரும் கழிவுகள் அகற்றிட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) தினக்கூலி அடிப்படையில் 01.11.2022 முதல் 31.04.2023 வரையிலான 6 மாத காலத்திற்கு பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மண்டல குழுின் 12.10.2022 நாளிட்ட அனுமதி பெற்று மண்டலம்-1, வார்டு எண் 1, 2 மற்றும் 4 வரையிலான பகுதிகளில் உள்ள பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றும் பணிகளில் 13 தற்காலிக பக்க கால்வாய் பணியாளர்களின் பணிக்காலம் 31.10.2022 அன்று முடிவடையும் நிலையில் உள்ளதால் 01.11.2022 முதல் 30.04.2023 வரை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.424 X 13 நபர்கள் X 181 நாட்கள் = ரூ.9,97,672/- தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள பொருள் எண் 3, தீர்மான எண் 256, நாள்.12.10.2022ல் மண்டல குழு-1 ன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1, 2 (ம) 4வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர் வாரி வெளியேற்றிட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 181 நாட்களுக்கு 13 தற்காலிக பணியாளர்களை பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்துள்ள விலை விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் (ரூ.424 X 13 நபர்கள் X 181 நாட்கள் = ரூ.9,97,672/-) ரூ9.97 இலட்சத்திற்கு 01.11.2022 முதல் 31.04.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆணை வேண்டியும் 01.11.2022 முதல் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2) மேற்குறிப்பிட்ட பணிக்கு ரூ.9,97,672/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) ரூ9.97 இலட்சம் நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
3) இப்பணிக்கு பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 210-100-601ல் பட்டிகள் தீர்வு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 043/2023, நாள். 21.02.2023-ன்படி "இப்பணியை மேற்கொண்ட பணியாளர்களுக்கு பணி புரிந்த நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்" இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.48/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ12. பொ.சு.து.ந.க.எண்.எச்2/305/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:125/2023** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12 - சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட மலேரியா பணியாளர்களின் பணிகாலம் 31.01.2023ல் முடிவடைகிறது - 01.02.2023 முதல் 31.01.2024 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் 177 மலேரியா பணியாளர்களை பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி .**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.059/2022, நாள்.21.01.2022 - ன்படி, மண்டலம்-12, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள் கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளவும், 177 மலேரியா பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் அமைத்து பணியமர்த்த மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே பணிபுரிந்து வந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள்-(NULM) மலேரியா பணியாளர்களின் பணிகாலம் 31.01.2023 உடன் முடிவடைகிறது. இப்பணிகளை அவசியம் கருதி தொடர்வது அவசியமாகிறது.

| கோட்டம் | குழு எண் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 156 | NULM-12-156-006 | 21 |
| 157 | NULM-12-157-0013 | 18 |
| 158 | NULM-12-158-001 | 13 |
| 159 | NULM-12-159-011 | 5 |
| 160 | NULM-12-160- 002 | 13 |
| 161 | NULM-12 - 161 -003 | 15 |
| 162 | NULM-12-162 -004 | 16 |
| 163 | NULM-12 - 163 -006 | 15 |
| 164 | NULM-164-12 -0013 | 16 |
| 165 | NULM-12 - 165 -015 | 14 |
| 166 | NULM-12- 166 -0016 | 15 |
| 167 | NULM-12-167 -017 | 16 |
| மொத்தம் | | 177 |

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.059/2022, நாள்.21.01.2022ன்படி, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் மண்டலம் - 12 ல் 177 பணியாளர்களை ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதன் படி மேலே குறிப்பிட்டுள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் பணி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி மண்டலம்-12 பொது சுகாதாரதுறை பணிகள் 177 NULM பணியாளர்கள் மற்றும் 22 நிரந்தர பணியாளர்கள் மூலமும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

நிரந்தர பணியாளர்கள் 22 நபர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால் NULM பணியாளர்களின் பணிக்காலம் 31.01.2023 அன்று முடிவடைவதால் NULM பணியாளர்களுக்கு மீண்டும் ஒரு வருட காலம் 31.01.2024 வரை பணி நீட்டிப்பு ஆணை வழங்க கோரப்படுகிறது.

| விவரம் | 156 | 157 | 158 | 159 | 160 | 161 | 162 | 163 | 164 | 165 | 166 | 167 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 6705 | 5123 | 3007 | 1100 | 4305 | 4750 | 5000 | 5000 | 5500 | 5579 | 6250 | 6053 | 58372 |
| செக்டார் எண்ணிக்கை | 14 | 11 | 6 | 2 | 9 | 10 | 10 | 10 | 11 | 12 | 13 | 12 | 120 |
| கொசு மருந்து தெளிக்கும் பணி | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 15 |
| கொசு புகை பரப்பும் பணி | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 16 |
| கால்வாய், ஆறு, பணி | 2 | 3 | 4 | 0 | 0 | 0 | 3 | 2 | 0 | 2 | 0 | 0 | 16 |
| வாகன கொசு புகை பரப்பும் பணி | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| கணினி இயக்கும் பணி | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| பிறப்பு மற்றும் இறப்பு பணி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| அம்மா உணவக பணி | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 4 |
| மழைநீர் கால்வாய் பணி | 1 | 2 | 3 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 0 | 2 | 18 |
| மற்ற பணிகள் | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 5 |
| மொத்த பணியளர்கள் எண்ணிக்கை | 21 | 20 | 15 | 6 | 17 | 16 | 18 | 17 | 17 | 19 | 15 | 18 | 199 |
| *NULM* பணியாளர்கள் எண்ணிக்கை | 21 | 18 | 13 | 5 | 13 | 15 | 16 | 15 | 16 | 14 | 15 | 16 | 177 |
| நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 0 | 2 | 2 | 1 | 4 | 1 | 1 | 1 | 1 | 5 | 0 | 2 | 20 |
| மயான உதவியாளர்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 |
| நீண்ட காலம் வராதாவர் *Long Absent* | | | | | | | | | | | | | |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (*NULM*) மலேரியா பணியாளர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ரூ. 424/- ஆக உயர்த்தி வழங்க குறிப்பிட்டதை தொடர்ந்து மேற்கண்ட பணிக்குரிய தோராயமான செலவின கீழ்காணும் விவரப்பட்டியல்படி

<u>விபரப் பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| 1. | மொத்த கோட்டங்கள் | 12 |
| 2. | தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை | 177 |
| 3. | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.424.00 (*Rupees Four hundred and twenty Four only*) |
| 4. | ஒரு நாளைக்கு 177 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.424 X 177 = ரூ. 75,048.00 (*Rupees Seventy Five thousand and Forty Eight only*) |
| 5. | நீட்டிப்பு காலமான 01.02.2023 முதல் 30.01.2024 வரை 177 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.424 X 177 X 365 = ரூ. 2,73,92,520/- (*Rupees Two crores Seventy Three lakhs Ninety Two Thousand Five Hundred and Twenty Only*) |

| | | |
|---|---|---|
| 6. | பயன்படுத்தப்படும் கணக்கு குறியீடு | 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) / 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF - HEALTH WORKS) |

எனவே,

1. மண்டலம்-12ல் 01.02.2023 முதல் 31.01.2024 வரை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 177 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

2. இந்த பணியாளர்களுக்கு 01.02.2023 முதல் 31.01.2024 வரை தேவையான செலவீனத் தொகை ரூ.424x177x365=2,73,92,520/- (Rupees Two crores Seventy Three lakhs Ninety Two Thousand Five Hundred and Twenty Only)யை கணக்கு தலைப்பு எண்.30-32-02 (ANTI MOSQUITO OPERATION) / 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS) –ன் கீழ் செலவினம் செய்யவும்,

3. மத்திய அரசின் திட்டமான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்தும் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

4. மன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி 177 மலேரியா பணியாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தவும்,

5. கொசு ஒழிப்பு பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.424/- ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.013/2023, நாள்.17.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.42/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

**********

**வ.து.ந.க.எண்.ஜி1/6481/2008**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 11.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:126/2023** **பொருள் எண்.46**

**நீதிமன்ற வழக்கு - சொத்துவரி – வருவாய் துறை – அரசால் வெளியிடப்பட்ட சட்ட திருத்தம் *(Act No.6 of 2018 – Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act, 2018)* - கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரியுடன் கூடிய *60%* மேல்வரி விதிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் அனுமதி பெறப்பட்டது – பல்வேறு கல்வி நிறுவனங்களால் தொடரப்பட்ட வழக்குகள் *(W.P. No.34104 of 2019,932,936……..12765 of 2020 & 23764,6141,22017 of 2021 (24* வழக்குகள்) – மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய ஆணையின்படி - கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு வரி நிர்ணயிக்கவும் - மன்றத் தீர்மான எண்.*63/2022*ன்படி, கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, *1/2022-23* முதல் சொத்துவரி பொது சீராய்வினை மேற்கொள்ளவும் - மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது – மூத்த வழக்கறிஞர் கருத்துரு பெறப்பட்டது – சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,*1919* பிரிவு *31*, அட்டவணை-*II* விதி *10*-ன்படி - திருத்திய தீர்மானம் வழங்க - மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-*1919* பிரிவு-101(C)க்கு, அரசால் சட்ட திருத்தம் *(Act No.6 of 2018 – Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act, 2018)* கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

AMENDMENTS TO THE CHENNAI CITY MUNICIPAL CORPORATION ACT 1919

2.In Section 101 of the Chennai City Municipal Corporation Act, 1919:-

(1) for clause (c), the following clause shall be substituted, namely :-

" (c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or corporation or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax ;":

(2) in the proviso, for the expression "clauses (a),(c) and (e)", the expression "clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தினைத் தொடர்ந்து, கல்வி நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும், தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவன கட்டிடங்களில், சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது, சாதாரண குடியிருப்புகளுக்கு விதிக்கப்படும் சொத்து வரியுடன் *60* சதவீதம் மேல்வரியினை *(60% surcharge)* சேர்த்து, சொத்துவரி விதிக்க சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மான எண்.*292/2018*, நாள் 10.04.2018ல் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, மேற்படி வகையான கல்வி நிறுவனங்களின் மீது சொத்துவரி விதிப்புகள் *2/2017-18* முதல் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி கல்வி நிறுவன கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்பில், 60 சதவீதம் மேல்வரியினை (60% surcharge) எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்களால் தொடுக்கப்பட்ட வழக்குகள் **W.P.Nos.15324**, *16109…….. of 2018* **and** W.P.Nos.1338.… of 2019 மீது, 09.08.2019 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படியும்

மற்றும் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி அடிப்படையில் இயங்கும் கல்வி நிறுவன கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது சொத்துவரி விதிக்க, அரசால் வெளியிடப்பட்ட சட்ட திருத்தத்தினை *(Act Amendment)* எதிர்த்து, பல்வேறு கல்வி நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் **W.P.Nos.18008,** *34242…….26595 of 2018* and ……. *21599* of *2019* and W.P.(MD).Nos.21071 of 2018and 15658 of 2019 (Batch Cases) மீது, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் 13.09.2019 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால், விதிக்கப்பட்ட சொத்துவரியுடன் கூடிய *60* சதவீத மேல்வரியை (60% surcharge) வசூலிக்க, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், வழக்கு எண். *27451 of 2018*ன் மீது *13.09.2019* தேதியிட்டு வழங்கிய **(அரசால் வெளியிடப்பட்ட சட்ட திருத்தம் குறித்த)** தீர்ப்பினை எதிர்த்து, மாண்புமிகு உச்ச நீதி மன்றத்தில், *Tamil Nadu Nursery Primary Matriculation Higher Secondary Schools Association* என்ற அமைப்பும் (வழக்கு *Diary No.23565/2020)* மற்றும் *Vetri Vikas Girls Higher Secondary Schools* என்ற கல்வி நிறுவனமும் (வழக்கு *Diary No.5338/2022)* தாக்கல் செய்துள்ள வழக்குகள், நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், குட் ஷெப்பர்டு (Good Shepherd) மெட்ரிகுலேசன் என்ற தனியார் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு, குடியிருப்புக்கான சொத்துவரியுடன் *60* சதவீத மேல்வரி *(60% surcharge)* சேர்த்து, சொத்துவரி விதிக்கப்பட்டதற்கு, மேற்படி கல்வி நிறுவனத்தால், கேட்பு அறிவிப்பு மற்றும் *60* சதவீத மேல்வரி (60% surcharge) ஆகியவற்றிற்கு, எதிராக தடை உத்தரவு வழங்கக் கோரி, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (W.P.No.34104 of 2019), மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், *06.12.2019* தேதியிட்ட ஆணையில். "*3.* There shall be an order of interim stay of recovery till then" என இடைக்கால தடை (order of interim stay) உத்தரவு வழங்கியது.

இதனைத் தொடர்ந்து மேலும், பல்வேறு கல்வி நிறுவனங்களும் தொடர்ந்த வழக்குகள் "W.P.No.34104 of 2019, 932, 936, 1978, 1980, 2559, 2564, 3060, 3072, 3068, 3408, 3637, 3815, 3819, 5200, 6023, 7023, 7029, 12765, 8690 & 15849 of 2020, 23764, 6141 & 22017 of 2021" *(Batch Case)*, மீது, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் தனது *20.06.2022* நாளிட்ட உத்தரவில், கீழ்கண்டுள்ளவாறு ஆணையிட்டுள்ளது.

> " 22.The provision only provides for a levy of tax. In fact. **it does not even provide for the levy of any other duties or cess**. Seen in that light. the imposition of a library cess is also sans authority. However. as that is not the subject matter of challenge before me. I leave that at that.
>
> 23. As rightly pointed out. the sum total of 'general tax + educational tax + library cess' amounts to 24.8% of the annual value of buildings which is within the permissible limit whereas the addition of surcharge would carry the amount over and above the permissible limit.
>
> 24. For the aforesaid reasons. the impugned resolution. **to the extent to which it levies surcharge. is found contrary to the provisions of the respective enactments and such levies are quashed.** These Writ Petitions are allowed.
>
> No costs. Consequently. connected Miscellaneous Petitions are closed."

மாண்புமிகு சென்னை உயர் நீதி மன்றம் *20.06.2022* வழங்கிய தீர்ப்பு தொடர்பாக, மேல்முறையீடு *(Appeal)* செய்வதற்கு, சட்ட ரீதியாக வழிவகைகள், அம்சங்கள் உள்ளனவா என்பது குறித்து, திரு.பி.எஸ்.ராமன், மூத்த வழக்கறிஞர், அவர்களிடம் கருத்து *(Legal Opinion)* கோரப்பட்டது.

சொத்துவரி சீராய்வு தொடர்பாக, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன் தொடர்ச்சியாக, மன்றத் தீர்மானம் எண்.63/2022, நாள்:30.05.2022ல், கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, பொது சீராய்வின்படி சொத்துவரி மேற்கொள்வது குறித்து, இனம்-5ல் ,

*" தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, தற்போது, குடியிருப்பு தெரு கட்டணத்தில் விதிக்கப்படும் சொத்துவரியுடன் கூடுதலாக 60 சதவீதம் மிகைவரி (Surcharge) விதிக்கப்படுவதற்கு பதிலாக, குடியிருப்பு அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) 1.6 மடங்கு என சொத்துவரி விதிக்கவும், ஏற்கனவே மிகைவரி விதிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன மதிப்பீடுகளுக்கு, சொத்துவரி பொது சீராய்வின் போது, மிகைவரியினை நீக்கி, அதனை சொத்துவரியில் கணக்கில் கொண்டும் வரும் நிலையில், அம்மதிப்பீடுகளில் மிகைவரியினை நீக்கம் செய்து, அதன் பின்னர், அட்டவணையில் குறிப்பிட்டவாறு உயர்வு காரணியை கொண்டு, சொத்துவரி பொது சீராய்வினை நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் மேற்கொள்ளவும்."* என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| வரி விதிப்பு இனங்கள் | முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு | 2011 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு |
|---|---|---|
| | உயர்வு காரணி | உயர்வு காரணி |
| தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்கள் | 2.00 | 1.75 |

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கல்வி நிறுவன சொத்துவரி மதிப்பீடுகளுக்கு விதிக்கப்பட்ட 60 சதவீதம் மேல்வரி (60% Surcharge) எதிர்த்து பல்வேறு கல்வி நிறுவனங்களால் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனுக்கள் "W.P.No.34104 of 2019, 932, 936, 1978, 1980, 2559, 2564, 3060, 3072, 3068, 3408, 3637, 3815, 3819, 5200, 6023, 7023, 7029, 12765, 8690 & 15849 of 2020, 23764, 6141 & 22017 of 2021"மீது, 20.06.2022 நாளிட்டு வழங்கிய உத்தரவினை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்பதாலும், மேற்படி வழக்குகளின் மீது, **மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற தனி நீதியரசர் 20.06.2022 தேதியிட்டு பிறப்பித்த உத்தரவு தொடர்பாக, சட்ட ரீதியாக வலுவான ஆதாரங்களுடன் மேல்முறையீடு செய்ய, மூத்த வழக்கறிஞரின் (Senior Council) கருத்து கோரப்பட்டுள்ளதால், மூத்த வழக்கறிஞரிடமிருந்து பெறப்படும் கருத்துக்கு உட்பட்டு**, முறையீடு (Appeal) செய்யும் பட்சத்தில், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தால், மேற்படி 20.06.2022 தேதியிட்ட நீதிமன்ற ஆணைக்கு தடை உத்தரவு (Stay) வழங்கப்படுமாயின், மேற்படி கல்வி நிறுவன சொத்துவரி மதிப்பீடுகளுக்கு, முந்தைய சொத்துவரி விதிப்பினையே (குடியிருப்புக்கான அடிப்படை தெரு கட்டணத்துடன் கூடிய 60 சதவீதம் மேல்வரி) 2/2017-18 காலம் முதல் 2/2021-22 காலம் வரை தொடர்வதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையிலும், **கீழ்கண்ட இனங்களுக்கு, வரி விதிப்பு நிலைக்குழு மூலமாக, மன்ற தீர்மானம் எண்.565/2022, நாள் 28.10.2022ல்,**

" 1) மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் (வழக்குகள் "W.P.No.34104 of 2019, 932, 936, 1978, 1980, 2559, 2564, 3060, 3072, 3068, 3408, 3637, 3815, 3819, 5200, 6023, 7023, 7029, 12765, 8690 & 15849 of 2020, 23764, 6141 & 22017 of 2021" மீது) 20.06.2022

தேதியிட்ட ஆணையில், பத்தி 24ல், *"….the impugned resolution.* ***to the extent to which it levies surcharge. is found contrary to the provisions of the respective enactments and such levies are quashed.*** *These Writ Petitions are allowed".* என உத்தரவிடப்பட்டுள்ளதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட *தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு* (சொத்துவரி மதிப்பீடுகளுக்கு), சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மானம் எண்.292/2018, நாள் 10.04.2018ன்படி, 2/2017-18 முதல் விதிக்கப்பட்டு வரும் சாதாரண குடியிருப்புக்கான சொத்துவரியுடன் கூடிய 60 சதவீத மேல்வரியில் (60% surcharge), *60 சதவீதம் மேல்வரியினை (60% surcharge) மட்டும் 2/2017-18 முதல் 2/2021-22 வரையிலான காலத்திற்கு ரத்து செய்யவும்,*

2) மேற்படி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற 20.06.2022 தேதியிட்ட உத்தரவின் தொடர்ச்சியாக, ஏற்கனவே 2/2017-18 முதல் 2/2021-22 காலம் வரை மேற்படி, தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு (சொத்துவரி மதிப்பீடுகளுக்கு), *செலுத்தப்பட்ட சொத்துவரியில், 60 சதவீத மேல்வரியினை (60% surcharge) மட்டும் ரத்து செய்யப்பட்டபின்,* மேற்படி வகையான சொத்துவரி மதிப்பீடுகளுக்கு மட்டும் *2/2017-18 முதல் 2/2021-22 வரையிலான காலத்திற்கு, சொத்துவரி கேட்பினை நிர்ணயம் {60 சதவீதம் மேல்வரி (60 % surcharge) நீங்கலாக} செய்யவும், அவ்வாறு நிர்ணயம் செய்யும்போது கூடுதலாக சொத்துவரி செலுத்தியிருப்பின் அதனை அடுத்தடுத்த அரையாண்டுகளுக்கு ஈடு செய்யவும்,*

3) மன்றத் தீர்மானம் எண்.63/2022, நாள்:30.05.2022ல், இனம்-5ல் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி, தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, முந்தைய குடியிருப்பு அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) 1.6 மடங்கு என சொத்துவரி விதித்து, அதனை அடிப்படையாக கொண்டு, சொத்துவரி பொது சீராய்வில் குறிப்பிட்டுள்ளவாறு, உயர்வு காரணியின்படி (Increase factor of GCC Core City - 2.00 & GCC added Area- 1.75), சொத்துவரி பொது சீராய்வினை, நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு முதல் அதாவது, 1/2022-23 முதல் மேற்கொள்ளவும்." **அனுமதி பெறப்பட்டது.**

இதனைத் தொடர்ந்து, பெரும்பான்மையான தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, மன்றத் தீர்மான எண். 63/2022, நாள்:30.05.2022ன்படி, சொத்துவரி நிர்ணயம் செய்து, பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டு, அறிவிப்புகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சில தனியார்/அரசு நிதி உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, சொத்துவரி நிர்ணயம் செய்து, சீராய்வின்படி வரி நிர்ணயம் செய்து அறிவிப்புகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண். 565/2022, நாள்.28.10.2022ல், இனம்-1, 2 மற்றும் 3 ஆகிய இனங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில், மூத்த வழக்கறிஞர் திரு. பி.எஸ். இராமன் அவர்கள், 02.01.2023 நாளிட்டு வழங்கியுள்ள கருத்துருவில்,

*"The Principal ground of challenge was that the Chennai City Municipal Corporation Act ,1919 Act has no provision for the levy of surcharge , in addition Section 99(2) fixes a ceiling of 25% of the annual value of buildings and lands . If all the various levies referred above including surcharge were taken the tax becomes in excess of 25% of the annual value of buildings and lands . If all the various levies referred above including surcharge were taken the tax becomes in*

*excess of 25%.* *However if the surcharge alone was deleted the rest worked out to 24.8% which is less than the permissible limit.*

*Regarding the first question on whether the order is worth appealing against, I am afraid in the absence of a statutory enablement to demand surcharge and in view of the indefensible position that with the addition of the surcharge the percentage of tax is exceeding 25% there may not be much grounds to entertain an appeal .*

*I am of the opinion that when a tax is backed by a Statute ( as in property tax backed by section 99), the levy of surcharge as an addition has only been challenged by a handful of institutions. The rest of the educational institutions have paid the same without protest. It is therefore not necessary for the Corporation to voluntarily make refunds even to persons who have not challenged the demand..”என குறிப்பிட்டுள்ளார்.*

அதன்படி,

- மாநகராட்சியால், மேல்வரி *(Surcharge)* வசூலிக்க சட்டப்பூர்வமான வழிவகை இல்லாத நிலையிலும் மற்றும் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டப்படி, ஆண்டு மதிப்பில் 25 சதவீதம் மட்டுமே சொத்துவரி வசூலிக்க வழிவகை உள்ளநிலையிலும், 60 சதவீதம் மேல்வரியை வசூலிப்பது உகந்தது அல்ல என்பதால், இந்நிகழ்வில், மேல்வரியினை *(Surcharge)* வசூலிக்க தடை விதித்து வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு *(Appeal)* வழக்கு தொடர்வது என்பது ஏற்றதக்கதல்ல என கருத்து தெரிவித்துள்ளார்.

- ✓ மேலும், மன்றத் தீர்மான எண்.565/2022, நாள்.28.10.2022ல், அனைத்து கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கு, விதிக்கப்பட்ட மேல்வரியினை 2/17-18 முதல் 2/21-22 வரை இரத்து செய்து சொத்து வரியினை மட்டும் வசூலிக்க வேண்டும் என்பது செலுத்தப்பட்ட சொத்துவரியினை திரும்ப வழங்குவது போன்றதாகும்.

- ✓ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஆணை பெற்ற சொத்துவரி மதிப்பீடுகளுக்கு மட்டும், மேல்வரியினை நீக்கி, சொத்துவரி மட்டும் வசூலிக்க வேண்டும். சொத்துவரி மற்றும் மேல்வரியை சேர்த்து செலுத்திய சொத்துவரி மதிப்பீடுகளுக்கு, செலுத்தப்பட்ட தொகை திரும்ப அளிக்க இயலாது.

- ✓ மேற்படி விவரத்தின் அடிப்படையில், திருத்திய மன்ற தீர்மானம் பெறலாம் எனவும் கருத்துரு வழங்கியுள்ளார்.

மேற்படி, மூத்த வழக்கறிஞர் திரு. பி.எஸ்.ராமன், அவர்கள் *02.01.2023* தேதியிட்டு வழங்கிய கருத்துரையினை தொடர்ந்து சமர்ப்பிப்பது யாதெனில், **சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், *1919*, பிரிவு-*138*, அட்டவணை-*II*, விதி-10ல்,** “ No resolution of the council shall be modified or cancelled within three months after passing there of except at a meeting specially convened in that behalf and by a resolution of the council supported by such number of members as shall constitute not less than two-thirds of the sanctioned strength of the council” – ல் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டவிதிகளில், தீர்மானத்தினை மாற்றவோ *(modified)* அல்லது ரத்து செய்யவோ, மூன்று மாதங்கள் கடந்த பிறகு, மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு, வழிவகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 28.10.2022 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மானம் எண்.565/2022ன் காலம் மூன்று மாதங்கள் கடந்த நிலையில், இந்த தீர்மானத்தில், இடம்பெற்றுள்ள இனம்-1 மற்றும் இனம்-2ற்கு மாற்றாக *(Modify)* கீழ்கண்ட பத்தியினை சேர்ப்பதற்கு வரி விதிப்பு நிலைக் குழு மூலமாக மன்ற தீர்மானம் பெற மன்றத்தின் அனுமதி பெறலாம்.

எனவே " மன்றத் தீர்மான எண்.565/2022, நாள் 28.10.2022-ல், இனம்-*1*ல் குறிப்பிட்டுள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு (சொத்துவரி மதிப்பீடுகளுக்கு), சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மான எண்.292/2018, நாள் 10.04.2018ன்படி, 2/2017-18 முதல் விதிக்கப்பட்டு வரும் சாதாரண குடியிருப்புக்கான சொத்துவரியுடன் கூடிய 60 சதவீத மேல்வரியில் (60% *surcharge), 60* சதவீதம் மேல்வரியினை (60% *surcharge)* மட்டும், 2/2017-18 முதல் 2/2021-22 வரையிலான காலத்திற்கு ரத்து செய்யவும், (மற்றும்) இனம்-2ல் குறிப்பிட்டுள்ள, மேற்படி வகையான சொத்துவரி மதிப்பீடுகளுக்கு மட்டும், 2/2017-18 முதல் 2/2021-22 வரையிலான காலத்திற்கு, சொத்துவரி கேட்பினை {60 சதவீதம் மேல்வரி (60 % *surcharge)* நீங்கலாக} நிர்ணயம் செய்யும்போது, கூடுதலாக சொத்துவரி செலுத்தியிருப்பின் அதனை அடுத்தடுத்த அரையாண்டுகளுக்கு ஈடு செய்யவும், " என்பதற்கு, மாற்றாக *(to modify)* ,

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-31, விதி 10ன்படி,

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில், மேற்படி பொருள் தொடர்பாக வழக்கு *(W.P.No.34104 of 2019, 932, 936, 1978, 1980, 2559, 2564, 3060, 3072, 3068, 3408, 3637, 3815, 3819, 5200, 6023, 7023, 7029, 12765, 8690 & 15849 of 2020, 23764, 6141 & 22017 of 2021)* தொடர்ந்து, ஆணையைப் பெற்றுள்ள, தனியார் / அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன சொத்துவரி மதிப்பீட்டு இனங்கள் மற்றும் சொத்துவரி மற்றும் மேல்வரி விதிக்கப்பட்டு மேல்வரியினை செலுத்தாத தனியார் / அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன சொத்து வரி மதிப்பீட்டு இனங்கள் ஆகியவற்றிற்கு மட்டும், *II/2017*-18 முதல் *II/2021*-22 வரை 60 சதவீத மேல்வரியினை (60% *Surcharge)* இரத்து செய்வதற்கும்*"* -- என்ற பத்தியினை இடம் பெற செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.39/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**வ.து.ந.க.எண்.ஜி1/5816/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:127/2023** **பொருள் எண்.47**

**சொத்துவரி - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - கொரோனா பேரிடர் காலம் (Covid-19) - மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) - இயந்திர பொறியியல் துறை மூலமாக - பேருந்து போக்குவரத்து சேவை மேற்கொண்டதற்குரிய செலவினம் - மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் தொழில்வரியில் - நேர்செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான 3 சொத்துக்களுக்கான (வரி சீட்டு எண்.04-036-07661-000, 10-138-00977-000 மற்றும் 13-176-01119-000) நிலுவை வரி ரூ.1,47,02,0728/- - விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.5,24,990/- தனிவட்டி தொகைக்கு தளர்வளிக்க கோரியது - போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான 3 சொத்துக்களின் மீது விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.5,24,990/-க்கு - சிறப்பு நிகழ்வாக கருதி தளர்வு அளிக்க மன்றத்தின் அனுமதி.**

தமிழ்நாடு அரசு கீழ் இயங்கும் மாநகர் போக்குவரத்து கழகத்திற்கு (சென்னை), சொந்தமான சொத்துக்களுக்கு, 1/2021-22 வரை செலுத்த வேண்டிய நிலுவை சொத்துவரி செலுத்தக் கோரப்பட்டதையடுத்து, மேலாண்மை இயக்குநர், மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) அவர்களின் 02.09.2021 நாளிட்ட கடிதம் மூலம், மாண்பமை நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில், போக்குவரத்து கழக சொத்துக்களுக்கு சொத்துவரி நிர்ணயிக்குமாறும் மற்றும் தற்காலிக மேற்கூரை கட்டிடங்களான நிழற்குடைகளுக்கு (Semi Permanent) வரி விதிப்பு தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு W.P.No.32358 & 32362 of 2018 மீது, 30.09.2022 நாளிட்ட ஆணையின்படி, மண்டலம்-4ல், எண் 38, West Avenue Road, M K B Nagar , Vyasarpadi, என்ற முகவரியில் உள்ள Metropolitan Transport Corporation Chennai Ltd, சொத்திற்கு (வரி எண். 04-036-07661-000) இறுதி வரி மதிப்பீடு செய்து ஆணை வழங்கப்பட்டது.

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.18800/2021ன் மீது 07.09.2021 நாளிட்ட ஆணையில், பத்தி 6ல், ”a) First respondent is directed to consider the writ petitioner's representation dated 11.06.2021 and dispose of the same by making a speaking order as expeditiously as his business would permit and in any event within eight weeks from today i.e., on or before 02.11.2021” என குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில், மண்டலம்-13ல், எண்.2/27, பெசன்ட் நகர் முதல் அவென்யு, பெசன்ட்நகர், சென்னை-600 090 என்ற முகவரியில் உள்ள, பெசன்ட் நகர் மாநகர பல்லவன் பணிமனை சொத்துவரி (எண்.13-176-01119-000) தொடர்பாக, போக்குவரத்து கழகம் சார்ந்த அலுவலர்களுடன் 21.10.2021 அன்று நேர்முக விசாரணை நடத்தப்பெற்றதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் 04.05.2022 நாளிட்ட கடிதம் (வ.து.ம.13.ந.க.எண்.ஆர்2/2946/2019) மூலம், மேற்படி முகவரியில் உள்ள பெசன்ட் நகர் மாநகர பல்லவன் பணிமனையின் (வரி எண்.13-176-01119-000), தற்போதைய இருக்கின்ற நிலையில், கட்டிடத்தின் தரைதளம் 628 சதுர அடி நிரந்தர கட்டிமாகவும் (Permanent), தரைதளம் 22,475 சதுர அடி தற்காலிக கட்டிடமாகவும் (Semi Permanent) உள்ள நிலையில், அதற்கேற்றவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு 100ன்படி, மேற்படி பணிமனைக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை உறுதி செய்வதாகவும், ஆதலால், நிலுவை சொத்துவரியினை உடனடியாக செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், மண்டலம்-10ல் அமைந்துள்ள மாநகர போக்குவரத்து பேருந்து பணிமனையில் (வரி எண்10-138-00977-000). உள்ள, தற்காலிக மேற்கூரை கொண்ட கட்டிடத்திற்கு (Semi Permanent) சட்ட விதிகளின்படி, சொத்துவரி மதிப்பீட்டிலிருந்து விலக்களிக்க இயலாது என்றும் மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டது.

துணை ஆணையர் (வ(ம)நிதி) அவர்களின் 22.09.2021 நாளிட்ட உத்தரவில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, மாநகர போக்குவரத்து கழகம் செலுத்த வேண்டிய நிலுவை சொத்துவரி மற்றும் தொழில்வரி தொடர்பாகவும், அவ்வாறே, கொரோனா பேரிடர் தொற்று (Covid-19) காலங்களின்போது, புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக, மாநகர பேருந்துகளை இயக்கியதற்கு, மாநகர போக்குவரத்து கழகத்திற்கு (சென்னை), பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்த வேண்டிய தொகை தொடர்பாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) இணைந்து, துறை ரீதியாக முடிவெடுக்க, கூட்டம் நடத்த ஆணையிடப்பட்டது.

துணை ஆணையர் (வ(ம)நிதி) அவர்களின் தலைமையில் 29.09.2021 மற்றும் 17.05.2022, 02.06.2022 ஆகிய தேதிகளில், நடைபெற்ற கூட்டங்களின் போது, மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) சார்ந்த, மூத்த தலைமை கணக்கு அலுவலர், துணை மேலாளர், துணை காசாளர் ஆகிய அலுவலர்களும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக, மாநகர வருவாய் அலுவலர், செயற்பொறியாளர் (இயந்திரம்), தலைமை கணக்கு அலுவலர் (வ(ம)செ), உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை, இயந்திர பொறியியல் துறையைச் சார்ந்த, இதர அலுவலர்களும், கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேற்படி காலங்களில் நடைபெற்ற கூட்டங்களின் போது, இரு தரப்பு துறை உயர் அலுவலர்களாலும் விவாதித்து முடிவெடுக்கப்பட்ட முக்கிய இனங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, சொத்துவரி, தொழில்வரி தொகை என ரூ.24,17,10,498/-யை, மாநகர போக்குவரத்து கழகமும் (சென்னை) (MTC), மாநகர போக்குவரத்து கழகத்திற்கு (சென்னை) (MTC), கொரோனா பேரிடர் (Covid 19) காலங்களில், வாடகை பேருந்துகள் இயக்கப்பட்டதற்காக, செலவின தொகை ரூ.21,15,84,716/யை, பெருநகர சென்னை மாநகராட்சியும், செலுத்த வேண்டிய நிலையில், இரு துறைகளும் மேற்படி தொகைகளை நேர்செய்து (Ajustment) கொள்வதற்கு, உரிய நடைமுறைகள் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.
- மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) (MTC), பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, செலுத்த வேண்டிய கட்டணத்தை நேர்செய்து (Book Adjustment) கொள்வதாகவும், அது போக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை வரி செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம், தொழில்வரி, சொத்துவரியாக மாநகராட்சிக்கு சுமார் 20 கோடி வரை, மாநகர போக்குவரத்து கழகத்தால் நேர் செய்து கொள்ளப்படும்.
- மேலும், மாநகர போக்குவரத்து கழகம், அரசு துறையின் கீழ் இயங்கும் நிறுவனம் என்பதால், மாநகர போக்குவரத்திற்கு சொந்தமான சொத்துக்களுக்கு நிலுவை சொத்துவரி மீது விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.5,24,990/-யை தள்ளுபடி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டது.

மேலாண்மை இயக்குநர், மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை), அவர்களின் 07.06.2022 நாளிட்ட கடிதத்தில், வியாசர்பாடி பணிமனை, கே.கே. நகர் பணிமனை மற்றும் பெசன்ட் நகர் பேருந்து நிலையம் ஆகியவற்றின் சொத்துவரி தொடர்பான வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்ததாலும், சென்னை மாநகராட்சியிடமிருந்து இறுதி முடிவு பெறப்படாததாலும், சொத்துவரி செலுத்த காலதாமதமானது என்றும், மேலும், எவ்வித இலாப நோக்கமின்றி இரவு பகல் பாராது எல்லா சீதோஷண நிலைகளிலும் பொது மக்களின் சேவை ஒன்றினையே கருத்தில் கொண்டு செயல்படுவதாகவும், இலவச பேருந்து பயணம், கடுமையான டீசல் விலை உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, தொழிலாளர்களின் மாத சம்பளம் போன்ற நிகழ்வுகளால் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதகாவும், வியாசர்பாடி பணிமனை, கே.கே.நகர் பணிமனை மற்றும் பெசன்ட் நகர் பேருந்து நிலையம் ஆகியவற்றின் சொத்துவரி நிலுவைத் தொகையில் காலதாமத

அபராதத் தொகையை *(Excluding late penalty amount)* தவிர்த்து, கேட்பு அறிவிப்பு வழங்குமாறும், அபராதத் தொகை தவிர்த்து, மீதமுள்ள சொத்துவரி நிலுவை தொகைக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு, நேர்செய்து கொள்ள, இசைவு தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்ற தீர்மான எண். *447/2022*, நாள்.*29.09.2022*ல் (கோப்பு எண். இ.பொ.து.ந.க. எண்.எம்.*1/1000/2022)*, *Metropolitan Transport Corporation (Chennai) Ltd (MTC)* நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் தொழில்வரி நிலுவைத் தொகை ரூ.*24,17,10,498/-*க்கு ஈடாக, பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்த வேண்டிய வாடகை பேருந்துகளுக்கான தொகை ரூ.*21,15,84,716/-*யினை நேர்செய்ய மன்றம் பின்னேற்பு அனுமதி அளித்துள்ளது.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், <u>மண்டலம்-4ல் அமைந்துள்ள சொத்துவரி மதிப்பீடு எண். *04-036-07661-000*க்கு, *1/2011-12* காலம் முதல் *2/2022-23* காலம் வரை விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.*29,566 /-*</u>, <u>மண்டலம்-10ல் அமைந்துள்ள சொத்துவரி மதிப்பீடு எண். *10-138-00977-000*க்கு, *2/1998-99* காலம் முதல் *2/2022-23* காலம் வரை விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ. *3,53,311 /-*</u> மற்றும் <u>மண்டலம்-13ல் அமைந்துள்ள சொத்துவரி மதிப்பீடு எண். *13-176-01119-000*க்கு, *1/2005-06* காலம் முதல் *2/2022-23* காலம் வரை விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.*1,42,123/-*</u> ஆகியவை முறையே, இம்மூன்று சொத்துவரி மதிப்பீடுகளுக்கான **<u>மொத்த தனிவட்டி தொகை ரூ*5,24,990 /-*</u>**யை **தளர்வு செய்வது தொடர்பாக, பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.**

- ✓ சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், *1919*, பிரிவு எண்.*98*ன்படி, சொத்து வரி விதிக்க மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.
- ✓ அட்டவணை- IV, பிரிவு-138, விதி(3)3ன்படி, சொத்துவரி விதிப்பு குறித்து, மன்றத்தால், வழிகாட்டுதல்கள் வெளியிட வழிவகை உள்ளது.
- ✓ சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம். *1919*. சட்ட பிரிவு *138*, விதி *29-D*-ல். "**if any amount remains unpaid after the due date for its payment.** the assessee shall pay. **in addition to the amount due. <u>interest at such rate not exceeding two per cent simple interest</u>**. as may be prescribed. என குறிப்பிடப்பட்டுள்ளது
- ✓ சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.*896/2020*, நாள்.*04.11.2020*ல் கொரோனா பேரிடர் தொற்று காரணமாக சொத்துவரியுடன் தனிவட்டி *2* சதவீதம் என்பதற்கு பதிலாக *0.5* சதவீதம் என திருத்தி அமைத்து *31.03.2020* வரை வசூலிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.
- ✓ சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.*038/2022*, நாள் *15.01.2022*ல், மத்திய சேமிப்பு கிடங்கு சொத்துவரி மதிப்பீட்டிற்கு ( எண்.*05-050-02492-000)*, மத்திய அரசு நிறுவனம் என்பதால், விதிக்கப்பட்ட தனி வட்டி தொகைக்கு தளர்வு அளித்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) என்பது, தமிழ்நாடு அரசின் கீழ் செயல்டும் நிறுவனம் என்பதாலும், எவ்வித இலாப நோக்கமின்றி பொது மக்களின் சேவை ஒன்றினையே கருத்தில் கொண்டு இயங்குவதாலும், கடும் நிதி நெருக்கடியுடன் செயல்படுவதாலும், மேலாண்மை இயக்குநர், மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) அவர்களால், சொத்துவரி நிலுவைத் தொகையில் காலதாமத அபராதத் தொகையை *(Excluding late penalty amount)* தவிர்த்து, கேட்பு அறிவிப்பு வழங்க பரிந்துரை செய்துள்ளதாலும், மாநகர போக்குவரத்து கழகத்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி தொடர்பாக கீழ்கண்ட **அட்டவணை-*I*-**ல் கலம்-**(ஆ)**-ல் கண்டுள்ள **சொத்து வரிமதிப்பீடுகளுக்கு,** <u>கலம்-**(இ)**-ல் கண்டுள்ள காலங்களுக்கு, கலம்-**(ஊ)-ல்** கண்டுள்ள சொத்துவரிக்கு, கலம்-**(உ)**-ல் கண்டுள்ள தனிவட்டி தொகையினை தவிர்த்து, இதற்கு பதிலாக **கலம்-(எ)ல்** கண்டுள்ளவாறு, தனிவட்டி *0%* சதவீதம் (தனிவட்டி *0)* என குறிப்பிட்டு,</u>

**கலம்-(ஏ)-ல் கண்டுள்ளவாறு சொத்துவரி கேட்பினை (தனிவட்டி நீங்கலாக) நிர்ணயம் செய்யலாம்** என பரிந்துரைக்கப்படுகிறது.

**அட்டவணை-I**

| வ. எண். | மாநகர போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான சொத்துவரி மதிப்பீடுகள் எண். மற்றும் முகவரி | சொத்துவரி செலுத்தப்பட வேண்டிய காலம் | நிலுவை சொத்துவரி (நடப்பு மற்றும் நிலுவை) (ரூ.) | செலுத்த வேண்டிய தனிவட்டி (நடப்பு மற்றும் நிலுவை) (ரூ.) | **செலுத்த வேண்டிய சொத்துவரி மொத்தம்** { **கலம்- (ஈ)** (நிலுவை சொத்துவரி) + **கலம் (உ)** (செலுத்த வேண்டிய தனிவட்டி) } (ரூ.) | கலம் (ஆ) உள்ள சொத்துவரி மதிப்பீடுகளுக்கு, கலம் (இ)-ல் உள்ள காலங்களுக்கு **கலம்- (உ) ல் கண்டுள்ள** தனி வட்டி தொகையினை தவிர்த்து, **அதற்கு பதிலாக தனி வட்டி 0% என** மேற்படி காலங்களுக்கு குறிப்பிடலாம், **அதன்படி தனிவட்டி தொகை** (ரூ.) | தற்போது மாநகர போக்குவரத்து கழக, சொத்துவரி மதிப்பீடுகளுக்கு, **போக்குவரத்து கழகத்தால் செலுத்த வேண்டிய சொத்துவரி** **(தனி வட்டி நீங்கலாக (உ))** (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **(ஆ)** | **(இ)** | **(ஈ)** | **(உ)** | **(ஊ)** | **(எ)** | **(ஏ)** |
| 1 | 04-036-07661-000<br>38, West Avenue Road, M.K.B. Nagar, Vyasarpadi, Chennai 600039 | 1/2011-12 காலம் முதல் 2/2022-23 காலம் வரை | 21,71,519 | 29,556 | 22,01,075 | 0 | 21,71,519 |
| 2 | 10-138-00977-0002<br>2, Ashok Pillar Road, K.K..Nagar, Chennai 600078 | 2/1998-99 காலம் முதல் 2/2022-23 காலம் வரை | 88,81,331 | 3,53,311 | 92,34,642 | 0 | 88,81,331 |
| 3 | 13-176-01119-000<br>227, Besant Nagar 1st Avenue, Nagar, Besant Nagar, Chennai 600020 | 1/2005-06 காலம் முதல் 2/2022-23 காலம் வரை | 36,49,878 | 1,42,123 | 37,92,001 | 0 | 36,49,878 |
| மொத்தம் | | | | **5,24,990** | **1,52,27,718** | **0** | **1,47,02,728** |

மேற்கண்ட கருத்துக்கள் மற்றும் விவரங்களைக் கருத்தில் கொண்டு, அரசு கீழ் இயங்கும் மாநகர் போக்குவரத்து கழக நிறுவனத்திற்கு (MTC) சொந்தமான, மேற்படி அட்டவணை-I-ல் உள்ள மூன்று சொத்துவரி மதிப்பீடுகளுக்கு (எண்.04-036-07661-000, 10-138-00977-000 மற்றும் 13-176-01119-000), கலம் (ஏ) கண்டுள்ள சொத்துவரி **ரூ.1,47,02,728/-** மட்டும் (தனிவட்டி நீங்கலாக) செலுத்த ஏதுவாக, <u>இச்சொத்துக்கள் மீது விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை **ரூ.5,24,990/-**யை சிறப்பு நிகழ்வாக தளர்வு செய்து முடிவெடுக்கலாம்.</u>

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், மாநகர போக்குவரத்து கழகத்திற்கு (சென்னை) (MTC) சொந்தமான, **மேற்படி அட்டவணை-I-ல்**, கலம்-(**ஆ**)-ல் கண்டுள்ள **சொத்து வரிமதிப்பீடுகளுக்கு** (***எண்***.04-036-07661-000, 10-138-00977-000 ***மற்றும்*** 13-176-01119-000) , கலம்-(**இ**)-ல் கண்டுள்ள காலங்கள் வரை, கலம்-(**உ**)-ல் கண்டுள்ள **<u>தனிவட்டி தொகை ரூ</u>**<u>5,24,990./</u>**<u>க்கு தளர்வு</u>**

**<u>அளிக்கவும்</u>**, இதற்கு பதிலாக கலம்-(**எ**)ல் கண்டுள்ளவாறு, **<u>தனிவட்டி விகிதம்</u>** *<u>0%</u>* **<u>சதவீதம்</u>** <u>(**தனிவட்டி** *0 )*</u> **<u>என குறிப்பிடவும்</u>** மற்றும் கலம்-(**ஏ**)-ல் கண்டுள்ளவாறு **<u>சொத்துவரி கேட்பு ரூ</u>**<u>*.1,47,02,728/-*</u> ***(முறையே ரூ****.21,71,519/-,* ***ரூ****.88,81,331/-* ***மற்றும்****,* ***ரூ****.36,49,878/-)* *<u>(தனிவட்டி நீங்கலாக )</u>* ***<u>என</u>*** **<u>நிர்ணயம் செய்யவும்</u>** நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.02.2023 **அன்று** நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.60/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**வ.து.ந.க.எண்.பு.தொ.பி./2296/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *22.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:128/2023** **பொருள் எண்.48**

**புவிசார் தொழில்நுட்ப பிரிவு - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - புவிசார் தொழில்நுட்பம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்ட கட்டிடங்களை ட்ரோன் மூலமாகவும் வீடு வீடாக சென்று சீராய்வு பணி மேற்கொள்ளப்பட்டு - அளவீடு / உபயோகதன்மை மாறுபாடு உள்ள கட்டிடங்கள் கண்டறியப்பட்டது - தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டிடம் அளவீடு செய்து வருவாயை பெருக்க - ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது - ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டது - பணி ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியால் புவிசார் தகவல் வரைபடம் தயாரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை நிறுவனம் *(TNUIFSL)* மூலமாக ரூ.7.18 கோடி உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த அரசாணை எண்.*(D) 489* நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். *22-12-*2016 & அரசாணை எண்.*(D)No.330* நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.*01.10.2020*இல் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட திட்டத்திற்கான பணியினை திருவாளர்கள். தாராஷா அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது, இத்திட்டத்தினை கண்காணிக்கவும், ஆலோசனை வழங்கவும், தரச்சோதனைகள் மேற்கொள்ளவும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய அலுவலர்கள் திட்ட மேலாண்மை அமைப்பாக நியமனம் செய்யப்பட்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி இந்தியாவிலேயே முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பாக கட்டிடங்கள் மற்றும் பயன்பாட்டு சேவைகளை வரைபடம் தயாரிப்பதற்கு ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தப்பட்டது. இதன்மூலம் அனைத்து சொத்துக்களையும் (குடியிருப்பு வீடுகள், வணிகவளாகங்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசு) மற்றும் அனைத்து பயன்பாட்டு சேவைகளின் அடிப்படை வரைபடத்தை தயாரிப்பதற்கு செயற்கைக்கோள் படங்கள் மற்றும் ட்ரோன் இரண்டையும் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவிலேயே முதல் திட்டமாக டிரோன் மூலம் வான்வெளி கணக் கெடுப்புக்கு மத்திய மாநில அரசுகளிடம் இருந்து தேவையான சட்ட ரீதியான அனுமதி பெறப்பட்டது.

அடிப்படை வரைபடத்தை சிறப்பாக கட்டமைக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேலாண்மை தகவல் அமைப்பு தரவுகளை மேம்படுத்தவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் வீடு வீடாக சென்று கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளில் அளவீடு / உபயோகதன்மை மாறுபாடு உள்ள கட்டிடங்களாக 3,10,139 எண்ணிக்கைகள் தாராஷா அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் கண்டறியப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அறிக்கையாக சமர்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட 3,10,139 எண்ணிக்கையில் இதுவரை 30,899 எண்ணிக்கையிலான மாறுபாடு உள்ள கட்டிடங்கள் வருவாய்த்துறை கள பணியாளர்கள் மூலம் அளவீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டன. மீதம் உள்ள 2,79,240 எண்ணிக்கையிலான அளவீடு / உபயோகதன்மை மாறுபாடு உள்ள கட்டிடங்கள் நிவர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது.

அரசாணை 103, திட்டம் மற்றும் வளர்ச்சி *(TCIII)* துறை, நாள்.*09.09.2022* யை தொடர்ந்து நிலுவையில் உள்ள *2,79,240* எண்ணிக்கையிலான ஏற்கனவே கண்டறியப்பட்டு நிலுவையில் உள்ள மாறுபட்டுள்ள கட்டிடங்களை மறு ஆய்வு பணிகளை ஒன்பது மாதத்திற்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது, இப்பணிகளுக்காக உத்தேச செலவீன தொகையாக ரூ. *5.00* கோடி ஒதுக்க மன்றத்தின் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானத்தை தொடர்ந்து, 2,79,240 மாறுபாடு உள்ள கட்டடங்களை மறு ஆய்வு பணிக்கான ஒப்பந்தம் 21.12.2022 அன்று ஒப்பந்தம் திறப்பு செய்வதற்கு , 18.11.2022 அன்று தினகரன் மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களிலும், 17.11.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி நாளிதழ்களின் (Bulletin) மூலமாக இரண்டு ஒப்பந்தங்களாக கோரப்பட்டது.

மேலும், 28.11.2022 அன்று tn.tenders.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக e-tenders முறையில் இரண்டு ஒப்பந்தங்களாக பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் கீழ்கண்டவாறு:-

1) *Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (Fixed Rate)*
2) *Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (With Incentive Rate)*

மேற்கோரப்பட்டுள்ள ஒப்பந்தம் 21.12.2022 அன்று திறக்கப்படவுள்ள நிலையில் ஒப்பந்தத்தை பற்றி ஒப்பந்ததாரர்களின் கேள்விகளுக்கு தெளிவுபடுத்தும் வகையில் (Pre bid meeting) 06.12.2022 அன்று மாலை 3.30 மணியளவில் துணை ஆணையர்/வமநி அவர்களால், GIS பிரிவு, முதல்மாடி, A-பிளாக், அம்மா மாளிகை, ரிப்பன் கட்டடம், சென்னை- 600 003 என்ற இடத்தில் கூட்டம் நடைபெற்றது.

06.12.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில், ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த புத்தகத்தில் சில மாறுதல்கள் செய்ய வேண்டும் என கடிதம் அளித்துள்ளனர். அதனை நிவர்த்தி செய்ய போதுமான நேரம் இல்லை. ஏனெனில், அந்நேரத்தில் வடகிழக்கு பருவ மழை ( மாண்டஸ் புயல்) பெய்து வந்ததால், பேரிடர் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் 21.12.2022 அன்று திறக்கப்படவுள்ள ஒப்பந்தத்தை மேற்கொள்ள இயலாத காரணத்தால், நிர்வாக நலன் கருதி 03.01.2023ற்கு ஒப்பந்த திறப்பை மாற்றி அமைக்கவும், மேலும் ஒப்பந்ததாரர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் 16.12.2022 அன்று நடத்தவும் (Pre bid meeting) அவற்றை செய்தித் தாள்களில் வெளியிட ஒப்பந்த திருத்தம் (Corrigendum) ஆணை பெறப்பட்டது. இது சம்பந்தமாக 14.12.2022 அன்று தினகரன் மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களிலும், 13.12..2022 அன்று TN-Tenders என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து, 03.01.2023 அன்று திறக்கப்படவுள்ள ஒப்பந்தத்தை பற்றி ஒப்பந்ததாரர்களின் கேள்விகளுக்கு தெளிவுபடுத்தும் வகையில் (Pre bid meeting) 16.12.2022 அன்று மாலை 3.30 மணியளவில் துணை ஆணையர்/வமநி அவர்களால், GIS பிரிவு, முதல்மாடி, A-பிளாக், அம்மா மாளிகை, ரிப்பன் கட்டடம், சென்னை- 600 003 என்ற இடத்தில் கூட்டம் நடைபெற்றது.

அதில் ஒப்பந்ததாரர்கள் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கவும், மேலும் ஒப்பந்த புத்தகத்தில் திருத்தம் மேற்கொள்ள ஆணை பெறப்பட்டது. அவற்றை ஒப்பந்ததாரர்களுக்கு தெரியபடுத்தும் வகையில் TN-Tenders என்ற இணையதளத்தில் 16.12.2022 மற்றும் 24.12.2022 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து 03.01.2023 அன்று மாநகர வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் மற்றும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பட்டது.

முதலில் Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (Fixed Rate) என்ற ஒப்பம் திறக்கப்பட்டது. அதில் ஐந்து ஒப்பந்ததாரர்கள் பங்கு பெற்றனர். அதன் விவரம் கீழ்கண்டவாறு:-

1) திருவாளர்கள். பிரைம் மெரிடியன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட்
2) திருவாளர்கள். அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ்
3) திருவாளர்கள். அரசு அசோசைட்ஸ்
4) திருவாளர்கள். ஹாரி ஷெல்டர்ஸ்
5) திருவாளர்கள். சோமேஸ் எண்டர்பிரைசஸ்

இரண்டாவதாக *Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (With Incentive Rate)* என்ற ஒப்பம் திறக்கப்பட்டது. அதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் பங்கு பெற்றனர். அதன் விவரம் கீழ்கண்டவாறு:-

1) திருவாளர்கள். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட்
2) திருவாளர்கள். சோமேஸ் எண்டர்பிரைசஸ்

துணை ஆணையர்/வமநி அவர்களின் 14.01.2023 நாளிட்ட ஆணையின்படி, மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தை பரிசீலனை செய்ய தொழில் நுட்ப குழு அமைக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு:-

| வ.எண். | அலுவலர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 1. | திரு. விஷி மகாஜன், இ.ஆ.ப., | துணை ஆணையர் / வமநி (தலைவர்) |
| 2. | டாக்டர். சி. விஜயகுமார் | இணை இயக்குநர், நகராட்சி நிர்வாகம் |
| 3. | திரு. சி.ஏ. பாலமுரளி | மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) பெருநகர சென்னை மாநகராட்சி |
| 4. | திரு. சுகுமார் சிட்டிபாபு | மாநகர வருவாய் அலுவலர் (வருவாய் துறை), பெருநகர சென்னை மாநகராட்சி |
| 5. | செல்வி. எம்.வி. கிருஷ்ணகுமாரி | முதுநிலை கணினி மேலாளர், கணினி பிரிவு, பெருநகர சென்னை மாநகராட்சி |
| 6. | திரு. ட்டி. கருணாகரன் | தலைமை கணக்கு அலுவலர் (நிதி), பெருநகர சென்னை மாநகராட்சி. |

துணை ஆணையர்/வமநி அவர்களின் 14.01.2023 நாளிட்ட ஆணையின்படி, மேற்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப குழு பரிசீலனை செய்து ஒப்பந்த விதிகளின்படி மதிப்பெண் வழங்கப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு :-

**முதல் ஒப்பம்**

| *Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (Fixed Rate)* | | |
|---|---|---|
| வ.எண். | திரு / திருவாளர்கள் | மதிப்பெண் |
| 1. | பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 96 |
| 2. | அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் | 87 |
| 3. | அரசு அசோசைட்ஸ் | 91 |
| 4. | ஹாரி ஷெல்டர்ஸ் | 93 |
| 5. | சோமேஸ் எண்டர்பிரைசஸ் | நிராகரிக்கப்பட்டது (பணி நிறைவு சான்றிதழ்) |

**இரண்டாவது ஒப்பம்**

| *Selection of vendors to reassess Underassessed properties within the jurisdiction of Greater Chennai Corporation (With Incentive Rate)* | | |
|---|---|---|
| வ.எண். | திரு / திருவாளர்கள் | தகுதி |
| 1. | பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 96 |
| 2. | சோமேஸ் எண்டர்பிரைசஸ் | நிராகரிக்கப்பட்டது (பணி நிறைவு சான்றிதழ்) |

மேலும், முதல் மற்றும் இரண்டாம் ஒப்பந்தத்தில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தவிதிகளில் கோரப்பட்டுள்ள குறைந்தபட்ச தொழில்நுட்ப மதிப்பெண்ணான 80% விட அதிகமாக மதிப்பெண் பெற்றுள்ளதால், அவர்களை நிதி மதிப்பீட்டு செயல்முறைக்கு பரிசீலிக்கப்பட்டனர்.

ஆகையால், தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைப்படி, தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களை நிதி ஒப்பந்த திறப்பிற்கு 10.02.2023 அன்று மாலை 5.00 மணிக்கு *GIS Application Centre, Amma maligai, Greater Chennai Corporation Chamber* ல் கலந்து கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்ததாரர்கள் பங்குபெற்றனர்.

10.02.2023 அன்று திறக்கப்பட்ட நிதி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர்கள் கீழ்கண்டவாறு தொகைகளை குறிப்பிட்டிருந்தனர்.

**முதல் ஒப்பம் (நிதி ஒப்பம்)**

| Selection of *vendors to reassess Underassessed properties* within the jurisdiction of Greater Chennai Corporation (Fixed Rate) | | |
|---|---|---|
| வ.எண். | திரு/திருவாளர்கள் | குறிப்பிடப்பட்ட தொகை |
| 1. | பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 225 + 18 % GST |
| 2. | அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் | 960 + 18 % GST |
| 3. | அரசு அசோசைட்ஸ் | 975 + 18 % GST |
| 4. | ஹாரி ஷெல்டர்ஸ் | 1000 + 18 % GST |

**இரண்டாவது ஒப்பம் (நிதி ஒப்பம்)**

| Selection of *vendors to reassess Underassessed properties* within the jurisdiction of Greater Chennai Corporation (With Incentive Rate) | | |
|---|---|---|
| வ.எண். | திரு/திருவாளர்கள் | குறிப்பிடப்பட்ட சதவீதம் |
| 1. | பிரைம் மெரிடியன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 4.80 % |

இதனை தொடர்ந்து, திறக்கப்பட்ட நிதி ஒப்பத்தில் விலைகுறைப்பு செய்ய ஒப்பந்ததாரர்களிடம் 15.02.2023 அன்று காலை 10.00 மணிக்கு விலைக் குறைப்பு சம்பந்தமான பேச்சுவார்த்தை துணை ஆணையர்/வமநி அவர்களின் அறையில் நடைபெற்றது.

இதையடுத்து ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளனர். அதன் விவரம் கீழ்கண்டவாறு :-

**முதல் ஒப்பம் (நிதி ஒப்பம்)**

| Selection of *vendors to reassess Underassessed properties* within the jurisdiction of Greater Chennai Corporation (Fixed Rate) | | | |
|---|---|---|---|
| வ. எண். | திரு/திருவாளர்கள் | ஒப்பத்தில் குறிப்பிடப்பட்ட தொகை | விலை குறைப்பு பேச்சுவார்த்தை நாள் 15.02.2023 |
| 1. | பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 225 + 18 % GST | 224 + 18 % GST |
| 2. | அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் | 960 + 18 % GST | 224 + 18 % GST |
| 3. | அரசு அசோசைட்ஸ் | 975 + 18 % GST | 224 + 18 % GST |
| 4. | ஹாரி ஷெல்டர்ஸ் | 1000 + 18 % GST | 300 + 18 % GST |

**இரண்டாவது ஒப்பம் (நிதி ஒப்பம்)**

| Selection of *vendors to reassess Underassessed properties* within the jurisdiction of Greater Chennai Corporation (With Incentive Rate) | | | |
|---|---|---|---|
| வ. எண். | திரு/திருவாளர்கள் | ஒப்பத்தில் குறிப்பிடப்பட்ட தொகை | விலை குறைப்பு பேச்சுவார்த்தை நாள் 15.02.2023 |
| 1. | பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் | 4.80 % | விலை குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார் |

அதனை தொடர்ந்து இரண்டாவது விலைகுறைப்பு பேச்சு வார்த்தை 17.02.2023 அன்று துணை ஆணையர்/வமநி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள் ஒன்றாவது விலைகுறைப்பு செய்த தொகை மற்றும் சதவிகிதம் கீழ் பணி செய்ய இயலாத நிலையிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்ததாரர் தேர்வு முறை, ஒப்பந்த விதி 5.2 (ஒப்பந்த திருத்தம்-3ல்) குறிப்பிட்டுள்ளதை பின்பற்றி ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

Incentive payment அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி அளித்த இரண்டு ஒப்பந்தாரர்களான 1) திருவாளர். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் 2) திருவாளர். சோமேஷ் எண்டர்பிரைசஸ் நிறுவனங்கள் கலந்து கொண்டதில், திருவாளர். சோமேஷ் எண்டர்பிரைசஸ் தேர்வு செய்யப்படாத நிலையில் திருவாளர். பிரைம் மெரிடியன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் 17.02.2023 நாளிட்ட இசைவு கடிதம் மற்றும் விலைக்குறைப்பு சம்பந்தமான பேச்சுவார்த்தையில் Incentive payment அடிப்படையில் பணி மேற்கொள்ள வழங்கிய ஒப்புதல் அடிப்படையாக கொண்டு மூன்று வட்டாரங்களுக்கான Incentive payment க்கான பணி வழங்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. Fixed Rate அடிப்படையில் பணியாற்ற ஐந்து ஒப்பந்ததாரர்களான 1) திருவாளர். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் 2) திருவாளர். சோமேஷ் எண்டர்பிரைசஸ் 3) திருவாளர். அரசு அசோசைட்ஸ் 4) அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் மற்றும் 5) திருவாளர். ஹாரி ஷெல்டர்ஸ் பங்கேற்று, இதில் திருவாளர். சோமேஷ் எண்டர்பிரைசஸ் தேர்வு செய்யப்படாத நிலையிலும், திருவாளர். ஹாரி ஷெல்டர்ஸ் L1 க்கு நிகரான விலைப்புள்ளி ரூ. 224/- க்கு விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று 20.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாலும் மூன்று ஒப்பந்ததாரர்களான 1) திருவாளர். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் 2) திருவாளர். அரசு அசோசைட்ஸ் 3) அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் தகுதியுடைய ஒப்பந்ததாரர்களாக தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இதில், திருவாளர். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஏற்கனவே Incentive payment பணிக்கு தேர்வு செய்யப்பட்டதால் Fixed Rate அடிப்படையில் பணி செய்ய இரண்டு ஒப்பந்ததாரர்களான திருவாளர்கள். அரசு அசோசைட்ஸ் மற்றும் அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் மட்டுமே தகுதியுடைய ஒப்பந்ததாரர்களாக தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இவர்களின் திருவாளர்.அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் முதலில் விலைப்புள்ளி ரூ. 960/- + GST 18% திருவாளர் அரசு அசோசைட்ஸ் 975/- + GST 18% வழங்கியதால் முன்னுரிமை அடிப்படையில் திருவாளர்.அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் அவர்களுக்கு இரண்டு வட்டாரங்களும் மற்றும் திருவாளர் அரசு அசோசைட்ஸ் அவர்களுக்கு ஒரு வட்டாரமும் வழங்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலகெடுக்குள்ளும் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் பணியாற்ற பணி ஆணை வழங்கலாம். அவ்வாறு தவறும் பட்சத்தில் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்.

இவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பேஸ்-1 பணி ஆணைகளின்படி, Incentive payment மற்றும் Fixed Rate இரண்டையும் ஒப்பீடு செய்து இதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எது லாபமென கருதப்படுகிறதோ அதன் அடிப்படையில் பேஸ்-2 மற்றும் பேஸ்-3ற்கான பணிஆணை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும்.

ஒப்பந்ததாரர்களால் மாறுபட்ட கட்டிடங்களை எந்த அரையாண்டில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த அரையாண்டிலேயே படிவம்-7ன் மூலம் கணினியில் உள்ளீடு செய்யப்படவேண்டும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் 1/2022-2023 அரையாண்டு முதல் பொது சீராய்வு மேற்கொண்ட நிலையில், தற்போது ஒப்பந்ததாரர்கள் மூலமும் மற்றும் வரிமதிப்பீட்டாளர்கள் மூலமும் மேலும் பிற சேவை துறைகளிடம் இருந்து பெறப்பட்ட விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் விவரங்களோடு ஒப்பீடு செய்து மாறுபட்ட கட்டிடங்கள் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் ஆய்வு செய்து அந்த அரையாண்டிலேயே படிவம்-7ன் மூலம் வரி நிர்ணயம் செய்யலாம்.

எனவே,

1) திருவாளர். பிரைம் மெரிடீயன் சர்வேஸ் அவர்கள் அளித்த 4.80 சதவீதம் + GST + Flat Rate ரூ.50/- என்று ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறும், *Incentive payment* பேஸ்-1ல் குறிப்பிட்டுள்ள மாறுபட்ட கட்டிடங்களை மூன்று வட்டாரங்களின் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கவும்,

2) திருவாளர். அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் முதலில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியதால் முன்னுரிமை அடிப்படையில் திருவாளர்.அருள் நம்பி இன்ஜினியரிங் கன்ஸல்டான்ஸ் அவர்களுக்கு இரண்டு வட்டாரங்களும் மற்றும் திருவாளர்.அரசு அசோசைட்ஸ் அவர்களுக்கு ஒரு வட்டாரமும் வழங்கவும். மேலும், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி ரூ. 224 + GST ன் படி பணி ஆணை வழங்கவும்,

3) பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் 1/2022-2023 அரையாண்டு முதல் பொது சீராய்வு மேற்கொண்ட நிலையில், தற்போது ஒப்பந்ததாரர்கள் மூலமும் மற்றும் வரிமதிப்பீட்டாளர்கள் மூலமும், மேலும் பிற சேவை துறைகளிலிருந்து பெறப்படும் விவரங்களை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் விவரங்களோடு ஒப்பீடு செய்து மாறுபட்ட கட்டிடங்கள் என தெரியவரும் பட்சத்தில் அவற்றை ஆய்வு செய்து அந்த அரையாண்டிலேயே படிவம்-7ன் மூலம் வரி நிர்ணயம் செய்யவும் ,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.68/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**S.P.D.C.No.B1/0644/2020**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *03.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:129/2023** **பொருள் எண்.49**

**Greater Chennai Corporation - Special Projects Department - Construction of Green rated building of "Command, Control and Disaster Response Centre/Smart Governance Centre" in Ripon Building Campus Dn. No.58, Zone-5 – Council Resolution obtained -– Letter of Acceptance issued – Agreement executed – Work under progress –Extension of Time – For Approval.**

CSCL Board had approved the project vide Resolution dated 04.08.2020 and subsequently, approval of the High Powered Project Sanctioning Committee (HPPSC) was obtained on 21.12.2020 for a project cost of Rs.41.00 crore.

Subsequently, the project with its material specifications, quantity and rates were vetted by State Quality Monitoring Consultants and similarly, structural design were vetted by Professor from Satyabhama University appointed by TUFIDCO and officials from TUFIDCO before being placed in the HPPSC. They went through proposal and suggested design changes which lead to increase in cost of the project from Rs.41.00 crore to Rs.47.00 crore.

The High Powered Project Sanctioning Committee was convened on 21.12.2020, wherein Greater Chennai Corporation explained that the project would be an eco-friendly building that should serve as an example of environmentally sustainable construction up to the International standards of Green Buildings like LEED India and IGBC, the highest platinum certificate in the city. Minutes of the 14$^{th}$ meeting of High Powered Project Sanctioning Committee under Smart Cities Mission held on 21.12.2020 under the chairmanship of Additional Chief Secretary to Government, Finance Department, Secretariat, Chennai – 09, approved the project.

Upon approval of HPPSC, Orders of the Special Officer -in-Council were obtained to ratify the revised estimate for the project from Rs. 41.00 crore to Rs.47.00 crores including Operation and Maintenance for 5 years period and the project would be funded from Chennai Smart City Fund. The Special Officer-in-Council had also approved to call for tender for revised work value of Rs. 45,20,18,332 inclusive of GST.

Tender negotiated with L1 Contractor M/s. Chendur Infrastructure Pvt. Ltd., letter dated 22.02.2021 and 23.02.2021 and Tender was approved in the Council vide Special Officer Council Resolution No.293/2021 dated 25.02.2021 for Construction of Green rated building of "Command, Control and Disaster Response Centre/Smart Governance Centre" in Ripon Building Campus Dn. No.58, Zone-5 under Smart City Projects.

Letter of Acceptance was issued to the Contractor M/s. Chendur Infrastructure Pvt. Ltd. on 25.02.2021 for the above work and contractor have executed the Agreement with GCC for a contract period for two years (i.e. till 24.02.2023). EOT requisition Letter dated 27.01.2023 received From Contractor M/s. Chendur Infrastructure Pvt. Ltd., request for extension of time has been received for a period of six months from Contractor M/s. Chendur Infrastructure Pvt. Ltd. stating the following reasons.

1. Assembly elections during 2021 – The execution of work was in snail speed as lot of election activities were happening.

2. Shifting of major HT cables that cater to Ripon building, the main line cable routed from TNEB RMG unit affected the piling work.
3. Second wave of COVID-19 during the period of April 2021 to June 2021.
4. North east monsoon and torrential rainfall during the period of September 2021 to December 2021 and November 2022 to December 2022 and Mandas Cyclone.
5. Complete shutdown of quarry during last week of October 2021 to November 2021.

The reasons stated above by the contractor were observed to be justifiable as during the 2021 assembly elections, the piling work was executed at snail speed as lot of election related activities was happening. Also, due to lot of noise in piling activity during day hours, the piling activities were not taken up in day. Also, as there was large number of HT cables crossing along the piling locations from TNEB RMG unit caters to Ripon building, excavation was done manually for the entire stretch which affected the work progress. During second wave of COVID-19 between April 2021 to June 2021, Govt. imposed lot of restrictions and due to frequent lock downs, the work was affected. During the monsoon period and cyclones in 2021 and 2022, the execution of work got affected. Moreover, due to the complete shutdown of quarry during last week of October 2021 to November 2021, the basement filling work was majorly affected.

Therefore, considering the above reasons stated above, it is suggested that the contract may be extended for a period of four months i.e., from 25.02.2023 to 30.06.2023.

Hence,

1) To approve the extension of time for the period of four months i.e., from 25.02.2023 to 30.06.2023 for the Construction of Green rated building of "Command, Control and Disaster Response Centre/Smart Governance Centre" in Ripon Building Campus Dn. No.58, Zone-5
2) If approved, extension of time period letter may be sent to the Contractor M/s. Chendur Infrastructure Pvt. Ltd.

Sl.No.1 and 2 above Council approval is requested through standing committee (Works) and Standing Committee (T&F).

"21.02.2023 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**பணிகள்**) **கூட்டத்தின் தீர்மான எண்**. 038/2023, **நாள்**.21.02.2023-**ன்படி இதற்கு நிலைக்குழு** (**பணிகள்**) **பரிந்துரை செய்து நிலைக்குழு**(வ.வி.(ம)நி) **மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

"27.02.2023 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **கூட்டத்தில் தீர்மான எண்**.43/2023, **நாள்**.27.02.2023**ன்படி இதற்கு நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**தி.க.மே.து.ந.க.எண் அ7/2889/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:130/2023** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - இயற்கை எரிவாயு நிலையம், சோழிங்கநல்லூர் - சுற்றுச்சுவர் கட்டும் பணி - பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது - இயற்கை எரிவாயு நிலையம்-II அமைக்க உத்தேசிக்கப்பட்டதால் மறுசீரமைக்கப்பட்ட எல்லைகளில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் - திருத்திய மதிப்பீடு மற்றும் ஒப்பந்த தொகையில் 23.05% கூடுதலாக செலவீனம் மேற்கொள்ள அனுமதி.**

திருவாளர். மகாசக்தி பயோ எனர்கான் பிரைவேட் லிமிடெட் அவர்களின் 18.11.2022 தேதியிட்ட ஒப்ப ஏற்பு கடிதத்தின்படி பொது மற்றும் தனியர் பங்களிப்புடன் (PPP) வடிவமைத்தல், உருவாக்குதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்ற முறையின் கீழ் சோழிங்க நல்லூரில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையை நிர்மாணிப்பதற்காக பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 7 ஏக்கர் நிலம் இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையை நிறுவுவதற்காக அளவீடு செய்து ஒதுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நிலம் CRZ நில வகைப்பாட்டின் கீழ் வருவதால் CRZ வரம்பிற்கு அப்பால் உள்ள நிலம் அதாவது 4.43 ஏக்கர் நிலம் ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்குப் பிறகு அளவீடு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டது.

ஆணையரின் அறிவுறுத்தலின்படி இயற்கை எரிவாயு நிலையம் அமைக்கப்படவுள்ள 4.43 ஏக்கர் நிலத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்ட, மதிப்பீடு நிர்வாக அனுமதி பெற்று, திரு.எம். சுபாஸ் அவர்களுக்கு பணி ஆணை ரூ. 83,61,568/- க்கு (சரக்கு மற்றும் சேவை வரி (12%) உட்பட ஒப்ப விழுக்காடு (+) 4.20%) வழங்கப்பட்டது.

திரு. எம்.சுபாஷ் ஒப்பந்ததாரர் மூலம் சுற்றுச்சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் பள்ளிக்கரணை பழைய குப்பைக் கிடங்கை வனத் துறையிடம் ஒப்படைக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டது. எனவே பள்ளிக்கரணை பழைய குப்பைகிடங்கில் நடைபெற்று வந்த இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையின் கட்டுமானம் ஆரம்ப நிலையிலேயே ஒப்பந்ததாரரால் நிறுத்தப்பட்டது. ஒப்பந்ததாரர் பள்ளிக்கரணை பழைய குப்பைக் கிடங்கிற்கு பதிலாக மாற்று இடம் கோரியுள்ளார். அதன்படி மேற்கண்ட இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையினை சோழிங்கநல்லூரில் ஒரு ஆலையும் கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிக்கும் ஆலை வளாகத்தில் மற்றொரு ஆலையும் அமைக்க மாற்று இடம் கண்டறியப்பட்டுள்ளது.

ஏற்கனவே சோழிங்கநல்லூரில் ஒப்படைப்பு செய்யப்பட்ட 4.43 ஏக்கருடன் கூடுதலாக ஒரு ஆலைக்கு இடமளிக்கும் வகையில் திறந்த வெளி பயன்பாட்டு பகுதிகளை குறைத்து மறுசீரமைக்க ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரரால் மறுசீமைப்பு செய்து அளிக்கப்பட்ட வரைபடத்துடன் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 07.08.2022 நாளிட்ட உத்தரவின்படி, சோழிங்கநல்லூரில் மேலும் ஒரு ஆலை அமைக்க 1.72 ஏக்கர் கூடுதல் நிலம் அளவீடு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இப்பணியில் சுற்றுச் சுவர் கட்டும் பணி 195 மீட்டர் நீளம் கட்டப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் சுற்றுச்சுவர் கட்டும் பணி மறு சீரமைக்கப்பட்ட எல்லையில் கட்ட வேண்டியுள்ளது. தற்போது புதிய சுற்றுச் சுவர் மறுசீரமைக்கப்பட்ட எல்லைகளில் கூடுதல் நீளத்திற்கு கட்டப்பட வேண்டும். இரு ஆலைகளுக்கும் சேர்த்து பொதுவாக மறுசீரமைக்கப்பட்ட எல்லையில் தற்போது 263மீ நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூபாய். 59.00 லட்சம் ஆகும்.

இப்பணிக்கு கட்டப்பட்டுவரும் சுற்றுச்சுவரின் மதிப்பீடு ரூ.85.00 இலட்சத்திற்கு ஏற்கனவே நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் இதுவரை ரூ. 35.60 லட்சம் மதிப்பில் பணிகளை முடித்துள்ளார். மீதமுள்ள தொகை ரூ.49.40 லட்சம் உடன் மறுசீரமைக்கப்பட்ட எல்லையில்

சுற்றுச்சுவர் கட்ட கூடுதலாக ரூ.19.60 லட்சம் தேவைப்படுகிறது. இதற்காக மதிப்பீட்டு தொகையில் 25% க்குள் *Tamil Nadu Transparency in Tenders act 1998 (TNTT Act)*ன் படி கூடுதலான செலவீனத்தின் மூலம் பெறமுடியும்.

புதிய சீரமைப்பில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு புதிய மதிப்பீடு (FY 2022-23) தயாரிக்கப்படும் பட்சத்தில் பணி மதிப்பு 5% அதிகமாக கூடுதல் செலவினம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் புதிய டெண்டர் கோரப்பட்டு ஒப்பந்ததாரரை இறுதி செய்ய கால அவகாசம் தேவைப்படும்.

ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி ஆணையின் ஒப்பந்த காலம் 5 மாதங்கள் ஆகும். சட்டமன்றத் தேர்தல் 2021 நடத்தை விதிமுறைக் காலம் மற்றும் கோவிட் 2019 தொற்று நோய் முழு ஊரடங்கு காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி ஒப்பந்தக் காலம் 13.02.2022 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மேற்கு பகுதியில் 195 மீட்டர் நீளத்திற்கு 2.50 மீட்டர் உயரம் வரை சுற்றுச் சுவர் கட்டும் பணி நடந்து கொண்டிருந்த போது, கூடுதலாக இரண்டாவது ஆலை அமைக்கும் பொருட்டு பணி நிறுத்தப்பட்டது. எனவே வேலையை முழுமையாக முடிக்க 31.05.2023 வரை கூடுதல் ஒப்பந்தகாலம் தேவைப்படுகிறது.

எனவே, தற்போதுள்ள ஒப்பந்ததாரர் மூலம் முழுமையாக சுற்றுச்சுவர் கட்டும் பணியினை முடிக்க ஒப்பந்த மதிப்பை விட 23.05% கூடுதலாக செலவீனத்தை அனுமதிக்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்ட எல்லையில் சுற்றுச்சுவர் கட்ட அனுமதிக்கலாம்.

எனவே,

1. தற்போதுள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ். சுபாஷ் அவர்கள் மூலம் மறுசீரமைக்கப்பட்ட எல்லையில் சுற்றுச்சுவர் கட்டும் பணியினை மதிப்பீட்டுத்தொகை ரூ.85.00 இலட்சத்தில் 23.05% கூடுதலாக அதாவது ரூ. 19.60 இலட்சம் (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) (*GST* 18%, TNMWWF மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) கூடுதல் செலவீனத்தில் மேற்கொள்ளவும்.
2. தற்போதுள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். சுபாஸ் அவர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட எல்லையில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கான கூடுதல் பணிகளை ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையின்படி அதாவது, பணியின் மதிப்பீட்டுத் தொகையினை விட (+)4.20% அதிகமான விழுக்காட்டில் பணிகளை மேற்கொள்ளவும் .
3. ஏற்கனவே, நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை ரூ.85,00,000/- மற்றும் தற்போது கூடுதல் செலவீனம் ரூ. 19.60 லட்சம் ஆக மொத்தம் ரூ.1,04,60,000/- (ரூபாய் ஒரு கோடியே நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)க்கு திருத்திய நிர்வாக அனுமதியும்,
4. மறுசீரமைக்கப்பட்ட எல்லையில் சுற்றுச்சுவர் கட்டும் பணியை முடிக்க ஒப்பந்த காலத்தினை 31.05.2023 வரை நீட்டிக்கவும்,
5. இப்பணியின் மொத்த செலவீனம் *GST* உட்பட ரூ.1,04,60,000/-க்கு மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 039/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.44/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**Br.D.C.No.B3/0856/2019**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *10.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:131/2023** **பொருள் எண்.51**

**Bridges Department – Rehabilitation and Retrofitting for the existing Parthasarathy bridge at Vijayaraghav alu road, in Dn-53, Zone –V – LoA issued to M/s. SSA Techno Construction Pvt. Ltd – Work in progress – Work stopped due to rebuilding proposal of Railways – For Approval**

The work of rehabilitation and retrofitting for the existing Parthasarathy bridge (LC-7R) at Vijayaraghavalu road in Dn-53, Zone-5 has been entrusted to M/s. SSA Techno Construction Pvt. Ltd, Letter of Acceptance issued dated 28.05.2020.

The work was commenced on 16.12.2021. While carrying out the repair work in the span 6 & 7 (H1 Police station, Parking and Police Gym area) the official of Railway Department has informed that Railways have proposed to demolish the existing bridge at (LC-7R) due to the structural defects in the superstructure and to accommodate additional tracks.

In this regard, a letter dated 01.07.2022 was addressed to the DEN/Central/MAS, Southern Railway, requesting to inform about the demolition and reconstruction proposal.

Railway has requested vide letter dated 13.07.2022, to inform whether the existing bridge was constructed 50:50 cost sharing basis with State Government or under deposit terms.

In this connection, it was informed to DEN/Central/MAS, Southern Railway that the details of the RoB constructed is not available with Greater Chennai Corporation vide letter dated 21.07.2022

The retrofitting contractor M/s. SSA Techno Construction Pvt. Ltd. letter dated 23.09.2022 has requested to state the status of the Railway's proposal and to settle the bill for the work carried out till date.

At this juncture, a letter dated 18.10.2022 was addressed to the DRM/Southern Railway/Chennai Division from Principal Secretary/Commissioner, requesting to confirm whether Railways has proposed to demolish and reconstruct the Parthasarathy bridge (LC-7R), so as to take appropriate decision on the existing retrofitting contract.

The retrofitting contractor M/s. SSA Techno Construction Pvt. Ltd. has once again requested vide letter dated 10.11.2022, to state the status of the Railway's proposal and to settle the bill for the work carried out till date.

Southern Railway letter dated 15.11.2022 received has informed that the following RoB's have been shortlisted for rebuilding as there are structural cracks and requested the GCC to share the 50% of rebuilding cost.

1) Mannarsamy Koil Street Bridge, Royapuram (Bridge No.4R)
2) Parthasarathy Bridge, Vijayaraghavalu Road (Bridge No.7R)
3) Perambur Loco works Bridge (Bridge No.36)

Due to the rebuilding proposal initiated by the Southern Railway, the rehabilitation and retrofitting work for the existing Parthasarathy bridge has to be stopped at this stage. The bill for the work executed till date has to be settled to the contractor and also the contract may be closed at this stage.

Hence,

1. To make payment of Rs. 5,11,169/- (Rupees Five Lakhs Eleven Thousand One hundred and sixty nine) to the Contractor M/s. SSA Techno Construction Pvt. Ltd for the works carried out till date.

2. To closure of the contract of Rehabilitation and retrofitting for the existing Parthasarathy bridge at Vijayaraghavalu road, in Dn-53, Zone –V based on Railway's request.

Sl.No.1 and 2 above Council approval is requested, through standing committee (Works) and Standing Committee (T&F).

"21.02.2023 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**பணிகள்**) **கூட்டத்தின் தீர்மான எண்**. 040/2023, **நாள்**.21.02.2023-**ன்படி இதற்கு நிலைக்குழு** (**பணிகள்**) **பரிந்துரை செய்து நிலைக்குழு**(வ.வி.(ம)நி) **மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

"27.02.2023 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **கூட்டத்தில் தீர்மான எண்**.45/2023, **நாள்**.27.02.2023**ன்படி இதற்கு நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**க.து.ந.க.எண்.எம்2/3910/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:132/2023** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண். 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய நான்கு மண்டலங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 6 மைய சமையற் கூடங்களில் உணவு சமைத்து 38 தொடக்க பள்ளிகளில் உணவு வழங்குவதை 16.09.2022 முதல் செயல்படுத்துதல் – திட்டத்தினை செயல்படுத்தியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை நிலை எண்.43, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, நாள்.27.07.2022ன்படி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்தின் முதற்கட்டம் 16.09.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இயக்குநர் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அவர்களின் 11.08.2022 நாளிட்ட கடிதத்தில், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் அரசுத் தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு கீழ்கண்ட அட்டவணையின்படி வழங்கப்பட உள்ள காலை உணவிற்கான மூலப் பொருட்களின் அளவு மற்றும் விலை விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-1**

| நாள் - உணவு வகை | உணவு |
|---|---|
| திங்கட்கிழமை – உப்புமா வகை | 1. ரவா உப்புமா+ காய்கறி சாம்பார்<br>2. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா +காய்கறி சாம்பார் |
| செவ்வாய்க்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி<br>2. சேமியா காய்கறி கிச்சடி<br>3. சோள காய்கறி கிச்சடி<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி |
| புதன்கிழமை - பொங்கல் வகை | 1. ரவா பொங்கல் + காய்கறி சாம்பார்<br>2. வெண் பொங்கல்+ காய்கறி சாம்பார் |
| வியாழக்கிழமை – உப்புமா வகை | 1. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>2. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. ரவா உப்புமா+ காய்கறி சாம்பார்<br>5. கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் |
| வெள்ளிக்கிழமை – கிச்சடியுடன் இனிப்பு | 1. ரவா காய்கறி கிச்சடி<br>2. சேமியா காய்கறி கிச்சடி<br>3. சோள காய்கறி கிச்சடி<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி<br>மற்றும் கூடுதலாக<br>1. ரவா சேவரி<br>2. சேமியா கேசரி |

தமிழக அரசின் தலைமைச் செயலர், அவர்களின் 27.08.2022 நாளிட்ட நேர்முக கடிதத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்க திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள 37 பள்ளிகளுக்குப் பதிலாக தவறுதலாக 36 பள்ளிகள் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. Cluster – 2-ல், அன்னை சிவகாமி நகர் தொடக்கப்பள்ளி மற்றும் எண்ணூர் அனுமின் நிலைய தொடக்கப் பள்ளி (ETPS) ஆகிய இரு பள்ளிகளுக்கும் (சத்துணவு மையத்தின் அடிப்படையில்) ஒரே வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் காலங்களில் தணிக்கை தடை ஏற்படாமல் இருப்பதற்கு ஏதுவாக, பள்ளிகளின் அடிப்படையில் அன்னை சிவகாமி நகர் தொடக்கப்பள்ளி மற்றும் எண்ணூர் அனுமின் நிலைய தொடக்கப் (ETPS) பள்ளி ஆகிய இரு பள்ளிகளையும் தனித்தனியே கணக்கீடு செய்து அரசாணை (நிலை) எண்.43, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.27.07.2022-ல் வெளியிடப்பட்ட 36 பள்ளிகள் என்பதற்குப் பதிலாக 37 பள்ளிகள் என திருத்தம் செய்ய சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையிடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் 06.09.2022 அன்று கோரப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 14.09.2022 நாளிட்ட ஒப்புதலின்படி, முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்திற்கென பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய நான்கு மண்டலங்களில் சத்துணவு துறையின் கீழ் இயங்கும் மொத்த பள்ளிகளில் முதற்கட்டமாக 37 தொடக்க பள்ளிகளில் 5941 மாணவ / மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கவும் மற்றும் அப்பள்ளிகளுக்கு 6 மைய சமையல் கூடங்கள் வாயிலாக உணவு சமைத்து வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 37 பள்ளிகள் மற்றும் 6 மைய சமையல் கூடங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை-2**

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | மைய சமையல் கூடம் | பள்ளியின் பெயர் | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | 1 | 1 | **Cluster-1** புயல் காப்பம், தாழங்குப்பம், எண்ணூர் சென்னை - 57 | முகத்துவார குப்பம் தொடக்கப்பள்ளி, | 17 | 28 | 45 |
| 2 | 1 | 1 | | சத்தியவாணி முத்து நகர் தொ. பள்ளி | 62 | 68 | 130 |
| 3 | 1 | 1 | | தாழங்குப்பம் தொடக்கப்பள்ளி | 70 | 95 | 165 |
| 4 | 1 | 1 | | காமராஜ் நகர் தொடக்கப்பள்ளி | 55 | 61 | 116 |
| 5 | 1 | 1 | | பெரிய குப்பம் தொடக்கப்பள்ளி | 37 | 34 | 71 |
| 6 | 1 | 1 | | எண்ணூர் குப்பம் தொடக்கப்பள்ளி | 16 | 19 | 35 |
| 7 | 1 | 2 | | அன்னை சிவகாமி நகர் தொ. பள்ளி | 220 | 244 | 464 |
| 8 | 1 | 2 | **Cluster-2** அன்னை சிவகாமி நகர், எண்ணூர் சென்னை - 57 | கார்கில் வெற்றி நகர் தொ. பள்ளி | 209 | 201 | 410 |
| 9 | 1 | 2 | | ETPS தொடக்கப்பள்ளி | 19 | 19 | 38 |
| 10 | 1 | 3 | | காசிகோவில் குப்பம் தொ. பள்ளி தொடக்கப்பள்ளி, காசிகோவில் குப்பம், சென்னை -57. | 54 | 44 | 98 |
| 11 | 1 | 3 | | திருச்சினாங்குப்பம் தொ. பள்ளி | 11 | 9 | 20 |
| 12 | 1 | 3 | | திருவொற்றியூர் குப்பம் தொ. பள்ளி | 14 | 16 | 30 |
| 13 | 1 | 9 | | ரயில்வே காலனி தொடக்கப்பள்ளி | 47 | 44 | 91 |
| 14 | 1 | 10 | | கிழக்கு தொடக்கப்பள்ளி | 36 | 33 | 69 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 3 | 29 | **Cluster-3** ***CMDA*** **டிரக் டெர்மினல்** | பெரிய சேக்காடு தொடக்கப்பள்ளி | 62 | 74 | 136 |
| 16 | 3 | 30 | | மாதவரம் தொடக்கப்பள்ளி | 188 | 161 | 349 |
| 17 | 3 | 32 | | லட்சுமி புரம் தொடக்கப்பள்ளி | 169 | 146 | 315 |
| 18 | 3 | 33 | | பொன்னியம்மன் மேடு தொ. பள்ளி | 37 | 31 | 68 |
| 19 | 4 | 34 | **Cluster-4 சென்னை தொடக்கப்பள்ளி, டாக்டர் ராஜரத்தினம் நகர்,** | சென்னை தொடக்கப்பள்ளி சின்ன கொடுங்கையூர், | 90 | 89 | 179 |
| 20 | 4 | 37 | | சென்னை தொடக்கப்பள்ளி, கண்ணதாசன் நகர் | 143 | 121 | 264 |
| 21 | 4 | 37 | | சென்னை தொடக்கப்பள்ளி, எம். ஜி. ஆர். – *II* | 75 | 92 | 167 |
| 22 | 4 | 37 | | சென்னை தொடக்கப்பள்ளி, எம். கே. பி. நகர் | 53 | 43 | 96 |
| 23 | 4 | 37 | | சென்னை தொடக்கப்பள்ளி, டாக்டர். ராஜ ரத்தனம் நகர் | 55 | 55 | 110 |
| 24 | 4 | 37 | | சென்னை தொடக்கப்பள்ளி, உதய சூரியன் நகர் | 114 | 151 | 265 |
| 25 | 4 | 40 | **Cluster-5 பெருநகர சென்னை மநாகராட்சி கட்டடம் அம்மா உணவகம் அருகில், சிகரந்த பாளையம், சென்னை -** ***21*** | சென்னை தொடக்கப்பள்ளி திருவள்ளுவர் குவாட்ரஸ், | 78 | 70 | 148 |
| 26 | 4 | 41 | | சென்னை தொடக்கப்பள்ளி ஜெ. ஜெ. நகர் | 54 | 51 | 105 |
| 27 | 4 | 41 | | சென்னை தொடக்கப்பள்ளி எம்.ஜி .ஆர் நகர் - *I* | 165 | 164 | 329 |
| 28 | 4 | 41 | | சென்னை தொடக்கப்பள்ளி, அண்ணாநகர், கொருக்குப்பேட்டை, | 153 | 138 | 291 |
| 29 | 4 | 42 | | சென்னை தொடக்கப்பள்ளி, சேனியம்மன் கோவில் தெரு, | 103 | 93 | 196 |
| 30 | 4 | 47 | | சென்னை தொடக்கப்பள்ளி, *OLK AREA* | 158 | 152 | 310 |
| 31 | 4 | 39 | **Cluster- 6 - பெருநகர சென்னை மநாகராட்சி பழைய கட்டடம் எஸ். என். செட்டி தெரு, இராயபுரம், சென்னை -** ***13*** | சென்னை தொடக்கப்பள்ளி, இருசப்பா தெரு, செரியன் நகர் | 21 | 31 | 52 |
| 32 | 4 | 39 | | சென்னை உருது பெண்கள் தொடக்கப்பள்ளி, செரியன் நகர், | 45 | 60 | 105 |
| 33 | 5 | 50 | | சென்னை தொடக்கப்பள்ளி, அர்த்தூண் ரோடு, | 131 | 124 | 255 |
| 34 | 5 | 52 | | சென்னை தெலுங்கு தொ. பள்ளி ஆஞ்சநேயா நகர், இராயபுரம் | 80 | 66 | 146 |
| 35 | 5 | 53 | | சென்னை தொடக்கப்பள்ளி, போஜராஜா நகர், | 35 | 36 | 71 |
| 36 | 5 | 53 | | சென்னை உருது ஆண்கள் தொடக்கப்பள்ளி, காத்பாடா | 75 | 69 | 144 |
| 37 | 5 | 59 | | சென்னை தொடக்கப்பள்ளி, சைவ முத்தையா நகர், | 24 | 34 | 58 |
| **மொத்தம்** | | | | | **2975** | **2966** | **5941** |

அரசாணை நிலை எண்.*43*, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, நாள்.*27.07.2022*ன்படி, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த ரூ.*1.66* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையர் அவர்களின் பெயரில் தனி கணக்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் தொடங்கப்பட்டு முதற்கட்டத் தொகை ரூ.*58,14,278/-* வரவு வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சியில் *1, 3, 4* மற்றும் *5* ஆகிய நான்கு மண்டலங்களில் சத்துணவு துறையின் கீழ் இயங்கும் மொத்த பள்ளிகளில் முதற்கட்டமாக *38* தொடக்க பள்ளிகளில் *5941* மாணவ / மாணவியர்களுக்கு காலை உணவு வழங்க *6* மைய சமையற் கூடங்கள் அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மண்டல அளவில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்த *6* மைய சமையல் கூடங்களுக்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் சமைத்த உணவினை வெப்பத்துடன் எடுத்துச் செல்ல *HOT BOX* ஆகியவற்றினை விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் மண்டல அளவிலேயே கொள்முதல் செய்ய முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் *29.08.2022* அன்று பெறப்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

துணை ஆணையர் (கல்வி) அவர்களின் *06.09.2022* நாளிட்ட ஒப்புதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட *37* துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தேவையான *6000* எண்ணிக்கையிலான தட்டுகள் மற்றும் *6000* எண்ணிக்கையிலான டம்ளர்கள் *P.T.Rajan Trust* என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் இலவசமாக பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத்திட்டத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ***6*** *(Cluster Kitchen)* மைய சமையல் கூடங்களில் *Indian Oil Corporation Limited* நிறுவனத்தார் மூலம் எரிவாயு இணைப்பு பெற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மண்டல அலுவலர்கள்-*1, 3, 4,* (ம) *5* மூலமாக முன்பணம் பெற்று மண்டல அளவிலேயே இணைப்பு பெற முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி *06.09.2022* அன்று பெறப்பட்டு எரிவாயு இணைப்பு பெற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மூன்று மாதத்திற்கொருமுறை மேற்படி மைய சமையற்கூடங்களுக்கு தேவையான எரிவாயு உருளைகள் கொள்முதல் செய்ய தேவையான செலவினத் தொகையாக கல்வித்துறை மூலம் மண்டலங்களுக்கு வழங்க *25.10.2022* அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, அரசாணை நிலை எண்.*01* நாள்.*13.01.2023*ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்திற்கு *6* மைய சமையற் கூடங்களில் கொள்முதல் செய்த 2 சமையல் எரிவாயு உருளைகள் இரண்டு நாட்களுக்குள் திரும்ப கொள்முதல் செய்ய வேண்டிய நிலையிலும் மற்றும் விடுமுறை நாட்களில் கொள்முதல் செய்ய ஏற்படும் காலதாமத்தினை தவிர்க்க வேண்டிய நிலையிலும் கூடுதலாக மூன்று சமையல் எரிவாயு உருளைகள் கொள்முதல் செய்து வழங்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்) அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் *6* மைய சமையற் கூட பொறுப்பு அலுவலர்களாலும் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு பொறுப்பாளர்களாலும் கோரப்பட்டதன் அடிப்படையில் *6* மைய சமையற் கூடங்களுக்கு ஏற்கனவே உள்ள 2 சமையல் எரிவாயு உருளைகளுடன் கூடுதலாக மூன்று சமையல் எரிவாயு உருளைகள் கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், தலைமைச் செயலர், அவர்களின் நேர்முக கடித எண்.*7466/சந4-1/2022-4,* நாள்.27.08.2022ன்படி, மைய சமையற்கூடங்களில் உணவு வகைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் வழியாக கொள்முதல் செய்து நேரடியாக சமையல் கூடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்க சமூக நலத்துறையின் கடிதத்தின்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, காலை உணவு தயாரிக்கத் தேவையான பச்சரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை மற்றும் உப்பு ஆகிய மூலப்பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலமும், காலை உணவு தயாரிக்கத் தேவையான பிற மூலப்பொருட்கள் மற்றும் காய்கறிகளை கொள்முதல் செய்ய கூட்டுறவு நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த தமிழ்நாடு

மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் லிமிடெட் இண்ட் நிறுவனத்தின் மூலமும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

மேலும், முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்திற்கென பெருநகர சென்னை மாநகராட்சியில் காலை உணவு வழங்க 6 மைய சமையல் கூடத்தில் சமையல் பணியினை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 35 நபர்கள் முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் 29.08.2022 மற்றும் 21.12.2022 நாளிட்ட அனுமதிகளின்படி அம்மா உணவகங்களிலிருந்து தேர்ந்தெடுத்து முறையான பயிற்சி அளிக்கப்பட்டு நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.300/- வீதம் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

14.09.2022 நாளிட்ட கண்காணிப்பு பொறியாளர் (இயந்திர பொறியியல் துறை) அவர்களின் கடிதத்தின்படி, 15.09.2022 முதல் 9 மாதங்களுக்கு கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு ஒரு மைய சமையற் கூடத்திற்கு 1 வாகனம் வீதம் 6 மைய சமையற் கூடத்திற்கு 6 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை-3**

| Nature of work | 5 Hours & 15 Kms (Incl.5%GST) in Rs. | Extra Charges Per Hour after 5 Hours (Incl.5%GST) in Rs. | Extra Charges Per KM after 15 KM (Incl.5%GST) in Rs. |
|---|---|---|---|
| Hiring of Rear body Closed vehicle (Tata Ace, Ashok Leyland Dost or Equivalent vehicles) for providing breakfast for GCC primary school students in Zones 1, 3, 4 & 5 | 1468.95 | 210/- | 21/- |

பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 37 துவக்கப் பள்ளிகளில் உணவினை பரிமாறவும், இடத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ளவும், காலி செய்யப்பட்ட கொள்கலன்களை சுத்தம் செய்து வாகனத்தில் ஏற்றி மைய சமையற்கூடத்திற்கு எடுத்து வருவதற்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு NULM பணியாளரை மண்டல அலுவலர்கள் - 1, 3, 4 (ம) 5 ஆகியோர்கள் மூலம் தேர்ந்தெடுத்து முதன்மைச் செயலர்/ ஆணையர் அவர்களின் 02.09.2022 நாளிட்ட ஒப்புதலின்படி பணியமர்த்தி ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களின் நேர்முக கடிதத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்க திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் மாநகராட்சி அளவில் திட்டத்தை செயல்படுத்தும் அலுவலர் ஆவார்.

மேலும், இத்திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்துவதை கண்காணிக்க

1. பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி),
2. மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்),
3. மாநகராட்சி கல்வித்துறை அலுவலர்கள்,
4. பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள்,
5. உணவுப் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் அடங்கிய பெருநகர கண்காணிப்புக்குழு *(Greater Chennai City Monitoring Committee)* அமைக்கவும், அக்குழுவின் உறுப்பினர்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் நியமிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 08.09.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்திற்கு கீழ்கண்ட பெருநகர சென்னை மாநகர கண்காணிப்புக்குழு *(Greater*

*Chennai City Monitoring Committee)* உறுப்பினர்களாக நியமனம் செய்து திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

1. துணை ஆணையர் (கல்வி), பெருநகர சென்னை மாநகராட்சி
2. வட்டார துணை ஆணையர் (வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி,
3. மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்)
4. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி
5. கூடுதல் கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி
6. முதன்மை கல்வி அலுவலர்கள், சென்னை (ம) திருவள்ளூர் பள்ளிக்கல்வித்துறை
7. நியமன அலுவலர்கள், சென்னை (ம) திருவள்ளூர் உணவு பாதுகாப்புத்துறை

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் கட்டமாக முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 37 தொடக்கப்பள்ளிகளுக்கும் மற்றும் 6 மைய சமையல் கூடங்களுக்கும் முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் 06.09.2022 நாளிட்ட அனுமதியின்படி மண்டல அளவில் மண்டல அலுவலர்களும் மற்றும் தலைமையகத்தில் கூடுதல் கல்வி அலுவலர் அவர்களும் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்திற்கென பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 மைய சமையல் கூடங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளை எவ்வித குறையுமின்றி சிறப்புடன் மேற்கொள்ள முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் 14.09.2022 நாளிட்ட அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள், மண்டல நல அலுவலர் மற்றும் மண்டல அலுவலர்கள் ஆகியோரை மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்து இத்திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கும், மாணவர்கள் விரும்பி உண்ணும் உணவினை பரிந்துரை செய்வதற்கும் இத்திட்டத்திற்கு சமூக பங்களிப்பைப் பெறுவதற்கும் தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களின் திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி 37 பள்ளிகளுக்கும் பள்ளி அளவிலான குழுக்களானது அமைக்க முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் 06.09.2022 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

29.08.2022 நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதலின்படி, முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 37 தொடக்கப் பள்ளிகளில் உள்ள 5941 மாணவ/மாணவியர்களுக்கு சமைத்த உணவினை பெற்று பொறுப்புடன் விநியோகம் செய்ய 37 தொடக்கப்பள்ளிகளுக்குரிய பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் 37 பொறுப்பு ஆசிரியைகளுக்கு பொறுப்பு அளிக்கப்பட்டு பணி சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் சமையல் தொடக்கம் முதல் மாணவர்களுக்கு உணவு பரிமாறுதல் வரை சரியான நேரத்துடன் செயல்படுவதை கண்காணித்து சிறப்புடன் செயல்படுத்த தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட செயலி பெருநகர சென்னை மாநகராட்சி தகவல் தொழில் நுட்ப துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு திட்டம் தினந்தோறும் அனைத்து அலுவலர்களாலும் கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டமானது பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டாக செயல்படுத்தப்பட்ட 37 பள்ளிகளில் பின்வரும் மூன்று உருது பள்ளிகளும் உள்ளன.

**அட்டவணை-4**

| வ.எண் | வார்டு | மண்டலம் | பள்ளியின் பெயர் (CLUSTER- VI) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 39 | 5 | CUGPS செரியன் நகர், | 105 |
| 2 | 53 | 5 | CUBPS காத்பாடா | 144 |
| 3 | 50 | 5 | CPS அரத்தூண் ரோடு | 255 |
| | | | **மொத்தம்** | **504** |

மேற்படி, மண்டலம் 5-ல் செயல்படும் மூன்று உருது பள்ளிகளுக்கும் பிரதிவாரம் வெள்ளிக்கிழமை விடுமுறை தினம் என்பதால், அதற்கு ஈடாக பிரதிவாரம் பள்ளி வேலை நாளான சனிக்கிழமைகளில் வெள்ளிக்கிழமைக்குரிய உணவு அட்டவணையின்படி முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு காலை உணவு சமைத்து வழங்கப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்திற்கு சாம்பார் தயாரிக்க தேவையான விடுபட்ட பொருட்களான மஞ்சள் பொடி, சாம்பார் பொடி, புளி, பூண்டு, பெருங்காயம் போன்ற பொருட்கள் மற்றும் கேசரி தயாரிக்க தேவையான விடுபட்ட முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய், போன்ற பொருட்கள் மற்றும் மைய சமையல் கூடத்தில் உள்ள தரை மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்ய தேவையான Lysol, Phenoyl, பாத்திரம் கழுவும் Soap மற்றும் Scruber ஆகிய பொருட்கள் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் லிமிடெட் இண்ட் நிறுவனத்திடம் வாங்கவும், சாம்பார் மற்றும் கேசரி தயாரிக்க விடுபட்டு, அம்மா உணவகத்திலிருந்து உணவு சமைக்க உபயோகப்படுத்தப்பட்ட மேற்காணும் மூலப்பொருள்களை திரும்ப ஒப்படைக்கவும் முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் 29.09.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் காலை உணவு வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 37 பள்ளிகளிலும் காலை உணவு உட்கொள்ளும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைக்கும், தயாரிக்கப்படும் காலை உணவின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் உள்ளதால் காலை உணவு தயாரிக்க வேண்டிய மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையினை ஒவ்வொரு பள்ளிக்கும் நிர்ணயம் செய்வது மிகவும் முக்கியமானது,

காலை உணவு உட்கொள்ளும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையினை நிர்ணயம் செய்ய கீழ்க்கண்ட மூன்று முறைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. முதலாவதாக, காலை உணவு எடுத்துக் கொண்ட மாணவ மாணவியர்களின் மொத்த எண்ணிக்கையானது தனித்தனியாக செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குப் பள்ளிவாரியாகக் கூடுதல் செய்யப்பட்டு மேற்படி மூன்று மாதங்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு பள்ளியின் சராசரி கணக்கிடப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பள்ளியிலும் காலை உணவு உட்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் காணப்படுவதால் நவம்பர் மாதத்தின் சராசரியானது முதலில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த சராசரியானது ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளி வேலை நாட்களில் உணவு உட்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டது. சராசரியை விட மாணவர்கள் தினமும் குறைவான எண்ணிக்கையில் உணவு உட்கொண்டிருந்ததால் அந்த சராசரி எண்ணிக்கையானது அப்பள்ளிக்கு காலை உணவு தயாரிக்க தேவையான எண்ணிக்கையாக நிர்ணயம் செய்யப்பட்டது.
2. இரண்டாவதாக, செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் சராசரியானது கூடுதல் செய்யப்பட்டு ஒவ்வொரு பள்ளியின் மூன்று மாத சராசரி கணக்கிடப்பட்டது. இவ்வாறு கணக்கிடப்பட்ட சராசரி எண்ணிக்கையானது நவம்பர் மாதத்தில் 37 பள்ளிகளிலும் காலை உணவு உட்கொண்ட மாணவ மாணவியர்களின்

எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டது. சராசரியை விட மாணவர்கள் தினமும் குறைவான எண்ணிக்கையில் உணவு உட்கொண்டிருந்ததால் அந்த சராசரி எண்ணிக்கையானது அப்பள்ளிக்கு காலை உணவு தயாரிக்க தேவையான எண்ணிக்கையாக நிர்ணயம் செய்யப்பட்டது.

3. மூன்றாவதாக, ஒவ்வொரு பள்ளியின் மூன்று மாத சராசரியானது 0 முதல் 100 வரை இருப்பின் சராசரியுடன் கூடுதலாக 5 மாணவர்களும், 101 முதல் 200 வரை இருப்பின் கூடுதலாக 10 மாணவர்களும், 201 முதல் 300 வரை இருப்பின் கூடுதலாக 15 மாணவர்களும், 301 முதல் 400 வரை இருப்பின் கூடுதலாக 20 மாணவர்களும் சேர்க்கப்பட்டு இறுதி எண்ணிக்கையானது முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு சேர்க்கப்பட்ட பின்பு, கணக்கிடப்பட்ட மொத்த எண்ணிக்கையை விட மாணவர்கள் தினமும் குறைவான எண்ணிக்கையில் உணவு உட்கொண்டிருந்ததால் அந்த எண்ணிக்கையானது அப்பள்ளிக்கு காலை உணவு தயாரிக்க தேவையான எண்ணிக்கையாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டு, கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளபடி ஒவ்வொரு பள்ளிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கைக்கு காலை உணவு சமைத்து வழங்கப்படுகிறது.

**அட்டவணை 5:**

| S.No | CK | School Name | School Strength | | Average | | | | | Fixed | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | App | Actual | Sep 2022 | Oct 2022 | Nov 2022 | 3 Months Avg | Avg + 5% | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | Cluster 1 (977) | முகத்துவார குப்பம் தொ.பள்ளி | 43 | 43 | 36 | 29 | 27 | 31 | 36 | 31 | 798 |
| 2 | | சத்தியவாணி முத்து நகர் தொ. பள்ளி | 124 | 124 | 77 | 72 | 73 | 74 | 79 | 79 | |
| 3 | | தாழங்குப்பம் தொ.பள்ளி | 157 | 157 | 149 | 132 | 124 | 135 | 145 | 135 | |
| 4 | | காமராஜ் நகர் தொ.பள்ளி | 111 | 111 | 78 | 81 | 76 | 78 | 83 | 83 | |
| 5 | | பெரிய குப்பம் தொ.பள்ளி | 67 | 67 | 50 | 46 | 41 | 46 | 51 | 46 | |
| 6 | | எண்ணூர் குப்பம் தொ.பள்ளி | 33 | 41 | 35 | 31 | 27 | 31 | 36 | 31 | |
| 7 | | அன்னை சிவகாமி நகர் தொ. பள்ளி | 442 | 442 | 397 | 352 | 370 | 373 | 393 | 393 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | **Cluster 2 (720)** | **கார்கில் வெற்றி நகர் தொ. பள்ளி** | 390 | 390 | 306 | 276 | 270 | 284 | 304 | 304 | 579 |
| 9 | | ETPS **தொ.பள்ளி** | 36 | 36 | 32 | 27 | 25 | 28 | 33 | 28 | |
| 10 | | **காசிகோவில் குப்பம் தொ.பள்ளி** | 94 | 94 | 89 | 73 | 65 | 76 | 81 | 76 | |
| 11 | | **திருச்சினாங் குப்பம் தொ. பள்ளி** | 18 | 18 | 10 | 8 | 6 | 8 | 13 | 8 | |
| 12 | | **திருவொற்றியூர் குப்பம் தொ. பள்ளி** | 28 | 33 | 29 | 28 | 28 | 28 | 33 | 28 | |
| 13 | | **ரயில்வே காலனி தொ. பள்ளி** | 87 | 87 | 67 | 68 | 69 | 68 | 73 | 68 | |
| 14 | | **கிழக்கு தொ.பள்ளி** | 67 | 91 | 71 | 67 | 67 | 68 | 73 | 67 | |
| 15 | **Cluster 3 (827)** | **பெரிய சேக்காடு தொ. பள்ளி** | 130 | 130 | 126 | 122 | 116 | 121 | 131 | 121 | 664 |
| 16 | | **மாதவரம் தொ. பள்ளி** | 332 | 332 | 330 | 300 | 296 | 309 | 320 | 320 | |
| 17 | | **லட்சுமி புரம் தொ. பள்ளி** | 30<br>0 | 300 | 258 | 140 | 137 | 178 | 188 | 178 | |
| 18 | | **பொன்னியம்மன் மேடு தொ. பள்ளி** | 65 | 65 | 41 | 38 | 42 | 40 | 45 | 45 | |
| 19 | **Cluster 4 (1030)** | **சென்னை தொ. பள்ளி. சின்ன கொடுங்கையூர்** | 171 | 171 | 98 | 94 | 100 | 98 | 103 | 100 | 724 |
| 20 | | **சென்னை தொ. பள்ளி கண்ணதாசன் நகர்** | 251 | 251 | 193 | 167 | 150 | 170 | 180 | 170 | |
| 21 | | **சென்னை தொ. பள்ளி எம். ஜி. ஆர். - II** | 160 | 160 | 97 | 95 | 99 | 97 | 102 | 102 | |
**தீர்மான எண்:140/2023** **பொருள் எண்.60**

**Greater Chennai Corporation – Stormwater Drain Department - Construction of SWD at Thiruvottriyur High Road on both sides of the road from Tondiarpet Bus stand to CDH hospital in Div 40, Unit 10, Zone 4 under Deposit fund by CMRL- For Approval**

Zonal Officer /Zone 4, has forwarded an estimate for construction of SWD at Thiruvottriyur High Road on both sides from Tondiarpet Bus stand to CDH hospital in Div 40, Unit 10, Zone 4 under Deposit fund by CMRL for an amount of Rs.305.20 Lakhs.

Deputy Commissioner/Works has instructed on 06.12.2022, to put up the estimate file along with the levels and flow modeling for approval.

Accordingly M/s.Nesam & Ko has been appointed as Hydraulic consultant for checking of the levels, Hydraulic modeling and design of Storm water Drain.

The consultant has submitted the DPR for the construction of Storm water drain at Thiruvottriyur High Road on both sides from Tondiarpet bus stand to CDH hospital. The size of the SWD as per Hydraulic modeling has been arrived at 900 x 900 mm and length of 1034m which tallies with the estimate prepared by the zone-4

The DPR submitted by the hydraulic consultant.

Hence,

1. For approval of the estimate for Construction of Storm water drain at Thiruvottriyur High Road on both sides from Tondiarpet Bus stand to CDH hospital for an estimate amount of Rs.305.20 Lakhs
2. For carrying out the work as deposit work since the total amount of Rs3.10crore has already been paid to GCC by CMRL.
3. For calling tender as per Tamil Nadu tender transparency rules 2000.
4. For making an payment of Rs.2,43,196.80 to the hydraulic consultant M/s.Nesam & Ko towards consultancy charges for preparation of DPR with hydraulic modeling for a length of 1.034 Km ( at Rs.2,35,200/- per Km which has been approved earlier for consultancy works)

Sl.No.1 and 4 above Council approval is requested through standing committee (works) and Standing Committee(T&F).

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 071/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.57/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/ *055 /2023***

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *16.02.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:141/2023** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு *2023-24* ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண். 180/78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிபொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 253 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்கள். 943/2021 நாள் 30.12.2021 மற்றும் 528/2022 நாள் 28.10.2022 ஆகிய மன்றத்தீர்மானத்தில், 2022-23 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட ஆணையின் விவரங்கள் பின்வருமாறு,

| **2022-23** | **தொகை (%)** | **நிர்வாக அனுமதி பெறப்பட்ட கிலோ லிட்டர்** |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | 9,95,43,984.00 | 1212 |
| கூடுதல் நிர்வாக அனுமதி ஆணை | 5,65,44,000.00 | 600 |
| **மொத்தம்** | **15,60,87,984.00** | **1812** |

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

சென்னை மாநகராட்சி, வடசென்னை பிரதான வாகன நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி கீழ்க்கண்ட நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| எரி பொருள் நிறுவனம் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | வடசென்னை பிரதான வாகன நிலையம் | மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, வட சென்னை வாகன பணிமனையில் தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து, 01.02.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | *1 KL* க்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | முதற்கட்ட தேவை கிலோ லிட்டர் (2023-*24* ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | டீசல் | ரூ. 94,240/- (நாள்:01.02.2023) | *4400 ltrs./day x 30 days x 8 months = 1056 KL = 1060 KL (rounded off)* |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 1060 கி.லி. X ரூ.94.24 = ரூ. 9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு லட்சத்து தொண்ணூறு நான்காயிரத்து நானூறு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை சென்னை மாநகராட்சி வட சென்னை பிரதான வாகன பணிமனையில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டு வந்து இறங்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும் இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன.

மேலும், வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு *2023*-24 ஆம் ஆண்டிற்கான முதற்கட்ட டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 1060 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ.9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து நானூறு மட்டும்) அனைத்து வரிகள் உட்பட தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2023-24 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-*20-03-06* – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, அரசாணை (நிலை) எண்.102, நாள்07.08.2000ன்படி, டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்ப பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

மன்ற தீர்மான எண்.486/01 நாள்.18.09.2001ன்படி அரசு ஆணையினை அமுல்படுத்திட அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2023-24 ஆம் ஆண்டிற்கு, வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசல் கொள்முதல் செய்திட மாமன்ற அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு முதற்கட்ட தேவையான எரிபொருள் 1060 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து நானூறு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்தோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்தோ தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கோ *RTGS* மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
5) இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது *RTGS* மூலமாக அளிக்கவும்,

6) இதற்கான செலவினத்தை 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-*20-03-06*-எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

7) ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

“21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 056/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.52/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**இ.பொ.து.வ.செ. வா.ப.நு.க. எண். பிசி/056/ 2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:142/2023** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய - இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண். 180/78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிபொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 238 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.944/2021 நாள் 30.12.2021 மற்றும் மன்ற தீர்மான எண். 121/20222 நாள் 30.05.2022 மன்றத்தீர்மானத்தில், 2022-23 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட ஆணையின் விவரங்கள் பின்வருமாறு,

| 2022-23 | தொகை (%) | நிர்வாக அனுமதி பெறப்பட்ட கிலோ லிட்டர் |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | 7,82,49,217.00 | 924 |
| கூடுதல் நிர்வாக அனுமதி ஆணை | 1,10,23,740.00 | 117 |
| **மொத்தம்** | **8,92,72,957.00** | **1041** |

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-3 மற்றும் மண்டலம்-4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி கீழ்க்கண்ட நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| எரி பொருள் நிறுவனம் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷ்ன் | மண்டலம் 4 லாரி நிலையம் | மண்டலம்-3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையில், எண்ணெய் நிறுவனங்கள் தங்களது மொத்தக் கொள்முதல் விலைக்கும் சில்லரை கொள்முதல் விலைக்கும் வெவ்வேறு விலை நிர்னணம் செய்த நிலையில் , மன்ற தீர்மான எண். 121/2022, நாள். 30.05.2022ன்படி சில்லரை விற்பனை விலைப் புள்ளியின் அடிப்படையில் திருவாளர்கள். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் டீசல் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டுள்ளது. அதன்அடிப்படையில் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து, 01.02.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | *1 KL* க்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2023-2024 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் | டீசல் | ரூ.94,220/-<br>(நாள்:01.02.2023) | *2900 Ltrs./ day x 30 days x12 months = 1044 KL = 1050 KL (rounded off)* |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 1050 கி.லி. *X* ரூ94,220 = ரூ. 9,89,31,000/- (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்தொன்பது லட்சத்து முப்பத்தோராயிரம் மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை சென்னை மாநகராட்சி, மண்டலம்-4 லாரி நிலையத்தில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறங்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன.

மேலும், மண்டலம் 4 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2023-*2024* ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 1050 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு ஆணை வேண்டப்பட்ட நிலையில் துணை ஆணையர் ( வருவாய் (ம) நிதி) அவர்களின் குறிப்பின் படி 1050 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு அனுமதித்து அதன் மொத்த தொகையான ரூ.9,89,31,000/-( ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஒன்றாயிரம் மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2023-2024 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-*20-03-06* – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை

மற்றும் காப்பீட்டு தொகை செலுவத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்தோ அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்தோ அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண்.102, நாள் 07.08.2022ன்படி, டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2023-24 ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 4 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்- 3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2. மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையானஎரிபொருள் 2023-2024 ஆம் ஆண்டிற்கு 1050 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.9,89,31,000/-( ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஒன்றாயிரம் மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்தோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்தோ தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கோ *RTGS* மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4) இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5) இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வவ்போது *RTGS* மூலமாக அளிக்கவும்,

6) இதற்கான செலவினத்தை 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-*20-03-06*- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

7) ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு அனுமதி கோரிய குறிப்பில், துணை ஆணையர் (வருவாய்(ம) நிதி) அவர்களின் 15.02.2023 நாளிட்ட மேற்குறிப்பில் ***"May be restricted 1000 KL "*** என தெரிவித்துள்ளார்.

துணை ஆணையர் (வருவாய்(ம) நிதி) அவர்களின் மேற்குறிப்புடன், மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 057/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.53/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண். சி1/048/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:143/2023** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம்-7 லாரி நிலையத்தில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு - 36 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - ஒப்பந்தம் 29.03.2023 அன்றுடன் நிறைவுபெறுகிறது - 5 வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஒப்பந்தம் நிறைவுற்றது - மண்டல அலுவலரின் கூடுதல் வாகன கோரிக்கை - துப்புரவு பணியினை தொய்வின்றி மேற்கொள்ள 53 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 365 நாட்களுக்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி. இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை, பூங்கா துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள மொத்தம் 240 கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் வாகனங்கள் மூன்று வேளைகளிலும் இயக்க துறை சார்ந்த ஓட்டுநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதையொட்டி தேவைக்கேற்ப அந்தந்த மண்டல லாரி நிலையங்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மண்டலம்-7 லாரி நிலையத்தில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள ஓட்டுநர் பற்றாக்குறைகளை களைய 36 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை *29.11.2022* பணியாணையின்படி பணியமர்த்தப்பட்டனர். இந்த ஆணை வரும் 29.03.2023 அன்றுடன் முடிவு பெறுகிறது. மேலும் மண்டலம்-7 லாரி நிலையத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் மூலம் 5 வாகனங்கள் ஒப்பந்ததாரர் மூலம் இயக்கப்பட்டு வந்தது அதுவும் தற்போது முடிவடைந்துவிட்டது.

தற்போது மண்டலம்-7 மண்டல அலுவலர் அவர்களின் கடித பரிந்துரையில் காலை, மதியம் மற்றும் இரவு கூடுதலாக வாகனங்களை அனுப்புமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் ஏற்கனவே அனுப்பப்பட்டு கொண்டிருந்த வாகனங்களின் அடிப்படையிலும், அயற்பணிகள் செய்வதற்காகவும் சேர்த்து மொத்தம் 88 ஓட்டுநர்கள் ஒரு நாளைக்கு தேவைப்படுகின்றனர். இதில் 33 நிரந்தர ஓட்டுநர்களும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஒப்பந்ததாரர் மூலம் 08 ஓட்டுநர்களும் உள்ளனர். நிரந்தர ஓட்டுநர்களில் 03 பேர் வெகு நாட்களாக பணிக்கு வருவதில்லை. அவர்களின் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 03 ஓட்டுநர்கள் துப்புரவு ஆய்வாளராக அயற் பணியில் உள்ளனர். எனவே, 33 நிரந்தர ஓட்டுநர்களில் 27 ஓட்டுநர்கள் மட்டுமே பணி செய்கின்றனர். மேலும், நிரந்தர ஓட்டுநர்கள் வார விடுப்பு, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பில் செல்லும்போது அவ்விடத்தில் தற்காலிக மாற்று ஓட்டுநர்களை அமர்த்த வேண்டி உள்ளது. இவற்றை கருத்தில் கொண்டு லாரி நிலையத்திற்கு தேவையான ஓட்டுநர்களை கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**DRIVER REQUIREMENT LIST**

| SL. No | TYPE OF VEHICLES | AM SHIFT | PM SHIFT | NIGHT SHIFT | TOTAL MARCHOUT | O&M | GCC | Shortage of Drivers |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | HMV COMPACTOR | 5 | 3 | 5 | 13 | 0 | 2 | 11 |
| 2 | LMV COMPACTOR | 8 | 2 | 5 | 15 | 0 | 1 | 14 |
| 3 | HMV TIPPER (GARDEN GARBAGE) | 2 | 1 | 0 | 3 | 0 | 0 | 3 |
| 4 | HMV TIPPER (Debris) | 5 | 2 | 0 | 7 | 0 | 6 | 1 |
| 5 | HMV TIPPER (AIEMA) | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 2 |
| 6 | HMV TIPPER (Water Hyacinth & Silt) | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | Front End Loader(AIEMA) | 1 | 1 | 0 | 2 | 0 | 1 | 1 |
| 8 | Front End Loader(Water Hyacinth & Silt) | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 9 | Skid Steer Loader (O&M) | 3 | 1 | 0 | 4 | 4 | 0 | 0 |
| 10 | CATTLE CATCHER | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 11 | DOG VAN | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 12 | TAURUS | 6 | 0 | 6 | 12 | 0 | 0 | 12 |
| 13 | MECHANICAL SWEEPER | 0 | 1 | 1 | 2 | 2 | 0 | 0 |
| 14 | Excavator | 1 | 0 | 1 | 2 | 2 | 0 | 0 |
| 15 | AMBULANCE | 2 | 2 | 0 | 4 | 0 | 0 | 4 |
| 16 | Zonal officer Jeep | 1 | 1 | 1 | 3 | 0 | 3 | 0 |
| 17 | EE -1 | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 18 | EE-2 | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 19 | AHO | 1 | 1 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 20 | ZMO | 1 | 1 | 0 | 2 | 0 | 0 | 2 |
| | **TOTAL** | **44** | **19** | **19** | **82** | **8** | **23** | **51** |
| 21 | BREAK DOWN VEHICLE | 1 | 1 | 1 | 3 | 0 | 2 | 1 |
| 22 | PARKING DUTY | 0 | 1 | 1 | 2 | 0 | 1 | 1 |
| 23 | Spares from CCD and Authorised dealers on General Shift | 1 | | | 1 | 0 | 1 | 0 |
| **GRAND TOTAL** | | **46** | **21** | **21** | **88** | **8** | **27** | **53** |

**<u>நிரந்தர ஓட்டுநர்களின் விவரம்</u>**

| | | |
|---|---|---|
| மண்டலம்-7 மொத்த நிரந்தர ஓட்டுநர்களின் எண்ணிக்கை | : | 33 (-) |
| மாற்றுப்பணி அடிப்படையில் பணிப்புரியும் ஓட்டுநர்கள் எண்ணிக்கை | : | 12 |
| நீண்ட நாட்களாக பணிக்கு வருகை புரியாமல் இருக்கும் ஓட்டுநர்கள் எண்ணிக்கை | : | 3 |
| தற்போது மண்டலம்-7 லாரி நிலையத்தில் பணிப்புரியும் நிரந்தர ஓட்டுநர்களின் எண்ணிக்கை | : | 18 |

| | | |
|---|---|---|
| **A** | Total Driver Requirement for Zone-7 Lorry Station (AM/PM/Night) | **88** |
| **B** | Drivers on O&M by Contractor | 8 |
| **C** | Required Drivers for Zone-7(A-B) | **80** |
| **D** | Deputation GCC Drivers | 12 |
| **E** | GCC Drivers Long absentees | 3 |
| **F** | Total Drivers Required for Zone 7 Lorry Station (F=C-D-E) | **65** |
| **G** | Permanent Driver available for Conservancy and others | 18 |
| **H** | Total Drivers Required for Zone 7 Lorry Station (H= F-G) | **47** |
| **I** | Substitute Drivers for GCC authorized Weekly Off (18/7) | 3 |
| **J** | Substitute Drivers for GCC authorized leave (18X0.15) | 3 |
| **K** | Actual total wanted of Drivers (K=H+I+J) | **53** |

மேற்கண்ட கணக்கீட்டின்படி, மண்டலம்-7 லாரி நிலையத்தில் 7 வது மண்டலத்தின் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள கூடுதலாக 53 ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது மேற்கண்ட ஓட்டுநர்கள் தேவையை பூர்த்தி செய்ய நிரந்த ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் தற்காலிக ஓட்டுநர்களை தமிழக அரசின் பொதுப்பணி துறையின் விலைவிவர பட்டியலின்படி குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் மின்னனு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகின்றது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தனியார் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் கீழ்வருமாறு:

| Rate of Schedule of PWD for the year 2022-23 | | | Administrative Charges (3%) (Rs.) | Total (Rs.) | GST 18% (Rs.) | Rate per day per driver |
|---|---|---|---|---|---|---|
| Basic rate per day per driver (Rs.) | Additional wages for Chennai City (10%) (Rs.) | Total (Rs.) | | | | Grand Total (Rs.) |
| A | B | C | D | E | F | G |
| A | (A x 10%) | (A+B) | (C x 3%) | (C+D) | (E x 18%) | (E+F) |
| 778 | 77.8 | 855.8 | 25.67 | 881.47 | 158.67 | 1040.14 |

Schedule of rates of PWD for the year 2022-23
Rate per day per driver : Rs. 1040.14/-
Rate per day for 53 drivers (1040.14 x 53) : Rs. 55,127.42/-
Rate for 53 drivers for 365 days (1040.14 x 53 x 365) : Rs. 2,01,21,508.30/-

எனவே 53 எண்ணிகையிலான ஓட்டுநர்களுக்கு நாளொன்றுக்கு ஆகும் செலவீனம் ரூ.55,127.42/- ஆகும். அதன்படி 365 நாட்களுக்கு 53 ஓட்டுநர்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ.2,01,21,508.30/- (ரூபாய். இரண்டு கோடியே ஒரு இலட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து ஐநூற்று எட்டு மற்றும் முப்பது பைசா மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) மேற்படி செலவீனம் இயந்திர பொறியியல் துறையின், 2022-23 ஆம் ஆண்டிற்கான ஆய்வு வாகன பணிமனையின் (40-41-10) கணக்கு எண். 230-800- 400, Hire Charges என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

*2022*-23 ஆம் நிதி ஆண்டில் கணக்கு எண்..230-800-400 கீழ் வரவு வைக்கப்படும் விவரம்

| | |
|---|---|
| 2022-23ல் கணக்கு எண்.230-800-400 கீழ் ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.10,00,00,000/- |
| இது வரை செலவிடப்பட்ட தொகை | ரூ.5,44,90,186/- |
| இத்திட்டத்திற்கான தோராய தொகை | ரூ. 2,01,21,508/- |
| மீதத் தொகை | ரூ. 2,53,88,306/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரம், மண்டலம்-7 லாரி நிலையத்தில் இயக்கப்படும் கனரக / இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் இன்ன பிற வாகனங்களையும் 365 நாட்களுக்கு இயக்குதல் பணிகளை காலை / மதியம் / இரவு வேளைகளில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 53 எண்ணிகையிலான தற்காலிக ஓட்டுநர்களை நாளொன்றுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ.1040.14/- வீதம் 53 ஓட்டுநர்களுக்கு 365 நாட்களுக்கு (Rs. 1040.14/- x 53 Drivers x 365 Days) ரூ.2,01,21,508.30/- (ரூபாய். இரண்டு கோடியே ஒரு இலட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து ஐநூற்று எட்டு மற்றும் முப்பது பைசா மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,
2. இதற்கான செலவீனமான ரூ.2,01,21,508.30/- (ரூபாய். இரண்டு கோடியே ஒரு இலட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து ஐநூற்று எட்டு மற்றும் முப்பது பைசா மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) இயந்திர பொறியியல் துறையின். 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கென, ஆய்வுவாகனப் பணிமனை (40-41-10) கணக்கு குறியீட்டு எண் 230-800-400 Hire Charge கீழ் மேற்கொள்ளவும்,

3. இச்செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-800-400 என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 070/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.56/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

******

**இ.பொ.து.ந.க.எண்.எம்.1/0885B/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:144/2023** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை -ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை (*Amphibian Equipment - Water Master Classic IV C4097*) 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது - மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* அவர்களுக்கு இப்பணிக்கான ஒப்பத்தினை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாநகர எல்லைக்குட்பட்ட நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் இயந்திர பொறியியல் துறை மூலம் சிறப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 3.5 மீட்டருக்கு மேல் அகலமாக உள்ள நீர் வழித்தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக கூடுதலாக ஒரு ஆம்பிபியன் உபகரணம் *Amphibian Equipment 2016* ஆம் ஆண்டு *M/s. Aquamec Finland* நிறுவனத்தாரிடமிருந்து அவர்களது அங்கீகரிக்கப்பட்ட இந்திய விற்பனையாளரான *M/s. Dharsan Dredging & Construction, Pvt ltd* அவர்கள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது.

இந்த ஆம்பிபியன் உபகரணமானது உயர் தொழில் நுட்ப அம்சங்கள் கொண்டதால் இவற்றை கையாள பெருநகர சென்னை மாநகராட்சியில் உயர் தொழில் நுட்பம் கொண்ட உபகரணத்தினை இயக்கி பராமரிப்பதற்கு திறன்மிகு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தொய்வு இல்லாமல் கால்வாய்களில் தூய்மை பணிகளை மேற்கொள்ள இவ்வுபகரணத்தை கொள்முதல் செய்யும் பொழுது உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவில் உள்ள தகுதியான நிறுவனம் மூலம் ஐந்தாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (டீசல் தவிர்த்து) பணியுடன் கொள்முதல் செய்யப்பட்டது.

அதற்கான விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மன்றத்தீர்மான எண். | பொருள் | உற்பத்தியாளர் விவரம் | உபகரண மாதிரி விவரம் | உபகரண எண். | அங்கீகரிக்கப்பட்ட இந்திய நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 274/2015 நாள். 06.07.2015 | ஒரு எண்ணிக்கை ஆம்பிபியன் உபகரணம் ஒரு வருடத்திற்கு இ(ம)ப பணியுடன் கூடிய ஒப்பந்தம் | M/s. Aquamec Finland Ltd., | Water master Classic IV | C4097 | M/s. Dharsan Dredging & Constructions Pvt. Ltd., |

இந்நிலையில் தற்போது மேற்குறிப்பிட்டுள்ள ஆம்பிபியன் *(Classic IV C4097)* உபகரணத்தின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளது. மேலும் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நீர் நிலைகளை வருகிற பருவமழை காலத்திற்குள் சுத்தப்படுத்தி மழைக்காலங்களில் நீர் நிலைகளின் நீரோட்ட திறனை அதிகப்படுத்துவதற்கு உபகரணத்தின் பணியை முழு வீச்சில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்த ஆம்பிபியன் உபகரணமானது *(Classic IV C4097)* வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையான உபகரணங்களை இயக்குதலில் முன் அனுபவம் பெற்றுள்ள பணியாளர்களை நியமிப்பது மற்றும் பராமரிப்பதற்கு தேவையான உபகரண உதிரிபாகங்களை வெளிநாட்டில் இருந்து கொள்முதல் செய்ய வேண்டியது ஆகியவற்றினை கருத்தில் கொண்டு ஆம்பிபியன் உபகரணத்திற்கான *(Classic IV C4097)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகளை (டீசல் தவிர்த்து) மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பம் கோரி

**தகுதியான ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,57,10,000/- *(Excl GST)*க்கு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 04.06.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டு மன்ற தீர்மான எண்.190/2022 நாள் 28.06.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:**

| வ. எண் | ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் *(Amphibian Water Master Classic IV C4097)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி | இயக்குதல் பணிக்கான தொகை (ஒரு மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) (அ) | பராமரிப்பு பணிக்கான தொகை (நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) (ஆ) | இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை (நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) | ஒப்பத்திற்கான தோராய மொத்த தொகை (அ*(x8)* + ஆ) *x 300* |
|---|---|---|---|---|---|
| *1* | முதலாம் ஆண்டிற்கான தொகை | *1,445* | *24,400* | *=((1,445 X 8) +24,400) =35,960* | *=1,07,88,000/-* |
| *2* | இரண்டாம் ஆண்டிற்கான தொகை | *1,590* | *26,840* | *=((1,590 X 8) +26,840) =39,560* | *=1,18,68,000/-* |
| *3* | மூன்றாம் ஆண்டிற்கான தொகை | *1,748* | *29,524* | *=((1,748 X 8) +29,524) =43,508* | *=1,30,52,400/-* |
| மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை *(GST* தவிர்த்து) | | | | | ரூ. *3,57,08,400/-*<br>**ரூ. *3,57,10,000/-*** |

**மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் இப்பணிக்கான ஒப்பம் 12.07.2022 அன்று கோரப்பட்டு 26.08.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத்தில் எந்த ஒப்பந்ததாரரும் பங்கு பெறாத காரணத்தால் தலைமை பொறியாளர் (இ/தி.க.மே) அவர்களின் 29.08.2022 நாளிட்ட அனுமதி பெற்று குறுகிய கால மின்னணு ஒப்பம் 30.08.2022 அன்று கோரப்பட்டது. இவ்வொப்பத்திற்கான முந்தைய கூட்ட நடவடிக்கையில் ஒப்பந்ததாரரின் கோரிக்கைகிணங்க ஒப்பம் ஒத்தி வைக்கப்பட்டு இறுதியாக 02.12.2022 அன்று திறக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட 2 நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.**

1. *M/s. N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)*
2. *M/s. Dharsan Dredging and Construction Pvt Ltd (Authorized Dealer of Equipment Manufacturer, M/s Aquamec Finland)*

**மேற்கண்ட 2 நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்திருந்ததால், இந்நிறுவனங்களின் ஒப்பங்கள் 10.12.2022 அன்று ஏற்கப்பட்டு, இந்நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் 10.12.2022 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு.**

| Operation and Comprehensive Maintenance of 1 No of Amphibian Equipment for a period of 3 Years (Water Master Classic IV C4097) | | | | |
|---|---|---|---|---|
| Name of the Company | Operation Cost (Exclu. GST) in. Rs | Maintenance Cost (Exclu. GST) in. Rs | Operation and Comprehensive Maintenance (Exclu.GST) in. Rs | Remarks |
| M/s. Dharsan Dredging Constructions Pvt Ltd., | 1,32,04,800/- | 2,78,64,000/- | 4,10,68,800/- | |
| M/s. N.Mohamed Jamaluddin | **1,29,72,000/-** | **2,73,85,500/-** | **4,03,57,500/-** | **L1** |

**மேற்கண்ட அட்டவணையின்படி, ஒரு ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097)* 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகையில் *(A + B)* குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* தகுதியுடைய *(L1)* ஒப்பந்ததாரர் ஆவார்.**

இந்நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள வழங்கிய மொத்த தொகை ரூ.4,03,57,500/- *(Exclu GST)* குறிப்பிட்டுள்ளனர். இது ஒப்ப தொகை ரூ.3,57,10,000/-ஐ காட்டிலும் 13.01% கூடுதலாகும்.

எனவே, இந்நிறுவனத்தாரை விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி *10.12.2022* நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டது, திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தார் தங்களது *16.12.2022* நாளிட்ட கடிதம் வாயிலாக விலைகுறைப்பு செய்து வழங்கியுள்ளார் அதன் விவரம் பின்வருமாறு:

| Description | Year | Quoted by M/s. N.Mohamed Jamaluddin. (Excl GST) Rates Quoted 1st Negotiation | | | Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|
| | | Operation Cost per Hour (In Rs.) | Operation Cost per day (8 Hrs Shift) | Total Operation Cost (300 days) (in Rs.) | |
| **Operation Cost** | 1st year | **1,600** | **12,800** | **38,40,000** | 10.73 % Excess |
| | 2nd year | **1,750** | **14,000** | **42,00,000** | 10.06 % Excess |
| | 3rd year | **1,930** | **15,440** | **46,32,000** | 10.41 % Excess |
| **TOTAL** | | | | **1,26,72,000/-** | **10.40 % Excess** |
| **Comprehensive Maintenance cost** | 1st year | **Rs.27,450 per day** | | **82,35,000** | 12.50 % Excess |
| | 2nd year | **Rs.30,300 per day** | | **90,90,000** | 12.89 % Excess |
| | 3rd year | **Rs.33,350 per day** | | **1,00,05,000** | 12.96 % Excess |
| **TOTAL** | | | | **2,73,30,000** | **12.78 % Excess** |
| **TOTAL O & M Cost for a period of 3 years.** | | | | **4,00,02,000/-** | 12.02 % Excess |

இந்நிறுவனத்தாருக்கு, மேலும் விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி 16.12.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin* நிறுவனத்தார் அவர்கள் 19.12.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக தாங்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதாகவும் உதிரி பாகங்கள் விலை, பணியாளர்களின் சம்பளம் ஆகியவற்றில் ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக தாங்கள் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin* நிறுவனத்தார் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியானது மதிப்பீட்டை விட 12.02% கூடுதலாக உள்ளதால், இந்த ஒப்பத்தினை ரத்து செய்ய மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.து) அவர்களின் 19.12.2022 நாளிட்ட ஆணை பெற்று ஒப்பம் ரத்து செய்யப்பட்டது. பணியில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு குறுகிய கால மறு மின்னனு ஒப்பம் கோர தலைமை பொறியாளர் (இ/தி.க.மே.து) அவர்களின் 09.01.2023 நாளிட்ட ஆணை பெற்று மறு மின்னனு ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப அறிவிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர், ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேட்டில் வெளியிடப்பட்டது. மின்னனு ஒப்பம் 03.02.2023 அன்று திறக்கப்பட்டது.

இதில் கீழ்கண்ட 2 நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. *M/s. N.Mohamed Jamaluddin ( Hiring Contractor for Dredging Equipment)*
2. *M/s. Dharsan Dredging and Construction Pvt Ltd (Authorized Dealer of Equipment Manufacturer, M/s Aquamec Finland)*

மேற்கண்ட 2 நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்திருந்ததால், இந்நிறுவனங்களின் ஒப்பங்கள் 03.02.2023 அன்று ஏற்கப்பட்டு, இந்நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் 11.02.2023 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

## ***Rates Quoted in Tender - Operation Cost - (A)***

| S. No. | Description | Year | Estimated value (Rs.) (Excl. GST) | | Quoted by M/s. Dharshan Dredging and constructions Pvt. Ltd. (Excl GST) | | Quoted by M/s. N. Mohamed Jamaluddin. (Excl GST) | | L1 Bidder | L1 Rate Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Operation Cost per Hour (In Rs.) | Total Operation Cost (@ 8 hrs / day and 300 days) (in Rs.) | Operation Cost per Hour (In Rs.) | Total Operation Cost (300 days) (in Rs.) | Operation Cost per Hour (In Rs.) | Total Operation Cost (300 days) (in Rs.) | | |
| 1 | Operation Cost per hour | 1st year | 1,445 | 34,68,000 | 1,546 | 37,10,400 | **1,500** | **36,00,000** | M/s. N. Mohamed Jamaluddin | 3.81 % Excess |
| 2 | | 2nd year | 1,590 | 38,16,000 | 1,701 | 40,82,400 | **1,650** | **39,60,000** | | 3.77 % Excess |
| 3 | | 3rd year | 1,748 | 41,95,200 | 1,871 | 44,90,400 | **1,800** | **43,20,000** | | 2.97 % Excess |
| **Total Cost for Operation Cost for 3 Years** | | | | **1,14,79,200** | | 1,22,83,200 | | **1,18,80,000** | | **3.49 % Excess** |

### ***Comprehensive Maintenance Cost–(B)***

| S. No. | Description | Year | Estimated value (Rs.) (Excl. GST) | | Quoted by M/s. Dharshan Dredging and constructions Pvt. Ltd. (Excl GST) | | Quoted by M/s. N. Mohamed Jamaluddin. (Excl GST) | | L1 Bidder | L1 Rate Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Comprehensive Maintenance Cost per day (In Rs.) | Total Comprehensive Maintenance (300 days) (in Rs.) | Comprehensive Maintenance Cost per day (In Rs.) | Total Comprehensive Maintenance (300 days) (in Rs.) | Comprehensive Maintenance Cost per Day (In Rs.) | Total Comprehensive Maintenance Cost (300 days) (in Rs.) | | |
| 1 | Comprehensive Maintenance cost per day | 1st year | 24,400 | 73,20,000 | 26,108 | 78,32,400 | **25,000** | **75,00,000** | M/s. N. Mohamed Jamaluddin | 2.46 % Excess |
| 2 | | 2nd year | 26,840 | 80,52,000 | 28,719 | 86,15,700 | **28,000** | **84,00,000** | | 4.32 % Excess |
| 3 | | 3rd year | 29,524 | 88,57,200 | 31,591 | 94,77,300 | **32,000** | **96,00,000** | | 8.39 % Excess |
| **Total Cost for Comprehensive Maintenance for 3 Years** | | | | **2,42,29,200/-** | | 2,59,25,400 | | **2,55,00,000** | | 5.24 % Excess |

**மேற்கண்ட அட்டவணையின்படி, ஒரு ஆம்பிபியன் உபகரணத்தை** *(Amphibian Equipment - Water Master Classic IV C4097)* **3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகையில்** *(A + B)* **குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.** *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* **தகுதியுடைய** *(L1)* **ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரர் வழங்கியுள்ள மொத்த தொகை விவரம் பின்வருமாறு:**

| *Operation and Comprehensive Maintenance of 1 No of Amphibian Equipment for a period of 3 Years (Water Master Classic IV C4097)* | | | | |
|---|---|---|---|---|
| *Name of the Company* | *Operation Cost (Exclu. GST) in. Rs* | *Maintenance Cost (Exclu. GST) in. Rs* | *Operation and Comprehensive Maintenance (Exclu.GST) in. Rs* | *Remarks* |
| *M/s. Dharsan Dredging Constructions Pvt Ltd.,* | 1,22,83,200/- | 2,59,25,400/- | 3,82,08,600/- | |
| *M/s. N.Mohamed Jamaluddin* | **1,18,80,000/-** | **2,55,00,000/-** | **3,73,80,000/-** | **4.68% Excess** |

திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள வழங்கிய மொத்த தொகை ரூ.*3,73,80,000/- (Exclu GST)* என குறிப்பிட்டுள்ளனர். இது ஒப்ப தொகை ரூ.3,57,10,000/-ஐ காட்டிலும் 4.68% கூடுதலாகும்.

எனவே, இந்நிறுவனத்தாரை விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி *11.02.2023* நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டது, திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தார் தங்களது *11.02.2023* நாளிட்ட கடிதம் வாயிலாக விலைகுறைப்பு செய்து வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

| Description | Year | Quoted by M/s. N.Mohamed Jamaluddin. (Excl GST) Rates Quoted after Negotiation | | | Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|
| | | Operation Cost per Hour (In Rs.) | Operation Cost per day (8 Hrs Shift) | Total Operation Cost (300 days) (in Rs.) | |
| Operation Cost | 1st year | **1,416** | **11,328** | **33,98,400** | 2.01 % Less |
| | 2nd year | **1,558** | **12,464** | **37,39,200** | 2.01 % Less |
| | 3rd year | **1,715** | **13,720** | **41,16,000** | 1.89 % Less |
| **TOTAL** | | | | **1,12,53,600** | **1.97 % Less** |
| Comprehensive Maintenance cost | 1st year | **Rs.23,912 per day** | | **71,73,600** | 2.00 % Less |
| | 2nd year | **Rs.26,303 per day** | | **78,90,900** | 2.00 % Less |
| | 3rd year | **Rs.28,935 per day** | | **86,80,500** | 2.00 % Less |
| **TOTAL** | | | | **2,37,45,000** | **2.00 % Less** |
| **TOTAL O & M Cost for a period of 3 years.** | | | | **3,49,98,600/-** | **1.99 % Less** |

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097) 3* வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கு இறுதி விலைப்புள்ளியான ரூ.1,12,53,600/- *(Exclu GST)* மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு இறுதி விலைப்புள்ளியான ரூ.2,37,45,000/- *(Exclu GST)* என மொத்தம் ரூ.3,49,98*,600/- (Exclu GST)* வழங்கியுள்ளார். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.3,49,98,600/- *(Exclu GST)* ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.3,57,10,000/- *(Exclu GST)*ஐ விட (-) 1.99% குறைவாகும். எனவே, திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்று, இந்நிறுவனத்தார் மூலம் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097) 3* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.3,4*9,98,600/- (Exclu GST)* மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுமத்தின் 14.02.2023 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது. அதன்படி, திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தாரிடமிருந்து ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic IV C4097) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அளித்துள்ள இறுதி மொத்த தொகை ரூ.3,49,98,600/- க்கு *(Exclu GST)* (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூறு மட்டும்) பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-*41*-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-*80-03*-00 என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

எனவே,

1. ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணத்தை (*Amphibian Equipment - Water Master Classic IV C4097*) 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள். *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தார் வழங்கியுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்கவும்,

| | Year | Operation Cost per Hour (In Rs.) (Excl. GST) | Operation Cost per day (8 Hrs Shift) (In Rs.) (Excl. GST) | Total Operation Cost (300 days) (in Rs.) (Excl. GST) |
|---|---|---|---|---|
| **Operation Cost** | 1st year | **1,416** | **11,328** | **33,98,400** |
| | 2nd year | **1,558** | **12,464** | **37,39,200** |
| | 3rd year | **1,715** | **13,720** | **41,16,000** |
| **TOTAL** | | | | **1,12,53,600** |
| **Comprehensive Maintenance cost** | **Year** | **Maintenance Cost per Day (in Rs) (Excl. GST)** | | **Total Maintenance Cost (300 days) (in Rs.) (Excl. GST)** |
| | 1st year | **Rs.23,912 per day** | | **71,73,600** |
| | 2nd year | **Rs.26,303 per day** | | **78,90,900** |
| | 3rd year | **Rs.28,935 per day** | | **86,80,500** |
| **TOTAL** | | | | **2,37,45,000** |
| **TOTAL O & M Cost for a period of 3 years.** | | | | **3,49,98,600/-** |

2. இவ்வுபகரணத்தினை 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவாளர்கள் *N.Mohamed Jamaluddin (Hiring Contractor for Dredging Equipment)* நிறுவனத்தார் மேற்கண்ட அட்டவணையின்படி வழங்கியுள்ள இறுதி ஒப்பத் தொகை ரூ.3,49,98,600/- *(Exclu. GST)* (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூறு மட்டும்)ஐ ஏற்று இந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,
3. ஒப்ப விதியின்படி ஒவ்வொரு மாதத்திற்கும் இயந்திரம் முறையே இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டதற்கான சம்மந்தப்பட்ட அலுவலர்களின் சான்றுடன் மாதாந்திர பட்டியினை ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்று தீர்வு செய்யவும்,
4. இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையில் 2% தொகையினை பாதுகாப்புத் தொகையாக ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
5. இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ளும் சமயத்தில் அமலில் உள்ள *GST* அடிப்படையில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மாதாந்திர பட்டித் தொகை தீர்வு செய்யவும்,
6. இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திரப் பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40.41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-*80-03*-00 என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 072/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.58/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**இ.பொ.து.ந.க.எண்.எம்.1/0887B/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:145/2023** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158)* 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது - மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். *Dharshan Dredging and Constructions Pvt. Ltd., (Authorized dealer for Equipment Manufacturer M/s Aquamec, Finland)* அவர்களுக்கு இப்பணிக்கான ஒப்பத்தினை வழங்கஅனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாநகர எல்லைக்குட்பட்ட நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் இயந்திர பொறியியல் துறை மூலம் சிறப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, *3.5* மீட்டருக்கு மேல் அகலமாக உள்ள நீர் வழித்தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக கூடுதலாக ஒரு ஆம்பிபியன் உபகரணம் *Amphibian Equipment 2019*ஆம் ஆண்டு *M/s Aquamec Finland* நிறுவனத்தாரிடமிருந்து அவர்களது அங்கீகரிக்கப்பட்ட இந்திய விற்பனையாளரான *M/s. Dharsan Dredging & Construction, pvt ltd* அவர்கள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது.

இந்த ஆம்பிபியன் உபகரணமானது உயர் தொழில் நுட்ப அம்சங்கள் கொண்டதால் இவற்றை கையாள பெருநகர சென்னை மாநகராட்சியில் உயர் தொழில் நுட்பம் கொண்ட உபகரணத்தினை இயக்கி பராமரிப்பதற்கு திறன்மிகு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தொய்வு இல்லாமல் கால்வாய்களில் தூய்மை பணிகளை மேற்கொள்ள இவ்வுபகரணத்தை கொள்முதல் செய்யும் பொழுது உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவில் உள்ள தகுதியான நிறுவனம் மூலம் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (டீசல் தவிர்த்து) பணியுடன் கொள்முதல் செய்யப்பட்டது.

அதற்கான விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மன்றத்தீர் மான எண். | பொருள் | உற்பத்தியாளர் விவரம் | உபகரண மாதிரி விவரம் | உபகரண எண். | அங்கீகரிக்கப்பட்ட இந்திய நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| *1* | *192/2019* நாள். *09.03.2019* | ஒரு எண்ணிக்கை ஆம்பிபியன் உபகரணம் ஒரு வருடத்திற்கு இ(ம)ப பணியுடன் கூடிய ஒப்பந்தம் | *M/s. Aquamec Finland Ltd.,* | *Water master Classic V* | *C4158* | *M/s. Dharsan Dredging & Constructions Pvt. Ltd.,* |

இந்நிலையில், தற்போது மேற்குறிப்பிட்டுள்ள ஆம்பிபியன் *(Classic V C4158)* உபகரணத்தின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளது. மேலும், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நீர்நிலைகளை வருகிற பருவமழை காலத்திற்குள் சுத்தப்படுத்தி மழைக்காலங்களில் நீர்நிலைகளின் நீரோட்ட திறனை அதிகப்படுத்துவதற்கு உபகரணத்தின் பணியை முழு வீச்சில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்த ஆம்பிபியன் உபகரணமானது *(Classic V C4158)* வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது இந்த வகையான உபகரணங்களை இயக்குதலில் முன் அனுபவம் பெற்றுள்ள பணியாளர்களை நியமிப்பது மற்றும் பராமரிப்பதற்கு தேவையான உபகரண உதிரிபாகங்களை வெளிநாட்டில் இருந்து கொள்முதல் செய்ய வேண்டியது ஆகியவற்றினை கருத்தில் கொண்டு ஆம்பிபியன் உபகரணத்திற்கான (*Classic V C4158)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு

பணிகளை (டீசல் தவிர்த்து) மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பம் கோரி தகுதியான ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,47,20,000/- *(Excl GST)* க்கு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 04.06.2022 தேதியிட்ட ஆணை பெறப்பட்டு மன்ற தீர்மான எண்.190/2022, நாள்.28.06.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் *(Amphibian Water Master Classic V C4158)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி | இயக்குதல் பணிக்கான தொகை (ஒரு மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) (அ) | பராமரிப்பு பணிக்கான தொகை (நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) (ஆ) | இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை (நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு *(GST* தவிர்த்து)) | ஒப்பத்திற்கான தோராய மொத்த தொகை (அ(*X8*) + ஆ) *X 300* |
|---|---|---|---|---|---|
| *1* | முதலாம் ஆண்டிற்கான தொகை | *1,445* | *23,400* | *=((1,445 X 8) +23,400) =34,960.* | *= 1,04,88,000/-* |
| *2* | இரண்டாம் ஆண்டிற்கான தொகை | *1,590* | *25,740* | *=((1,590 X 8) +25,740) =38,460* | *= 1,15,38,000/-* |
| *3* | மூன்றாம் ஆண்டிற்கான தொகை | *1,748* | *28,314* | *=((1,748 X 8) +28,314) =42,298* | *= 1,26,89,400/-* |
| மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை *(GST* தவிர்த்து) | | | | | ரூ. *3,47,15,400/-* |
| | | | | | **ரூ. *3,47,20,000/-*** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் இப்பணிக்கான ஒப்பம் 12.07.2022 அன்று கோரப்பட்டு 26.08.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத்தில் எந்த ஒப்பந்ததாரரும் பங்கு பெறாத காரணத்தால் தலைமை பொறியாளர் (இ/தி.க.மே) அவர்களின் 29.08.2022 தேதியிட்ட அனுமதி பெற்று குறுகிய கால மின்னணு ஒப்பம் 30.08.2022 அன்று கோரப்பட்டது. இவ்வொப்பத்திற்கான முந்தைய கூட்ட நடவடிக்கையில் ஒப்பந்ததாரரின் கோரிக்கைகிணங்க ஒப்பம் ஒத்தி வைக்கப்பட்டு இறுதியாக 02.12.2022 அன்று திறக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட 2 நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. *M/s. Dharshan Dredging and Constructions Pvt Ltd., Authorised Dealer of Manufacturer, M/s. Aquamec. Finland*
2. *M/s. N.Mohamed Jamaluddin, Hiring Contractor of Dredging Equipment.*

மேற்கண்ட 2 நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்திருந்ததால், இந்நிறுவனங்களின் ஒப்பங்கள் ஏற்கப்பட்டு, இந்நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் 10.12.2022 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

| *Operation and Comprehensive Maintenance of 1 No of Amphibian Equipment for a period of 3 Years (Water Master Classic V C4158)* | | | | |
|---|---|---|---|---|
| *Name of the Company* | *Operation Cost (Exclu. GST) in. Rs* | *Maintenance Cost (Exclu. GST) in. Rs* | *Operation and Comprehensive Maintenance (Exclu.GST) in. Rs* | *Remarks* |
| *M/s. Dharsan Dredging Constructions Pvt Ltd.,* | **1,28,64,000/-** | **2,60,22,000/-** | **3,88,86,000/-** | **L1** |
| *M/s. N.Mohamed Jamaluddin* | 1,33,20,000/- | 2,69,55,000/- | 4,02,75,000/- | |

மேற்கண்ட அட்டவணையின்படி, ஒரு ஆம்பிபியன் *(Amphibian Equipment - Water Master Classic V C4158)* உபகரணத்தை 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகையில் *(A + B)* குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* தகுதியுடைய *(L1)* ஒப்பந்ததாரர் ஆவார்.

திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடிய பணி மேற்கொள்ள வழங்கிய மொத்த தொகை ரூ.3,88,86,000/- *(Exclu GST)* குறிப்பிட்டுள்ளனர். இது ஒப்பத் தொகை ரூ.3,47,20,000/- காட்டிலும் 12.00 % கூடுதலாகும்.

எனவே, இந்நிறுவனத்தாரை, விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி *10.12.2022* நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டது, திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* நிறுவனத்தார் தங்களது *16.12.2022* நாளிட்ட கடிதம் வாயிலாக விலைகுறைப்பு செய்து வழங்கியுள்ளார் அதன் விவரம் பின்வருமாறு:

| Description | Year | Quoted by M/s. Dharshan Dredging and Constructions Pvt. Ltd.,. (Excl GST) Rates Quoted after Negotiation | | | Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|
| | | Operation Cost per Hour (In Rs.) | Operation Cost per day (8 Hrs Shift) | Total Operation Cost (300 days) (in Rs.) | |
| Operation Cost | 1st year | 1,610 | 12,880 | 38,64,000 | 11.42 % Excess |
| | 2nd year | 1,770 | 14,160 | 42,48,000 | 11.32 % Excess |
| | 3rd year | 1,850 | 15,600 | 46,80,000 | 11.56 % Excess |
| TOTAL | | | | 1,27,92,000 | 11.44 % Excess |
| Comprehensive Maintenance cost | 1st year | Rs. 25,950 Per day | | 77,85,000 | 10.90 % Excess |
| | 2nd year | Rs. 28,450 Per day | | 85,35,000 | 10.53 % Excess |
| | 3rd year | Rs. 31,450 Per day | | 94,35,000 | 11.08 % Excess |
| TOTAL | | | | 2,57,55,000 | 10.84 % Excess |
| TOTAL O & M Cost for a period of 3 years. | | | | 3,85,47,000 | 11.02 % Excess |

இந்நிறுவனத்தாருக்கு, மேலும் விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி 16.12.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர்கள். M/s. Dharshan Dredging and Constructions Pvt. Ltd., நிறுவனத்தார் அவர்கள் 19.12.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக தாங்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதாகவும் உதிரி பாகங்கள் விலை, பணியாளர்களின் சம்பளம் ஆகியவற்றில் ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக தாங்கள் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

திருவாளர்கள். *M/s. Dharshan Dredging and Constructions Pvt. Ltd.,* நிறுவனத்தார் அவர்கள் அளித்துள்ள இறுதி விலைப்புள்ளியானது மதிப்பீட்டை விட 11.02% கூடுதலாக உள்ளதால், இந்த ஒப்பத்தினை ரத்து செய்ய மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.து) அவர்களின் 19.12.2022 நாளிட்ட ஆணை பெற்று ஒப்பம் ரத்து செய்யப்பட்டது. பணியில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு குறுகிய கால மறு மின்னனு ஒப்பம் கோர தலைமை பொறியாளர் (இ/தி.க.மே.து) அவர்களின் 09.01.2023 நாளிட்ட ஆணை பெற்று மறு மின்னனு ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப அறிவிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்திமலர், ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேட்டில் வெளியிடப்பட்டது. மின்னனு ஒப்பம் 03.02.2023 அன்று திறக்கப்பட்டது.

இதில் கீழ்கண்ட 2 நிறுவனங்கள் ஒப்ப வைப்பு தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. *M/s. N.Mohamed Jamaluddin ( Hiring Contractor for Dredging Equipment)*
2. *M/s. Dharsan Dredging and Construction Pvt Ltd( Authorized Dealer of Equipment Manufacturer ,M/s Aquamec Finland)*

மேற்கண்ட 2 நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்திருந்ததால், இந்நிறுவனங்களின் ஒப்பங்கள் 03.02.2023 அன்று ஏற்கப்பட்டு, இந்நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் 11.02.2023 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

## ***Rates Quoted in Tender - Operation Cost - (A)***

| S. No. | Description | Year | Estimated value (Rs.) (Excl. GST) | | Quoted by M/s. N. Mohamed Jamaluddin (Excl GST) | | Quoted by M/s. Dharshan Dredging and constructions Pvt.Ltd. (Excl GST) | | L1 Bidder | L1 Rate Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **Operation Cost per Hour (In Rs.)** | **Total Operation Cost (@ 8 hrs / day and 300 days) (in Rs.)** | **Operation Cost per Hour (In Rs.)** | **Total Operation Cost (300 days) (in Rs.)** | **Operation Cost per Hour (In Rs.)** | **Total Operation Cost (300 days) (in Rs.)** | | |
| 1 | Operation Cost per hour | 1st year | 1,445 | 34,68,000 | 1,520 | 36,48,000 | **1,490** | **35,76,000** | **M/s. Dharshan Dredging and constructions Pvt.Ltd** | 3.11 % Excess |
| 2 | | 2nd year | 1,590 | 38,16,000 | 1,670 | 40,08,000 | **1,640** | **39,36,000** | | 3.14 % Excess |
| 3 | | 3rd year | 1,748 | 41,95,200 | 1,835 | 44,04,000 | **1,805** | **43,32,000** | | 3.26 % Excess |
| **Total Cost for Operation Cost for 3 Years** | | | | **1,14,79,200** | | 1,20,60,000 | | **1,18,44,000** | | **3.18 % Excess** |

## ***Comprehensive Maintenance Cost–(B)***

| S. No. | Description | Year | Estimated value (Rs.) (Excl. GST) | | Quoted by M/s. N. Mohamed Jamaluddin (Excl GST) | | Quoted by M/s. Dharshan Dredging and constructions Pvt.Ltd. (Excl GST) | | L1 Bidder | L1 Rate Compared with Estimated Rate. (Less or Excess) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **Comprehensive Maintenance Cost per day (In Rs.)** | **Total Comprehensive Maintenance (300 days) (in Rs.)** | **Comprehensive Maintenance Cost per day (In Rs.)** | **Total Comprehensive Maintenance (300 days) (in Rs.)** | **Comprehensive Maintenance Cost per Day (In Rs.)** | **Total Comprehensive Maintenance Cost (300 days) (in Rs.)** | | |
| 1 | Comprehensive Maintenance cost per day | 1st year | 23,400 | 70,20,000 | 24,575 | 73,72,500 | **24,228** | **72,68,400** | **M/s. Dharshan Dredging and constructions Pvt.Ltd** | 3.54 % Excess |
| 2 | | 2nd year | 25,740 | 77,22,000 | 27,000 | 81,00,000 | **26,651** | **79,95,300** | | 3.54 % Excess |
| 3 | | 3rd year | 28,314 | 84,94,200 | 29,730 | 89,19,000 | **29,316** | **87,94,800** | | 3.54 % Excess |
| **Total Cost for Comprehensive Maintenance for 3 Years** | | | | **2,32,36,200** | | 2,43,91,500 | | **2,40,58,500** | | 3.54 % Excess |

மேற்கண்ட அட்டவணையின்படி, ஒரு ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158)* 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகையில் *(A + B)* குறைந்த விலைப்புள்ளி அளித்த **M/s. Dharshan Dredging and Constructions Pvt. Ltd** தகுதியுடைய *(L1)* ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரர் வழங்கியுள்ள மொத்த தொகை விவரம் பின்வருமாறு :

| *Operation and Comprehensive Maintenance of 1 No of Amphibian Equipment for a period of 3 Years (Water Master Classic V C4158)* | | | | |
|---|---|---|---|---|
| *Name of the Company* | *Operation Cost (Exclu. GST) in.Rs* | *Maintenance Cost (Exclu. GST) in.Rs* | *Operation and Comprehensive Maintenance (Exclu.GST) in. Rs* | *Remarks* |
| *M/s. Dharsan Dredging Constructions Pvt Ltd.,* | **1,18,44,000/-** | **2,40,58,500/-** | **3,59,02,500/-** | **3.41% Excess** |
| *M/s. N.Mohamed Jamaluddin* | 1,20,60,000/- | 2,43,91,500/- | 3,64,51,500/- | |

திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள வழங்கிய மொத்த தொகை ரூ. 3,59,02,500/- *(Exclu GST)* என குறிப்பிட்டுள்ளனர். இது ஒப்பத்தொகை ரூ.3,47,20,000/- காட்டிலும் *3.41 %* கூடுதலாகும்.

எனவே, இந்நிறுவனத்தாரை விலைக்குறைப்பு செய்து வழங்க கோரி *11.02.2023* நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டது, திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* நிறுவனத்தார் தங்களது *11.02.2023* நாளிட்ட கடிதம் வாயிலாக விலைகுறைப்பு செய்து வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

| **Description** | **Year** | **Quoted by M/s. Dharshan Dredging and constructions Pvt. Ltd. (Excl GST) Rates Quoted after Negotiation** | | | **Compared with Estimated Rate. (Less or Excess)** |
|---|---|---|---|---|---|
| | | **Operation Cost per Hour (In Rs.)** | **Operation Cost per day (8 Hrs Shift)** | **Total Operation Cost (300 days) (in Rs.)** | |
| **Operation Cost** | 1st year | **1,416** | **11,328** | **33,98,400** | 2.01 % Less |
| | 2nd year | **1,558** | **12,464** | **37,39,200** | 2.01 % Less |
| | 3rd year | **1,715** | **13,720** | **41,16,000** | 1.89 % Less |
| **TOTAL** | | | | **1,12,53,600** | **1.97 % Less** |
| **Comprehensive Maintenance cost** | 1st year | **Rs.22,932 per day** | | **68,79,600** | 2.00 % Less |
| | 2nd year | **Rs.25,225 per day** | | **75,67,500** | 2.00 % Less |
| | 3rd year | **Rs.27,748 per day** | | **83,24,400** | 2.00 % Less |
| **TOTAL** | | | | **2,27,71,500** | **2.00 % Less** |
| **TOTAL O & M Cost for a period of 3 years.** | | | | **3,40,25,100/-** | **2.00 % Less** |

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158) 3* வருட காலத்திற்கு இயக்குதல் பணிக்கு இறுதி விலைப்புள்ளியான ரூ.1,12,53,600/- *(Exclu GST)* மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு இறுதி விலைப்புள்ளியான ரூ.2,27,71,500/- *(Exclu GST)* என மொத்தம் ரூ.3,40,25,*100/- (Exclu GST)* வழங்கியுள்ளார். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.3,40,25,100/- *(Exclu GST)* ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.3,47,20,000/- *(Exclu GST)* ஐ விட *(-) 2 . 00 %* குறைவாகும். எனவே, திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd.,* வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்று, இந்நிறுவனத்தார் மூலம் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை *(Amphibian Equipment - Water Master Classic V C4158) 3* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ. *3,40,25,100/- (Exclu GST)* மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுமத்தின் 14.02.2023 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது. அதன்படி, திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd., (Authorized dealer for Equipment Manufacturer, M/s Aquamec, Finland* நிறுவனத்தாரிடமிருந்து ஒரு

எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை (*Amphibian Equipment - Water Master Classic V C4158) 3* வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அளித்துள்ள இறுதி மொத்த தொகை ரூ.3,40,25,100/- *(Exclu. GST)* (ரூபாய் மூன்று கோடியே நாற்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூறு மட்டும்) க்கு பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-*41*-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-*80-03*-00 என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

எனவே,

1. ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணத்தை (*Amphibian Equipment - Water Master Classic V C4158*) 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd., (Authorized dealer for Equipment manufacturer, M/s Aquamec, Finland* நிறுவனத்தார் வழங்கியுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்கவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| **Operation Cost** | **Year** | **Operation Cost per Hour (In Rs.) (Excl. GST)** | **Operation Cost per day (8 Hrs Shift) (In Rs.) (Excl. GST)** | **Total Operation Cost (300 days) (in Rs.) (Excl. GST)** |
| | 1st year | **1,416** | **11,328** | **33,98,400** |
| | 2nd year | **1,558** | **12,464** | **37,39,200** |
| | 3rd year | **1,715** | **13,720** | **41,16,000** |
| **TOTAL** | | | | **1,12,53,600** |
| **Comprehensive Maintenance cost** | **Year** | **Maintenance Cost per Day (in Rs)** | | **Total Maintenance Cost (300 days) (in Rs.) (Excl. GST)** |
| | 1st year | **Rs.22,932 per day** | | **68,79,600** |
| | 2nd year | **Rs.25,225 per day** | | **75,67,500** |
| | 3rd year | **Rs.27,748 per day** | | **83,24,400** |
| **TOTAL** | | | | **2,27,71,500** |
| **TOTAL O & M Cost for a period of 3 years.** | | | | **3,40,25,100/-** |

2. இவ்வுபகரணத்தினை 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவாளர்கள். *Dharshan Dredging and Constructions Pvt Ltd., (Authorized dealer for Equipment manufacturer, M/s Aquamec, Finland* நிறுவனத்தார் மேற்கண்ட அட்டவணையின்படி வழங்கியுள்ள இறுதி ஒப்பத் தொகை ரூ.3,40,25,100/- *(Exclu. GST)* (ரூபாய் மூன்று கோடியே நாற்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூறு மட்டும்)ஐ ஏற்று இந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,
3. ஒப்ப விதியின்படி ஒவ்வொரு மாதத்திற்கும் இயந்திரம் முறையே இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டதற்கான சம்மந்தப்பட்ட அலுவலர்களின் சான்றுடன் மாதாந்திர பட்டியினை ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்று தீர்வு செய்யவும்,
4. இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையில் 2% தொகையினை பாதுகாப்புத் தொகையாக ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
5. இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ளும் சமயத்தில் அமலில் உள்ள *GST* அடிப்படையில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மாதாந்திர பட்டித் தொகை தீர்வு செய்யவும்,

6. இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பணிக்கான செலவீனத்தினை இயந்திரப் பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40.41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-*80-03*-00 என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 073/2023, நாள்.21.02.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.59/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**இ.பொ.து.ந.க.எண்.பி5 / 35 / 2023**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 20.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:146/2023** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி – இயந்திர பொறியியல் துறை - வட சென்னை வாகன பணிமனை (மண்டலம் 1முதல் 5) - *2023*-24 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன காப்பீடு புதுப்பிக்க கனரக / இலகுரக / உபகரணம் மற்றும் BOV வாகனங்களின் வாகன காப்பீடு புதுப்பித்தல் – மத்திய அரசின் கீழ் இயங்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பணி மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் மண்டலம் 1 முதல் 5 வரையுள்ள லாரி நிலையங்கள் மூலமும், வட சென்னை பிரதான பணிமனை மூலமும் மொத்தம் 250 எண்ணிக்கையிலான பல்வேறு பயன்பாட்டிற்கான கனரக / இலகுரக வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை துப்புரவு பணி, கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி மற்றும் தண்ணீர் வாகனங்கள், நாய்பிடி வாகனங்கள், மாடுபிடி வாகனங்கள் என பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர மண்டலம் 4 மற்றும் 5 ஆகியவற்றில் குப்பைகளை தரம் பிரிப்பது மற்றும் வீட்டுக்கு வீடு குப்பை சேகரிப்பு பணிக்கென மொத்தம் 869 BOV வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாகனங்கள் அனைத்திற்காகவும் எடுக்கப்பட்டுள்ள வாகன காப்பீடு ஆண்டிற்கொருமுறை அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை செலுத்தி புதுப்பிக்கப்படவேண்டும்

கடந்த ஆண்டு செலுத்தப்பட்ட வாகனங்களுக்கான காப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் இந்த 2023 - 24 ஆம் நிதி ஆண்டிற்கான வாகன காப்பீட்டுத் தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

பட்டியல்-1

| வாகன விவரம் | வாகன எண்ணிக்கை | கடந்த ஆண்டு செலுத்தப்பட்ட வாகனங்களுக்கான காப்பீட்டுத் தொகை (ரூ.) வரிகள் உட்பட 2022-23 (A) | எதிர்பார்க்கப்படும் கூடுதல் தொகை 20% (B) | 2023-24 நிதியாண்டில் வாகனங்களுக்கான காப்பீட்டிற்கான மொத்தத் தொகை (ரூ.) வரிகள் உட்பட (A+B) | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| கனரக / இலகுரக / உபகரணங்களின் மொத்த எண்ணிக்கை | 250 | 63,56,013.00 | 12,71,202.60 | 76,27,215.60 | ரூ.76,50,000/- |
| BOV வாகனங்கள் | 869 | 13,65,811.00 | | 31,77,933.00 | ரூ. 31,78,000/- |
| மொத்தம் | 1119 | | | | ரூ.1,08,27,933/- |

மேற்கண்ட வாகன எண்ணிக்கைகளின் அடிப்படையில், இந்த வாகனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய 2023-24 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீட்டு தொகை, கணக்கிடப்பட்ட விலை விவர தகவல்களின்படி ரூ.1,08,27,933/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) ஆகும். இந்த காப்பீட்டு புதுப்பித்தல் பணியானது மத்திய அரசின் கீழ் இயங்கும் / மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

இச்செலவீனம் இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனையின் 2023-24 ஆம் நிதி ஆண்டின் கணக்கு எண் 40-41-10, கணக்கு தலைப்பு எண் 220-40-02-00 – வாகன காப்பீடு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டும்.

வாகனங்களின் காப்பீட்டு முடிவு தேதிகளின் அடிப்படையில், வாகனங்கள் முறைப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் அரசின் கீழ் இயங்கும்/மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் ஓராண்டிற்கான காப்பீட்டு விலைப்புள்ளிகளை பெற்று, அதில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஒப்புதல் பெற்று அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்குவதுடன், அந்நிறுவனம் கேட்கும் தொகைக்கு முன்பணம் பெற்றுத் தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட, அட்டவணை-1ல் குறிப்பிடப்பட்டுள்ள 250 எண்ணிக்கையிலான கனரக / இலகுரக மற்றும் உபகரணங்கள் மற்றும் 869 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் ஆகிய 1119 வாகனங்களுக்கு 2023- 24 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீட்டு புதுப்பித்தல் (மூன்றாம் நபர் காப்பீடு / விரிவானகாப்பீடு) தொகையாக ரூ.1,08,27,933/- ( ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) (வரிகள் உட்பட) அனுமதிக்கவும்,
2. மேற்படி வாகனங்களின் காப்பீட்டு முடிவு தேதிகளின் அடிப்படையில், வாகனங்கள் முறைப்படுத்தப்பட்டு, அதன்அடிப்படையில் அரசின் கீழ் இயங்கும் / மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் ஓராண்டிற்கான காப்பீட்டு விலைப்புள்ளிகளை பெற்று, அதில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம் ) அவர்களின் ஒப்புதல் பெற்று அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் மற்றும் கோரப்படும் தொகையினை முன்பணமாக பெற்று அந்நிறுவனத்திற்கு வழங்கவும்,
3. இச்செலவீனத்தை இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனையின் 2023-24 ஆம் நிதி ஆண்டின் கணக்கு எண் 40-41-10, கணக்கு தலைப்பு எண் 220-40-02-00 – வாகன காப்பீடு தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
4. காப்பீட்டு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை இந்திய அரசு மேற்கொள்வதால், பாதுகாப்பு வைப்புத்தொகை மற்றும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இருந்து நிறுவனத்திற்கு விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“27.02.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.66/2023, நாள்.27.02.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**ம.அ.9ந.க.எண்.இ1/5869 /2022**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 24.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:147/2023** **பொருள் எண்.67**

**ஒப்பம்- பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, வார்டு-123, சி.பி.இராமசாமி சாலையில் உள்ள சமூக நல கூடம் கட்டும் பணிக்கு (தரை தளம் மற்றும் முதல் தளம்) குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்.மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு-123, சி.பி.இராமசாமி சாலையில் உள்ள சமூக நல கூடம் கட்டும் பணிக்கு (தரை தளம் மற்றும் முதல் தளம்) மன்ற தீர்மான எண்.006/2023 நாள்.31.01.2023ல் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-9, வார்டு-123, சி.பி.இராமசாமி சாலையில் உள்ள சமூக நல கூடம் கட்டும் பணி (தரை தளம் மற்றும் முதல் தளம்) |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | முதன்மை செயலாளர் / ஆணையர் அவர்களின் அனுமதி நாள் 20/10/2022 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2022 -2023ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 3,00,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 25219985.55 |
| | (ஆ) எதிர்பாரா செலவு (2.5%) | ரூ. - |
| | (இ) தரக்கட்டுப்பாடு (1.0%) | ரூ. - |
| | (ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%) | ரூ.240417.05 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 4539597.40 |
| | மொத்தம் | ரூ. 3,00,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது /நாள் | பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள் 01.12.2022 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 15.12.2022 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி. |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஐந்து ஒப்பங்கள்இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |
| 11 | ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-? | ஆம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 15.12.2022 அன்று ஐந்து ஒப்பங்கள் பெறப்பட்டன, ஒப்பம் திறக்கப்பட்டு இந்த ஒப்பந்ததாரர்களில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் கோரிய உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால் தகுதியற்ற

ஒப்பந்ததாரர்களாக கருதி அவர்களின் ஒப்பம் நிராகரிப்பட்டு, மீதமுள்ள மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | 2022-2023 பணியின் அலுவலக மதிப்பு (ரூ) (18% ஜி.எஸ்.டி உட்பட) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) (18% ஜி.எஸ்.டி உட்பட) | 2022-2023ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்.மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் | 2,97,59,582.95 | 2,82,74,579.76 | (-) 4.99 % குறைவு |
| 2 | திருவாளர்.முரளி பவுண்டேசன் | 2,97,59,582.95 | 2,82,74,579.76 | (-) 4.99 % குறைவு |
| 3 | திருவாளர். ஸ்ரீ சாய் வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்சன் | 2,97,59,582.95 | 3,21,10,590.00 | (+) 7.90% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்ப புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களான திருவாளர்.மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் மற்றும் திருவாளர்.முரளி பவுண்டேசன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒரே ஒப்ப சதவீதம் குறிப்பிட்டிருந்ததால் விலைக்குறைப்பு கடிதம் அளிக்கக் கோரப்பட்டு 13.02.2023 அன்று இரண்டு ஒப்பந்ததாரர்களிடம் இருந்தும் விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்டது. இதில் திருவாளர்.முரளி பவுண்டேசன் மேலும் விலைக்குறைக்க இயலாது என கடிதம் அளித்துள்ளார் மற்றும் திருவாளர்.மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் (-)5.00% ஒப்பச்சதவீதத்தில் ரூ.2,82,71,603.80/-க்கு பணி செய்ய சம்மதித்து விலைக்குறைப்பு கடிதம் அளித்துள்ளர்.

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்ப புள்ளி அளித்த திருவாளர். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பத் தொகை ரூ. 2,82,71,603.80 (18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி சேர்த்து) (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி ஓராயிரத்து அறுநூற்றி மூன்று மற்றும் எண்பது பைசா மட்டும்) இப்பணியை மேற்கொள்ள திருவாளர். மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என கருதப்படுகிறது .

மேலும், CCMC ACT, 1919 பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9, வார்டு-123, சி.பி.இராமசாமி சாலையில் உள்ள சமூக நல கூடம் கட்டும் (தரை தளம் மற்றும் முதல் தளம்) பணிக்கு,

1. திருவாளர்.மார்ஸ் கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு 2022-2023 ஆண்டின் அலுவலக மதிப்பீட்டை விட (-) 5.00% குறைவான ஒப்பத் தொகை ரூ. 2,82,71,603.80 (18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி சேர்த்து) (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி ஓராயிரத்து அறுநூற்றி மூன்று மற்றும் எண்பது பைசா மட்டும்)க்குஒப்பத்தினை வழங்கவும்,
2. இப்பணிக்கான செலவீனத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**ம.அ.4ந.க.எண்.சி2/0766/2023**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 23.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:148/2023** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் *KDG*ல் துப்புரவு பணி - போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (*NULM*) குழுக்கள் மூலமாக 947 தூய்மை பணியாளர்களை தற்காலிக தொழிலாளர்களாக பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2023 உடன் முடிவடைவதால் மேலும் ஆறு மாத காலம் (01.04.2023 முதல் 30.09.2023 வரை) துப்புரவு பணிகளை மேற்கொள்ள பணி நீட்டிக்க அனுமதி.**

மண்டலம்-4க்குற்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2,846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம், முல்லைநகர் பேருந்து நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக் கழிப்பிடங்கள்(சுலாப்), மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள மண்டலம் – 4, கோட்டம் – 34 முதல் 48 வரை மற்றும் KDGல் பணிபுரியும் 672 நிரந்தர பணியாளர்களில் ஓய்வு, இறப்பு மற்றும் தன் விருப்ப ஓய்வு காரணமாக 34 பணியாளர்கள் போக மீதம் உள்ள 638 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 947 தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க (NULM) பணியாளர்களை மட்டுமே கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்ற தீர்மான எண்.522/2022 நாள்.28.10.2022ல் மண்டலம்-4, துப்பரவுத்துறையில் கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் KDGல் துப்பரவு பணிகள் மேற்கொள்ள 947 தற்காலிக துப்பரவு பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலம் துப்பரவு பணிகள் மேற்கொள்ள 01.10.2022 முதல் 31.03.2023 வரை ஆறு மாத காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

*Hon'ble High Court Order direction on Writ Appeal filed by Greater Chennai Corporation vide No. 1379 of 2022, Dated : 22.12.2022 and certified copy date. 30.12.2022 &* தலைமை பொறியாளர் (தி.க.மே) அவர்களின் 24.01.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் NULM – ஆக மண்டலங்களில் பணிபுரியும் துப்பரவு பணியாளருக்கு உயர்நீதிமன்ற ஆணை ( No. 1379 of 2022)ன்படி 01.01.2023 முதல் ரூ 500/- வீதம் நாள் ஒன்றுக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர் – 4 அவர்களின் 30.01.2023 நாளிட்ட ஒப்புதலில் மேற்கண்ட 947 தற்காலிக துப்பரவு பணியாளர்களின் (NULM) பணிக்காலம் 31.03.2023 அன்றுடன் முடிவடைவதால், மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.04.2023 முதல் 30.09.2023 வரை) துப்பரவு பணியில் ஈடுபடுத்த முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர் – 4 அவர்களின் ஆணை பெறப்பட்டது, இதனை தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **கோட்டம்** | **மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள்** | **தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் விவரம்** | **தேவைப்படும் NULM பணியாளர்கள்** | **தலைமை பொறியாளர் (S.W.M) அவர்களின் சுற்றறிக்கை நாள்:** 24.01.2023 | **தோராய செலவினம் ரூ.** |
| 1 | 34 | 165 | 37 | 108 | ரூ.500/- | **ரூ. 500/-** x 947 (தற்காலிக துப்பரவு பணியாளர்கள்) x 183 நாட்கள் = ரூ. 8,66,50,500/- |
| 2 | 35 | 150 | 50 | 80 | | |
| 3 | 36 | 130 | 25 | 88 | | |
| 4 | 37 | 140 | 30 | 102 | | |
| 5 | 38 | 103 | 37 | 53 | | |
| 6 | 39 | 87 | 39 | 37 | | |
| 7 | 40 | 93 | 46 | 42 | | |
| 8 | 41 | 101 | 57 | 38 | | |
| 9 | 42 | 102 | 65 | 33 | | |
| 10 | 43 | 100 | 39 | 55 | | |
| 11 | 44 | 94 | 26 | 66 | | |
| 12 | 45 | 114 | 33 | 80 | | |
| 13 | 46 | 99 | 7 | 71 | | |
| 14 | 47 | 88 | 42 | 42 | | |
| 15 | 48 | 93 | 61 | 25 | | |
| 16 | KDG | 55 | 26 | 27 | | |
| **TOTAL** | | **1714** | **638** | **947** | | |

எனவே, மண்டலம் - 4, துப்பரவுத்துறை, கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் KDGல் துப்பரவு பணிகள் மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) குழுக்கள் மூலமாக 947 தற்காலிக துப்பரவு பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.04.2023 முதல் 30.09.2023 வரை ஆறு மாத காலத்திற்கு நிர்வாக அனுமதியும், மற்றும்

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-4, துப்பரவுத்துறை, கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் KDGல் மேற்கண்ட துப்பரவு பணிகள் மேற்கொள்ள 947 தற்காலிகமாக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் மூலமாக 01.04.2023 முதல் 30.09.2023 வரை ஆறு மாத காலத்திற்கு எடுத்துக் கொள்ள அனுமதியும், |
| (ஆ) | தலைமை பொறியாளர் (தி.க.மே) அவர்களின் 24.01.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 500/- வீதம் 947 நபர்கள் X 183 நாட்கள் X ரூ. 500/- = ரூ. 8,66,50,500/-க்கு (ரூபாய் எட்டு கோடியே அறுபத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூறு மட்டும்) அனுமதியும். |
| (இ) | துப்பரவு பணியில் ஈடுபட்டு வரும் தற்காலிக தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர் - 4, அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| (ஈ) | தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மண்டல அலுவலர்-4 அவர்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும், |

| | |
|---|---|
| (உ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| (ஊ) | நிதி ஆலோசகர் மூலமாக ரூ. *8,66,50,500/-* (தலைப்பு எண்.*40-41-03 Payment to Casual Staff Conservancy Works* கணக்கு குறியீடு *210-100-601)* நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**S.P.D.C.No B1/01281/2022**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 28.02.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:149/2023** **பொருள் எண்.69**

**Greater Chennai Corporation- Special Project Department –Victoria Public Hall - Tender Called for Conservation, Revitalisation and Seismic Retrofitting of VP Hall under Singara Chennai 2.0 – Technical & Financial Bid Opened – For Tender Approval.**

The conservation, revitalization and seismic retrofitting of Victoria Public Hall (VP Hall), a heritage building located in Zone 5, was taken up as a proposal under the 'Ezhilmigu Chennai' component of Singara Chennai 2.0, vide G.O. (Ms) No. 74, Implementation of Singara Chennai 2.0, MAWS (MC1) Department, dated 28.09.2021. Further, the Project Sanctioning & Monitoring Committee (PSMC) accorded in-principle approval for implementing the project at an estimated cost of Rs. 15 crore, vide minutes of Meeting, Project Sanctioning & Monitoring Committee for Singara Chennai 2.0, dated 11.10.2021.

Following the deliberations of the committee, an EoI was called vide tender notice dated 30.09.2021 and M/s. AbhaNarain Lambah Associates were selected as the consultant and architect to implement the project, vide Resolution No. 892/2021, dated 08.12.2021. Subsequently, a draft Bill of Quantities (BoQ) amounting to Rs. 26.27 crore was presented to the PSMC and given administrative sanction, vide Minutes of Meeting, Project Sanctioning & Monitoring Committee for Singara Chennai 2.0, dated 20.07.2022.

Following which, the building centre and conservation division of the Public Works Department visited the site and recommended a detailed structural assessment for seismic strengthening. In this regard, ANL Associates sub-contracted a team of structural experts from BMS College of Engineering, Bengaluru. The team visited and undertook studies at the site and laboratory tests during the month of September 2022 and has recommended seismic strengthening works since the building is over 100 years old.

In the meanwhile, a multi-stage tender process was initiated on the basis of the draft DPR and BoQ submitted by the consultants. The first stage of the tender, i.e., the Request for Qualification (RfQ) was published on 29.09.2022 with its due date being 10.11.2022. The pre-application meetings were conducted online on 19.10.2022 and in-person on 20.10.2022. The RfQ was opened on 11.11.2022 and two responses were received. Due to the ineligibility of the bidders and less response from the market, the tender was cancelled.

Simultaneously, with the inputs from the structural team and multiple reviews by the department, the revised BoQ was estimated at Rs. 30.61 crore. It included structural strengthening through seismic retrofitting for an estimated amount of Rs. 4.37 crore, and also the earlier estimates for interior works and museum.

The proposal was sent to TUFIDCO for obtaining necessary Administrative Sanctions. In the meantime, in order to validate the estimates prepared by the consultants, the DPR and estimates were sent to the Public Works Department-building centre and conservation division for vetting. PWD had asked for 1% of the project cost to be sanctioned as the fees for reviewing the documents which is in turn incorporated in the revised estimates.

PWD has vetted the DPR and BoQ estimates and suggested a few material changes in the seismic strengthening activities which in turn revises the project cost vide AEE, PWD letter dated.08.12.2022. Also, certain rates used in the BoQ by the consultants were corrected by the PWD department as per their schedule of rates under the building centre and conservation division. Considering all the above changes and suggestions, the revised project cost works out be Rs.32.62 crore based on 2022-23 SoR.

In this regard, the DPR comprising of proposed designs, drawings and BoQ were presented to the Project Sanctioning & Monitoring Committee of the Singara Chennai 2.0 scheme and approval was received vide G.O.(D) No.53, MAWS (MC1) Department, dated 08.02.2023.

In anticipation of the approval, Tender was called for the works on 21.12.2023.

Four Bids were received on the due date 07.02.2023 and the technical bid was opened on 08.02.2023. The bids were technically evaluated, and details of the technical bid are presented below.

| **S.No.** | **Name of the Bidder** | **Qualified / Not Qualified** |
|---|---|---|
| 1 | M/s. Savani Heritage Conservation Private Limited | Technically Qualified |
| 2 | M/s. R.Krishnamurthy & Co | Technically Not Qualified |
| 3 | M/s. Akshar Shilp | Technically Not Qualified |
| 4 | M/s. Ushta Infinity Construction Company Private Limited | Technically Not Qualified |

